www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ஒக்.26–நவ.01,1997
11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 228

## தலைநகரக் குண்டுவெடிப்பு
## காத்திருந்த வாகனம்
## திடுக்கிடும் தகவல்கள்



## க திர்காமர் அமெரிக்கா திர்காமம்





## புதிய தொடர் ஆரம்பம்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## அமெரிக்காவின் நீள மூக்கு

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

'பிள்ளையையும் கிள்ளிவிட்டு
தொட்டிலையும் ஆட்டுவிப்பது!
அமெரிக்காவுக்கு
கை தேர்ந்த கலை!

நம் அயல்நாடுகளான
இந்தியாவையும், பாகிஸ்தானையும்
மோதவைத்தும், மூட்டி விட்டும்
வேடிக்கை பார்ப்பதும்
சாட்சாத் அமெரிக்காதான்!

முன்னொரு காலத்தில்
நாடுகளை நேரடியாகவே
கைப்பற்றி
சுரண்டல் நடத்தப்பட்டது!
அது காலனித்துவம்
என்று அழைக்கப்பட்டது!

இப்போது
நாடுகளைப் பிடிக்காமல்
நாசூக்கான முறையில்
வல்லரசுகள்
தங்கள் சுரண்டலை
நடத்தக் கற்றுக்கொண்டுள்ளன.

இந்த புதிய முறைதான்
நவ காலனித்துவம்
என்று அழைக்கப்படுகிறது!

உள்நாட்டுப் பூசல்களைப்
பயன்படுத்தி,
அந்த நாட்டு அரசுகளுக்கு
கை கொடுத்து
உதவுவது போல தங்கள்
மூக்கை நுழைப்பதும்
நவ காலனித்துவத்தின்
தந்திரங்களில் ஒன்று!

அமெரிக்காவுக்கு
வெகு நீள மூக்கு!
நவ காலனித்துவத்தின்
தலைமையில் இருப்பதற்கு
நீள மூக்கு மிக அவசியம்!

எங்கெல்லாம் பூசல் உண்டு
என்று மோப்பம் பிடித்து,
தரும நியாயம் போதிப்பதுபோல
கைகளை நீட்டவும்
நீள மூக்கு மிக முக்கியம்!

இனப்பிரச்சனை வளர்ந்து
யுத்தமாக பற்றி எரிவதற்கு
எண்ணெய் ஊற்றியதில்
அமெரிக்காவுக்கும் பங்குண்டு!

ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில்
'யுத்தம் என்றால் யுத்தம்
சமாதானம் என்றால் சமாதானம்'
என்று முழங்கிய
தர்மிஷ்டரின் இஷ்டப்படி
ஆயுதங்களை அள்ளிக் கொடுத்த
வள்ளல் அமெரிக்காதான்!

இனக்கலவரத் தீயில்
தமிழ்மக்கள் எரிந்ததும்,
தேர்தல்களில் தமிழ் மக்கள்
வழங்கிய ஜனநாயகத் தீர்ப்புக்களும்,
சாத்வீகப் போராட்டங்களும்
அமெரிக்காவின் கவனத்தை
அப்போது கவரவே இல்லையே!

அரச பயங்கரவாதத்தால்
வடக்கு-கிழக்கு சுடுகாடானபோதும்
அமெரிக்கா முகம் சுளிக்காமல்
ஆயுதம் வழங்கி ஆதரித்ததே!

அன்றே அமெரிக்கா
ஆயுதம் கொடுக்க மறுத்திருந்தால்
இராணுவத்தீர்வில்
இலங்கை அரசு
நம்பிக்கை கொள்ளத் துணிந்திருக்காது!

போதிய ஆயுதம் உண்டு;
பொருளாதார உதவியும் உண்டு;
உலக வல்லரசு நம்பக்கம் உண்டு
என்ற துணிச்சலில்தான்
"போர் என்றால் போர்" என்றனர்!

அமெரிக்காவுக்கு
இன்றைய யுத்தம் தொடர்பாக
கோபம் வர நியாயம் இருக்கிறது!

இலங்கை அரசுக்கு
ஆதங்களும், பயிற்சியும்
வழங்கும் நாடு என்ற ரீதியில்
படையினருக்கு ஏற்படும்
பின்னடைவுகளை
தனக்கு ஏற்படும் பின்னடைவாகவும்
அமெரிக்கா நினைக்கிறது!

அதனால்தான்
இதனை ஒரு
கௌரவப் பிரச்சனையாக
எடுத்துக் கொண்டு
காரியமாற்றத் துணிந்திருக்கிறது!

முன்னர் ஈராக் விவகாரத்தில்
அமெரிக்காவின் நோக்கத்தை
இதே முரசத்தில் கண்டித்திருந்தோம்.

அமெரிக்கா எப்போதுமே
ஆபத்தான சக்தி என்பது
முரசின் கருத்தாகும்!
அதனை அமெரிக்கா
தொடர்ந்து மெய்ப்பித்து வருகிறது!

புலிகளை அமெரிக்கா
தடை செய்துவிட்டது என்பதால்
அமெரிக்காவை உலகத் தர்மவான்
என்பதுபோல இலங்கை அரசு
காண்பிக்க முயல்வது சரியல்ல!

உலகை ஆட்டுவிக்க நினைக்கும்
பொல்லாத வல்லரசை
உடனடி பிரசார இலாபத்துக்காக
உயிர்த் தோழனாக காண்பிப்பது,
தென்னாசியப் பிராந்திய
பாதுகாப்புக்கு மட்டுமல்ல,
இந்தத் தீவின் எதிர்கால
நலன்களுக்கும் ஆபத்தாகிவிடும்!

சர்வதேச நாடுகளை
அனுசரித்துப் போவதற்கும்
அடிபணிந்து செல்வதற்கும்
இடையே வித்தியாசமுண்டு.
புரிய வேண்டிய யாவருக்கும்
புரிந்தால் சரி!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## பகைவர்களை நேசிப்போம்!

அளைப் போதித்த, என்பையும் பிறருக்காய் ஈந்த இயேசுபிரானின் ஒரு போதனைக்குச் சற்று செவிசாய்ப்போம்.

"அயலானுக்கு அன்பு; பகைவனுக்கு வெறுப்பு' என்று சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்கிறேன்: உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்; உங்களைத் துன்புறுத்துபவர்களுக்காக செபியுங்கள். அப்பொழுது வானத்திலுள்ள தந்தையின் மக்களாய் இருப்பீர்கள்!"

எத்தனை பெரிய உண்மை. நடுநிலை நின்று நினைத்துச் சிந்தித்தால் இதன் நற்கருத்து விளங்கும். ஆம். நமக்கு அன்பு செய்பவர்களிடம் மட்டும் அன்பு செய்தால் நமக்குக் கிடைப்பது என்ன? அதைத்தான் நாம் நமது இல்லத்திலேயே செய்கிறோமே. நம்மிடம் நமது கணவன் அல்லது மனைவி அல்லது பிள்ளைகள் அன்பு செய்வதில் என்ன புதுமையுள்ளது?

ஏன்,'இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயம் செய்துவிடல்' என்பதின் உண்மையானபொருள் இயேசு சொல்வதில்தானே தங்கியுள்ளது! ஆம். நமக்கு இன்னா செய்தவர்களை, பகைத்தவர்களை மன்னித்து அவர்களையே நேசிப்பது நமது கடமை. 'பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்' என்பது வேறென்ன?

இங்கு பகைமை அழியும், அன்பு வளரும்; நன்மை விளையும் சமாதானம் மலரும். ஆமாம் பகைவர்களுக்கு நன்மையும் அன்பும் செய்து நானிலத்தை வாழவைப்போம்.

ஏ.பி.வி. கோமஸ்.



## 'தௌபா' செய்வதன் சிறப்புக்கள!

'தௌபா' என்பதற்கு மீளுதல், திரும்புதல் என்பது பொருள். பாவம் செய்த ஒருவர் தான் செய்த பாவத்திற்காக வருந்தி, இனிமேல் அதனைச்செய்வதில்லை என்று உறுதி கொண்டு, அப் பாவச் செய்கையிலிருந்து விலகி இதற்கு முன் செய்த பாவங்களுக்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்பதற்குத் 'தௌபாச் செய்தல்' என்பது பெயர்.

இவ்விதமாகத் தௌபாச் செய்தால், அதனை இறைவன் அங்கீகரித்து மன்னித்து பாவமே செய்யாதவரைப் போலாக்கி விடுவான். எனவே, இத் தௌபா செய்வதன் மகிமை பற்றி பல ஹதீஸ்களும் உள்ளன.

1. பாவத்தை விட்டுத் தௌபாச் செய்தவர் பாவமே இல்லாதவரைப் போலிருக்கிறார்.
2. தௌபாச் செய்த வாலிபரைப் பார்க்கிலும் அல்லாஹ்விற்கு பிரியமானதொரு பொருள் எதுவுமில்லை.
3. ஒவ்வொரு வஸ்த்துவிற்கும் ஒரு யுக்தி இருக்கிறது. பாவங்களுக்கு ஒரு யுக்தி தௌபா ஆகும்.
4. தௌபாச் செய்வது பாவத்தை இடித்துவிடும்.
5. மரணத்திற்கு முன் தௌபாச் செய்வதை அவசரப் படுத்திக் கொள்ளுங்கள்.

தொகுப்பு: செல்வி பௌக்கியா மன்சூர், மருதமுனை-03.

# கவிதைப் போட்டி இல.225

பரிசுக்குரிய கவிதை



## காக்க வாரீர்!

"கன்னத்தில் கன்னம் புதைத்து
களிக்கும் கண்மணிகள் வாழ
கருத்தில்லாப் போர் நிறுத்தி
காக்க வாரீர் ஜெகத்தீரே!"

செ.தாமரைச்செல்வி- ஆரையம்பதி.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### ஆசைத் தம்பி

ஆசைத் தம்பி கண்ணா,
நாட்டு நிலமை என்ன?
காணி, பூமி, வீடு
போனாப் போகட்டும் போடா...
ஒன்றாய் வந்து சேர்ந்தாய்;
அதுவே எமக்குப் போதும்!

ப.தெய்வேந்திரன்-கொழும்பு-15.

### எப்போது தீர்வுவரும்!?

ஒக்டோபர் எட்டு மட்டும்
உமக்குக் கொண்டாட்டம்...!
எட்டு(த்)திக்கும் வேட்டு(க்)கேட்டால்
எமக்குத் திண்டாட்டம்!!
எப்போது தீருமப்பா...
தப்பான போர்த் தாகம்?

எஸ்.மௌனேஷ்- மட்டக்களப்பு.

### புது உறவு

போராட்டம் தருவது
பேரழிவு!
பேரன்பு தருவது
புது உறவு!!

செல்வி பிரிய நேசி-
கருந்துறை (தெற்கு)

### நட்பு!

இதுதான்
மூழ்காத'ஷிப்'

ந.ரதீஸ்வரன்-
தம்பிலுவில்-02.

### பிறந்த நாள் வாழ்த்து!

"வாழ்க பல்லாண்டு என வாழ்த்தும்
கனடா அக்கா, லண்டன் சித்தி,
சுவிஸ் மாமா, ஜேர்மனி அத்தை,
வவுனியா கோழிப்பண்ணை முகாம் அப்பம்மா!"

த.தனேஸ்வரி-கோவில் புதுக்குளம், வவுனியா.

### போலியில் மலர்ச்சி

நாமாக ஒன்றும்
எம்விருப்பில் செய்யவில்லை!
ஏய்ப்பவர்கள் அருகிருந்தால்
எல்லாமே போலிமயம்!
ஆட்டுவிப்பார் கையிலிங்கு
ஆடுகின்ற குரங்கானோம்!
சுயமாக நாம் சிரிக்க
சகுனமின்னும் சரியாயில்லை!

செல்வி எஸ்.பத்மினி- கல்லடி,
மட்டக்களப்பு.

### ஒற்றுமை

கட்டிக்கொண்டோம்
ஒட்டிக் கொண்டோம்
வெட்டிக் கொள்(ல்லா)ளாமல்
தவிர்ப்போமா?

சுபா வரன்-
கண்டி.

### உறவும் பிரிவும்

பிரிந்த உறவுகள் சேர்ந்திடவே
பிணியும், துயரும் போயாச்சு
முடங்கிக் கிடந்த புன்சிரிப்பு
முகம் முழுக்க வந்தாச்சு.

நிஸ்வியா ஸபீர்-மீராவோடை,
வாழைச்சேனை.

### "யுத்தத்தை நிறுத்துங்கள்!"

எங்கள் முகத்தைப் பார்த்தேனும்
உங்கள் துப்பாக்கிகளை தூர வீசுங்கள்;
எங்கள் சிரிப்பைப் பார்த்தேனும்
உங்கள் 'ஷெல்'லடிகளை
விட்டு விடுங்கள்!
எங்கள் அணைப்பைப் பார்த்தேனும்
உங்கள் சினத்தை மறந்து விடுங்கள்!
எங்களுக்காக உங்கள்
யுத்தத்தை நிறுத்துங்கள்!


பஷீரா முஹைடீன்- பாலையூற்று, திருகோணமலை.

### இனவாதம் ஓயட்டும்!

அன்பிலே விளையும் பயிர்
அன்பாலே வளரட்டும்!
இனவாதப் பேய்களே!
இனியேனும் ஓயுங்கள்!

திருமதி ராஜேஸ்வரி கிருஷ்ணன்-
பூவரசன்குளம், வவுனியா.

# கவிதைப் போட்டி இல.228



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 01.11.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.228
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

அதிரடி முரசே!

ரசிகன் தரும் 'கொள்ளைராணி பூலான் தேவி' என்னை மிகவும் கவர்ந்து விட்டது. அதுமட்டுமா? அதிரடி அய்யாத்துரையின் அசத்தலும் கூட.

அ.அச்சுதன், சேனையூர்-06.

"சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி" என்றவாறு காவியுடை தரித்தவர்களுக்கு ஆசை ஏன்? அரசியல் ஏன்? இவர்களால்தான் இன்று நாடு பாழ்படுகிறது! ஆட்சியாளர்கள் சொல்வது ஒன்று செய்வது இன்னொன்றாக இருக்கிறது.

திருமதி ச.கலைவாணி, கம்பளை.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:**

* எஃப்.பாககியநாதன், பொகவந்தலாவ.
* திருமதி நிர்மலா லிங்கன், கல்முனை
* பத்மராஜ் பிரேமானந்த், கொழும்பு-11.
* எஸ்.பி.எட்வின், ஜெர்மனி.
* ஜெஸ்மின் நிஸ்தார், மாவனல்லை.
* மகேஸ்வரி ராமதாஸ், வத்தேகம.
* பபி, துனுக்காய்.
* எம்.முஸம்மில், குவைத்.
* எஸ்.யுவராணி, பிட்டகந்தை.
* எம்.மதனிஸ்மாயில், கொழும்பு.
* எம்.எம்.முகம்மது ஸாகிர், சாய்ந்தமருது-10.
* திருமதி புஷ்பலதா தவராஜா, செட்டிபாளையம்.
* அவுப், மாத்தளை.
* ஏ. றினோஸியா, சென்றல் பிளேஸ், திஹாரிய.
* ஷாமிலா அஸ்ரப்கான், குருநாகல்.
* ஏ.சி.பிறாஸ், அக்கரைப்பற்று.
* நடராஜி பாலசுப்பிரமணியம், நானுஓயா.
* எஸ்.சங்கரலிங்கம், திருப்பழுகாமம்.
* திருமதி காஜர் உம்மா, தெல்தோட்டை.
* ந.விக்னசாந்தி, பண்டாரவளை.
* பி.கிறிஸ்ரி அன்ரனி, மட்டக்களப்பு.
* ஏ.செபஸ்தியன், உக்குவளை.
* அஸ்லா, பர்வீன், நிந்தவூர்.
* க.குணராசா, கனடா.
* ஆ.குமார், இலண்டன்.
* சி.கிருஷ்ணபவான், ஆரையம்பதி-02.
* ம.சுரேந்திரா, சுவிற்ஸர்லாந்து.
* ஏ.அருட்செல்வன், அமெரிக்கா.
* எம்.குகபாலன், ஃபிரான்ஸ்.
* எஸ்.ராதாகிருஷ்ணன், கண்டி.
* உ.லோகநாதன், கனடா.

சமீபத்தில் அம்பாறை மாவட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட அப்பாவி தமிழ் மக்களின் படுகொலைகள் கனடா வாழ் இலட்சக்கணக்கான தமிழ் மனங்களை வேதனையில் தோய்த்து எடுத்து விட்டது. இவை மட்டுமல்ல இதற்கு முன்பும் பல இடங்களில் தமிழ் மக்களின் படுகொலை சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. போரில் மக்கள் பாதிக்கப்படுவதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அது தமிழ் மக்களாயினும் சரி-சிங்கள முஸ்லிம் மக்களாயினும் சரி மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.


மற்றுமொரு விடயம்- தமிழ் கட்சிகள் எப்போதும் பாரபட்சமற்ற விசாரணை கமிஷன் வேண்டும் என்று கேட்டுக் கொல்(ள்)லாமல் வேறு ஏதாவது நிரந்தரமான மாற்று கோரிக்கைகளை முன்வைத்து அல்லது கையாண்டு, இவ்வகையான சம்பவங்கள் மீண்டும் மீண்டும் தொடராமல் தடுக்க நடவடிக்கை எடுப்பார்களேயானால் வாழ்த்தலாம்! பாராட்டலாம்! பண்பாடலாம்!

எஸ்.விக்கி, கனடா.

முரசில் வெளிவரும் அத்தனை அம்சங்களும் வரவேற்கத்தக்கன. பக்கிங்ஹாம் அரண்மனை வாழ்க்கை பகட்டானதென நினைத்தவர்களுக்கு முரசின் மூலம் வெளியாகும் டயானாவின் 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' தெளிவாக உண்மை விளம்பும் விதம் அருமை. புவனாவுக்குப் பாராட்டுக்கள்.

'காதில பூ கந்தசாமி'யார் தந்த பூதத்துடனான சம்பாஷனை ரசனையூட்டியது. மொத்தத்தில் வெளியான அத்தனை அம்சங்களுடன், சினிமா பகுதியில் நடிகையர் திலகத்தைப்பற்றிய தகவல் மகுடம் வைத்தாற் போலிருந்தது.

உன்னஸ்கிரிய சதாசிவம்,
மொரட்டுவ.



அன்பான முரசே!

வாரந்தோறும் உன் இதழை வரவேற்று, வாஞ்சையுடன் சுவைக்கின்ற வாசகியிவள். வருகின்ற ஒவ்வொரு புதிய விடியலிலும்-நீ தருகின்ற தலைப்பு யாவும் தனிச்சுவையே! கொட்டுகின்ற தமிழ் முரசே-நீ வாழ்ந்திடனும் வளமுடனே நிரந்தரமே!

தயாளினி பரமசாமி, நுவரெலியா.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும் தினமுரசு வாரமலர், த.பெ.இ.- 1772, கொழும்பு.

## மௌன விமர்சனம்

அரசின் தீர்வு யோசனைகள் பற்றி 'இராஜதந்திரி' அலசல் சிறப்பு. அம்பாறையை மட்டுமன்றி, எல்லை ஆராய்ச்சிகள் மூலம் திருமலை, வன்னிப் பகுதிகளிலும் நிலம் பறிபோக இருப்பதை 'முரசு' மட்டுமே சுட்டிக் காட்டியது. ஏனோ தெரியவில்லை-சில விமர்சகர்கள் இம்முறை மௌனமாக இருக்கின்றனர். இக் கட்டத்தில் 'முரசு' நேர்மையோடு அலசியதைப் பாராட்டலாம்.

பி.எம்.ராஜேந்திரம், திருமலை

## இணைப்பா? பிரிப்பா?

வடக்கு-கிழக்கு இணைப்புக்கு கருத்துக் கணிப்பு என்று கூறுவதன் மூலம், நம் பாரம்பரியப் பிரதேசத்தை நாமே பிரிப்பதாகிவிடும். அதிரடி அய்யாத்துரையார் கூறியது சரிதான். பிரிக்க நினைப்போரை, இணைக்க விரும்பி முயற்சி செய்பவர்கள்போல படம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். வரலாற்று ரீதியான வடக்கு-கிழக்கு இணைந்துதான் இருக்கிறது. இந்திய-இலங்கை ஒப்பந்தமும், அதற்கு முன்பாக தென்னிலங்கை அரசுகளும்தான் 'பிரிப்பு'ப் பிரச்சனை எழுப்பின. ஆகவே, இணைந்தே இருக்கும் வடக்கு-கிழக்கில் இணைப்புக்கான முயற்சியா? பிரிப்புக்கான முயற்சி என்று கூறுவதே பொருத்தம்.

மா.சிவசுப்பிரமணியம், செங்கலடி.

## மாபெரும் பங்களிப்பு

இனிய முரசே!

இன்றைய காலகட்டத்தில் கூட்டணியினர் வகித்துவரும் பங்களிப்பு காலத்தால் அழியாதது. தமிழ் பேசும் மக்களை அடிமைகளாய் வாழவைக்க கூட்டணித் தலைவர்கள் படும் கஷ்டங்கள் இருக்கிறதே. அப்பப்பா! எப்படிப் புகழ்ந்தாலும் ஈடாகாது! தமிழர் வியாபாரக் கூட்டணி என்பதை காட்டிவிட்டார்கள்.

கே.சௌந்தரநாயகம், வவுனியா.

## எரியிற வீட்டில்

விடுதலைப் புலிகள் சர்வதேச உறவுகள் விவகாரங்களில் கைக்கொண்ட அணுகுமுறைகள் சில பிழையான கோணத்திலேயே இருந்தன. குறிப்பாக, இந்திய அரசோடு கையாண்ட அணுகுமுறைகளைக் கூறலாம். ஆனால் அமெரிக்காவை புலிகள் இயக்கத்தினர் அனுசரித்துப் போக வேண்டும் என்று ஏனைய தமிழ்க் கட்சிகள் கூறுவதும்கூட தவறான அணுகுமுறைதான். அமெரிக்காவால் இலங்கைக்கு மட்டுமன்றி, இந்தப் பிராந்தியத்திற்கே கேடுதான் ஏற்படும். எரியிற வீட்டில் பிடுங்குவதே அமெரிக்காவின் கொள்கை.

வி.ஜோசப், கொழும்பு-09.

## பிரபஞ்சனுக்கு விருது

'கனவு மெய்ப்பட வேண்டும்' நிறைவான கதையாக அமைந்தது. முரசில் அத் தொடர் வெளியானபோது தமிழ்நாட்டில் சிறந்த எழுத்தாளருக்கான விருதையும் பிரபஞ்சன் பெற்ற செய்தி அறிந்தேன். 'முரசு' அதனைக் குறிப்பிடத் தவறிவிட்டதே!

செல்வி எஸ்.சுமித்திரா, கோட்டைக் கல்லாறு.



படிப்பகம்

www.padippakam.com

## புல்மோட்டையில் பாரிய கடற் சமர்
### டோராவுடன் மோதியது கரும்புலிப் படகு

திருமலைப் புல்மோட்டை கடற்பரப்பில் 18.10.97 அன்று சனிக்கிழமை இரவு பாரிய கடற்சமர் இடம்பெற்றது.

கடற்படையினரின் ரோந்து அணிக்கும், கடற்புலிகளுக்கும் இடையே முதலில் மோதல் ஆரம்பித்தது. சமர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது கடற்படையினரின் சண்டைப் படகுகளும் உதவிக்கு விரைந்தன.

அதிகாலை 2 மணிவரை கடற்படையினருடன் சமரில் ஈடுபட்ட கடற்புலிகள் தமது தளத்துக்கு செய்தி அனுப்பினார்கள். அதனையடுத்து கடற் புலிகளின் தளத்தில் இருந்து வெடிமருந்து நிரப்பப்பட்ட படகுடன் கடற் கரும்புலிகள் இருவர் சண்டை நடைபெற்ற இடத்துக்கு விரைந்தனர்.

சரியாக அதிகாலை 2.50 மணிக்கு கரும்புலிப்படகு டோராப் படகுடன் மோதி வெடித்தது. டோராப் படகில் இருந்த கடற்படையினர் அனைவரும் பலியானார்கள். மற்றுமொரு டோராப் படகு பலத்த சேதம் அடைந்தது.

அதனையடுத்து கடற்சமர் ஓய்ந்தது. சுமார் எட்டுமணி நேரம் சமர் நடந்துள்ளது. கடற்படையினர் தரப்பில் 12 பேர் பலியானதாகவும், 7 பேரைக் காணவில்லை என்றும் 19.10.97 அன்று தொலைக்காட்சிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. பின்னர் ஐந்துபேர் பலியானதாகவும் ஏழு பேரைக் காணவில்லை என்றும் செய்திகள் வெளியாகின.

கடற்புலிகள் தரப்பில் இரண்டு கடற் கரும்புலிகள் உட்பட ஐந்து கடற்புலிகள் பலியானதாக புலிகள் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளனர்.

கடற் கரும்புலி மேஜர் சிறீ, கடற் கரும்புலி கப்டன் சின்னவன், கடற்புலி மேஜர் வீரமணி, கடற்புலி கப்டன் வரதன், கடற்புலி கப்டன் நவந்தன் அகியோரே பலியான 5 புலிகளாவர். கடற்புலிகளில் நூற்றுக்கு மேற்பட்டோர் பலியானதாக படையினர் தெரிவித்திருந்தனர்.

இந்திய இலங்கை ஒப்பந்த காலத்தில் இலங்கை கடற்படையினரால் கடலில் வைத்து கைதுசெய்யப்பட்ட குமரப்பா, புலேந்திரன் ஆகியோர் உட்பட 12பேரின் 10வது நினைவு தினம் 18.10.97 ஆகும். அதனை முன்னிட்டே கடற்புலிகளின் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. ■

# தலைநகரப் பாதுகாப்புக்கு பலத்த சவால்!
## புலிகளின் அணிகள் கொழும்பில்

கொழும்பில் கலதாரி ஹொட்டல் குண்டுவெடிப்பும், அத் தாக்குதல் நடத்தப்பட்ட முறையும் தலைநகரப் பாதுகாப்புக்கு பலத்த சவால் விடுவதாக அமைந்துள்ளன.

சோதனை அரண்கள் குறுக்கிட்டால் அவற்றை தாக்கிவிட்டு செல்லத்தக்க விதமாகவே தமது தாக்குதல்களை புலிகள் திட்டமிட ஆரம்பித்துள்ளனர்.

அதற்கு ஏற்ற போதிய அளவு ஆட்களும், ஆயுதங்களும் கொழும்பிலும், கொழும்புக்கு வெளியே உள்ள புலிகளின் மறைவிடங்களிலும் தயார் நிலையில் உள்ளதாக கூறப்படுகிறது.

எனவே புலிகளின் தாக்குதலை தலைநகரில் எதிர்கொள்ள வேண்டுமானால், நகருக்குள் உள்ள சோதனை அரண்கள் மற்றும் காவல் அரண்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது 30 படையினராவது பூரண தயார் நிலையில் இருந்தாக வேண்டும்.

அவ்வாறு பாதுகாப்பு ஏற்பாடு செய்வதாயின் மேலும் படையினரைக் கொழும்பு நகருக்கு தருவிக்க வேண்டும்.

### எண்ணிக்கை போதாது

வன்னியில் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கை காரணமாக தலைநகரில் உள்ள படையினரின் எண்ணிக்கை போதாமல் உள்ளது.

வடக்கு-கிழக்கில் பாரிய போர் நடவடிக்கைகளில் படையினர் குவிக்கப்படும் போது, தலைநகரப் பாதுகாப்புக்கு புலிகளிடம் இருந்து வரும் அச்சுறுத்தலை சந்திப்பது கடினமாகிவிடும் என்று தெரிகிறது.

இதேவேளை கொழும்பு குண்டுத் தாக்குதல் தொடர்பாக கைதுகளும், விசாரணைகளும் நடைபெற்று வருகின்றன. ஆயினும் குண்டுத் தாக்குதலோடு தொடர்பு கொண்ட முக்கிய சூத்திரதாரிகள் கைதுசெய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

குண்டுத் தாக்குதலின் பின்னரான மோதலில் பலியான புலிகளில் ஒருவர் கொழும்பு நகரில் உள்ள ஒரு கடையில் வேலை செய்பவராக தன் பெயரை பொலிசில் பதிவு செய்திருந்தாராம். தற்போது அக் கடை உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பலியான புலி உறுப்பினர் கடை உரிமையாளருக்குத் தெரியாமல் அவரது கையொப்பத்தை விண்ணப்பப்படிவத்தில் போட்டுத் தான் பொலிசில் பெயரைப் பதிவு செய்தார் என்று வேறு ஒரு தகவல் கூறுகிறது.

### எங்கிருந்து வந்தது?

குண்டுத் தாக்குதலுக்கு வந்த லொறி பொலனறுவையில் இருந்து வந்திருக்கலாம் என்றும் சந்தேகம் நிலவுகிறது. இராணுவத்தினருக்கு சொந்தமான லொறி போன்று நகருக்குள் வந்திருக்கலாம் என்றும் விசாரணையாளர்கள் சந்தேகிக்கின்றனராம்.

இராணுவ லொறி என்ற பெயர் பலகையுடன் வந்தமையால் நகரின் நுழைவாயிலில் இருந்த சோதனை அரண்களில் தரிக்காமல் வந்திருக்கலாம். குண்டு பொருத்தப்பட்ட லொறியில் ஆயுதங்களும் கொண்டு வரப்பட்டிருக்கலாம்.

இலக்கு தீர்மானிக்கப்பட்டதும் கொழும்பில் இருந்த தாக்குதல் அணி உறுப்பினர்கள் லொறியில் ஏறிச் சென்றிருக்கின்றனர். இடையில் சில நாட்கள் கொழும்பின் ஏதோ ஒரு பகுதியில் லொறி தரித்து நின்றிருக்கிறது என்றும் தகவல்கள் மூலம் அறியப்பட்டுள்ளதாம்.

எனினும் பலியானவர்களிடம் இருந்து கிடைத்த தடயங்கள் எதுவும் விசாரணைக்கு போதுமான தகவல்களை வழங்கக்கூடியதாக அமையவில்லை. அதனால் எல்லாமே ஊகங்களாகவும் சந்தேகங்களாகவுமே உள்ளன.

கொழும்பில் புலிகளின் தாக்குதல் அணியைச் சேர்ந்த பலர் இன்னமும் தங்கி இருக்கின்றனர் என்று பாதுகாப்புத் தரப்பினர் சந்தேகிக்கின்றனர்.

பாதுகாப்புத் தரப்பினரின் விழிப்பு நடவடிக்கைகளை கவனித்து, அதுக்கு மாற்றான வழிகளை புலிகள் நாடுகின்றனர். எனவே தலைநகரப் பாதுகாப்பு உத்தரவாதப் படுத்த முடியாத ஒன்றாகவே இருக்கிறது என்று இராணுவ ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ■

## காலவரையறையின்றி மூடப்பட்ட கலதாரி
### தூதரகங்கள் பயணிகளுக்கு அறிவுறுத்தல்

கொழும்பில் கலதாரியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் சுற்றுலாத்துறைக்கு பாதிப்பு ஏற்படப்போவதில்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ஆனால் முக்கியமான 5 நட்சத்திர ஹொட்டல்களுக்குக் கணிசமான பாதிப்புகள் ஏற்பட்டிருப்பதனால் இப்போதே பலத்த சேதம் சுற்றுலாத் துறைக்கு ஏற்பட்டிருக்கிறது.

குண்டு வெடிக்கும் சந்தர்ப்பத்தில் கலதாரி ஹொட்டலில் 60 வீதமான அறைகளில் சுற்றுலாத்துறையினரும் பிறநாட்டு வர்த்தகர்களும் முதலீட்டாளர்களும் தங்கியிருந்தனர். இவர்கள் அனைவரும் வேறு பாதுகாப்பான ஹொட்டல்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதனை அந்த ஹொட்டல் பொதுத் தொடர்பு அதிகாரி மந்திரி பெரேரா தெரிவித்தார். எதிர்வரும் குளிர்காலத்தில் 80 வீதம் பயணிகள் எதிர்பார்க்கப்பட்டிருந்ததாகவும் கூறினார்.

ஹில்டன் ஹொட்டலில் 70 வீதமான அறைகளில் ஆட்கள் தங்கியிருந்ததாகவும், குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஹொட்டல் காலவரையறையின்றி மூடப்பட்டுவிட்டதாகவும் தொடர்பு அதிகாரி யஸ்மின் காதர் தெரிவித்தார். சேதத்தின் மதிப்புக் கணக்கிடப்பட்டு, திருத்த வேலைகள் இடம்பெற்றபின் பகுதி பகுதியாகவே பயணிகளை ஏற்றுக் கொள்ளும் பணி ஆரம்பமாகும் என்றார் அவர்.

இதற்கிடையில் கொழும்பிலுள்ள பிற நாட்டுத் தூதரகங்கள் மூலம் தத்தமது நாடுகளுக்கு இங்குள்ள நிலமை பற்றிய எச்சரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. பிரிட்டிஷ் தூதரகம், ஃபிரான்ஸ் தூதரகம், ஜேர்மன் தூதரகம் போன்ற தூதரங்கள், தங்கள் நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் கொழும்பு நகரில் தங்காமல் நாட்டின் தென் பகுதியில் மட்டும் தங்கியிருக்க வேண்டும் என்று கேட்டுள்ளன.

## பொருளாதாரத்தில் சூழ்ந்த இருள்!
### ஜனாதிபதி சந்திரிக்கா தெரிவிப்பு!

தலைநகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசத்தில் குண்டு வெடித்தமையினால் நாட்டின் பொருளாதாரம் இருள் சூழ்ந்ததாகி விட்டது என்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்காவே தெரிவித்திருக்கிறார். குண்டு வெடித்ததன் பின்னர் நாட்டு நிலமையை விளக்குவதற்காக ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும், கட்சி அமைப்பாளர்கள் ஆகியோரை அழைத்து நடத்திய பிரத்தியேகக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இக்கருத்தினை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் மலேசியாவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி அங்குள்ள வர்த்தக மற்றும் முதலீட்டாளர்களுடன் கலந்து பேசி சிறிலங்காவில் முதலீடு செய்யும் வண்ணம் வேண்டிக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து இரு பெரும் துறைகளில் முதலீடு செய்வதற்கான ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்து உடன் படிக்கையொன்றில் கையொப்பமிடுவதற்காக, மலேசிய பிரதமர் மஹதிர் மொகமத் அவர்களின் மகன் மிர்ஸான் மொகமத் 16ம் திகதி வியாழக்கிழமை கொழும்பு வருவதாக விருந்தார்.

குண்டு வெடித்ததைத் தொடர்ந்து அவர் தன்னுடைய வருகையை கைவிட்டு விட்டதாக தொலைபேசி மூலம் அறிவித்து விட்டார் என்று ஜனாதிபதி இக்கூட்டத்தில் தெரிவித்தார்.

## குண்டு வெடிப்பால் நாடு திரும்பினர்

கொழும்புத் துறைமுகத்திலுள்ள எலிஸபெத் மகாராணி இறங்குதுறை அபிவிருத்தி தொடர்பாக 'பி அண்ட் ஓ' (P&O) நிறுவனத்துடன் அரசாங்கம் செய்து கொண்டுள்ள உடன் படிக்கை தொடர்பான இறுதிச் சட்ட வரைவுகளைப் பூரணப்படுத்துவதற்காக பிரிட்டனி லிருந்து 4 சட்டத்தரணிகள் வரவழைக்கப்பட்டனர். புதன்கிழமைக் குண்டு வெடிப்பில் அவர்களும் காயமடைந்துள்ளனர்.

அதனால் உடனடியாகவே நாடு திரும்பி விட்டனர். இதனால் துறைமுக அதிகாரிகள் செய்வதறியாது தடுமாறுகின்றனர்.

கடந்த 13ம் திகதி திங்கட்கிழமையன்று தான் இவர்கள் நாட்டுக்கு வந்தனர். ஹில்டன் ஹொட்டலில் இவர்கள் தங்கியிருந்தனர். குண்டு வெடிப்பைத் தொடர்ந்து சித்தம்பலம் கார்டினர் மாவத்தையிலுள்ள ட்ரான்ஸ் ஏஷியா ஹோட்டலுக்கு அனுப்பப்பட்டனர். ஆனால் தாங்கள் தங்கள் பணியை நிறைவேற்றுவதற்கு சூழ்நிலை சீரில்லாமையினால் உடனடியாக வெளியேறிவிடத் தீர்மானித்தனர்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒப்படைக்கப்பட்ட பணிக்காக நாளொன்றுக்கு 2000 பவுண் (ஒரு இலட்சத்து 97ஆயிரம் ரூபா) சம்பளமாக வழங்கப்பட்டது.

## வர்த்தகமையத்துக்கு நஷ்டம் நூறுகோடி!
### திறைசேரியில் கம்பியூட்டர்கள் நாசம்?

கொழும்பில் கலதாரி குண்டுவெடிப்பினால் பாதிக்கப்பட்ட கட்டடங்கள் வருமாறு:

1. கலதாரி ஹொட்டல், 2. ஹில்டன் ஹொட்டல், 3. உலக வர்த்தகமையம், 4. இண்டர் கொண்டினன்டல் ஹொட்டல், 5. ஜனாதிபதி செயலகம், 6. பங்குச்சந்தை, 7. விமானப்படைத் தலைமையகம், 8. இலங்கை வங்கி, 9. செலின்கோ, 10. சம்புத்தலோக விகாரை, 11.லேக் ஹவுஸ், 12. மத்திய வங்கி, 13. சிங்கப்பூர் எயார் லைன்ஸ், கட்டார் எயார்வெய்ஸ், ஓமான் எயார் வெய்ஸ், ஜப்பான் எயார்லைன்ஸ், மிடில் ஈஸ்ட் எயார் லைன்ஸ், ஈவா எயார், எயார் நியூஸிலண்ட், லுஃப்தான்சா ஆகிய எட்டு விமானப்பயண அலுவலகங்கள், 14. ரீகல் படமாளிகை, 15. திறைசேரி.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்துக்கான விபரங்கள் அடங்கிய கம்யூட்டர்களும் திறைசேரியில் நாசமாகிவிட்டன என்று சில தகவல்கள் கூறுகின்றன. எனினும் அத் தகவலை அரசாங்கம் உறுதி செய்யவில்லை.

எனினும் திறைசேரியில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவரையும் உடன் வேலைக்குத் திரும்புமாறு அவசர அழைப்பு விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் விபரங்களை தயார் செய்து எப்படியாவது வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தே தீருவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

உலக வர்த்தக மையத்துக்கு 108 கோடி ரூபாவும், இலங்கை வங்கித் தலைமையகத்துக்கு 80 இலட்சம் ரூபாவும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

ஹில்டன் ஹோட்டலுக்கு 50 இலட்சம் ரூபாய்கள் நஷ்டம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. குண்டுவெடிப்பு இடம்பெற்ற கலதாரி ஹொட்டலுக்கு ஏற்பட்ட முழுமையான நஷ்டம் பற்றி கணக்கிட்டு வருகிறார்கள். இண்டர் கொண்டினன்ட்ஸ் ஹோட்டலுக்கு 50 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்திலும் ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட நஷ்டம் ஏற்பட்டுள்ளது. தளபாடங்கள் சேதமாகியுள்ளன. கண்ணாடிகள் உடைந்துள்ளன. கொழும்பு மையத்தில் உள்ள பெரிய கட்டடங்களும், ஹொட்டல்களும் கண்ணாடி ஜன்னல்களையே அதிகமாகக் கொண்டிருப்பதால் குண்டு வெடிப்புக்களின் போது பலத்த சேதம் ஏற்படுகின்றன. அது மட்டுமல்லாமல் கண்ணாடிச் சிதறல்கள் பட்டே பலர் காயமடைந்தனர்.

மத்திய வங்கி குண்டுவெடிப்பின் பின்னர் உடைந்த கண்ணாடிகளை அகற்றிவிட்டு, சமீபத்தில்தான் பல நிறுவனங்கள் புதிய கண்ணாடிகளைப் பொருத்தி இருந்தன. இப்போது அவையும் நொறுங்கி உள்ளன.

## கொமாண்டோக்கள் மீது குறியா?
### ஏழு அமெரிக்கர்களுக்கு காயம்

கலதாரி ஹொட்டல் குண்டு வெடிப்பு நடைபெற்ற சமயம் அமெரிக்க கொமாண்டோக்கள் அங்கு தங்கி இருந்ததாக கூறப்படுகிறது.

இச் செய்தி வெளியானதை அடுத்து கலதாரியில் இருந்த கொமாண்டோக்களை குறிவைத்து புலிகள் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்று ஊகங்கள் வெளியாகின.

ஆனால் அவை தவறான ஊகங்கள் ஆகும். கலதாரி ஹொட்டலில் அமெரிக்கக் கொமாண்டோக்கள் தங்கியிருந்த தகவல் புலிகளுக்கு தெரிய வாய்ப்பில்லை.

அவ்வாறு தெரிந்திருந்தால்கூட அமெரிக்க கொமாண்டோக்களை தாக்குவதன் மூலம் அமெரிக்காவுடன் தீராப் பகையைத் தேடிக் கொள்ள புலிகள் முன்வந்திருக்க மாட்டார்கள். புலிகள்மீதான தடையை அமெரிக்கா நீக்க வேண்டும் என்று கோரி அமெரிக்காவுக்குள் உள்ள சில அமைப்புக்கள் மூலமே கோரிக்கை விடவும் புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

அது மட்டுமல்லாமல் கலதாரி ஹோட்டலுக்குள் புலிகளின் தாக்குதல் அணி புகுவதற்கு எவ்வித தடையும் இருக்கவில்லை. ஆனால் புலிகளின் தாக்குதல் அணியினர் கலதாரி ஹொட்டல் கார்ப் பார்க்கில் லொறியை நிறுத்திவிட்டு கலதாரி ஹொட்டலுக்கு வெளியே வந்துதான் தரையில் படுத்து நிலை எடுத்தனர்.

ஹொட்டலுக்குள் புக நினைத்திருந்தால் லொறியை நிறுத்திவிட்டு புகுந்திருக்கலாம். உள்ளேயே பதுங்குநிலை எடுத்திருக்கலாம். குண்டு வெடிப்பு அதிர்வின் பின் எழுந்து சென்று கொமாண்டோக்களை தாக்கி இருக்கலாம். அவ்வாறான எவ்வித நோக்கமும் புலிகளுக்கு இருக்கவில்லை என்பதையே தாக்குதல் நடத்தப்பட்ட முறை வெளிப்படுத்துகிறது. குண்டு வெடிப்பினால் ஏழு அமெரிக்கர்கள் காயமடைந்தனர். அதில் ஒருவர் மட்டுமே மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். ஏனையோர் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள். ■

## பெரிய மடுவில் பலத்த மோதல்–82 புலிகள் பலியாகினர்

13.10.97 அன்று வன்னியில் 'ஜயசிக்குறுய்' படையினர்மீது புலிகள் தாக்குதல் தொடுத்தனர்.

பெரியமடுப்பகுதியில் அமைந்துள்ள 'ஜயசிக்குறுய்' படையினரின் முன்னரங்க நிலைகள் மீது புலிகள் தாக்குதல் தொடுத்தனர். அங்கிருந்த மினி முகாம் ஒன்றும் தங்களால் அழிக்கப்பட்டதாகப் புலிகள் கூறியுள்ளனர்.

இதே சமயம் கருப்பட்டமுறிப்பில் முற்றுகைக்கு உள்ளான படையினர் புலிகளின் முற்றுகையை உடைக்க பலத்த தாக்குதல் தொடுத்தனர். 13.10.97 அன்று பெரியமடுவிலும், கருப்பட்டமுறிப்பிலும் நடைபெற்ற சண்டைகளில் புலிகளின் தரப்பில் லெப்டினன்ட் கேணல் சந்திரகாந்தன் உட்பட 82 புலிகள் பலியாகினர்.

இச் சண்டையில் படையினர் தரப்பில் நூற்றுக்கு மேற்பட்ட உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாக புலிகள் கூறியுள்ளனர். ஆனாலும் படையினர் தரப்பு அவ்வாறான செய்தி எதனையும் வெளியிடவில்லை.

பெரியமடுவில் நிலைகொண்டுள் படையினரை அங்கிருந்து பின்வாங்கச் செய்யவே புலிகள் பலத்த தாக்குதல் தொடுத்தனர். ஆயினும் அம் முயற்சி அன்றைய தாக்குதலின் பயன் அளிக்கவில்லை என்றே தெரிகிறது.

அன்று பலியான 82 புலிகளில் 40 புலிகளின் உடல்கள் படையினரால் கைப்பற்றப்பட்டன. ■

### புலிகள் வெளியிட்ட செய்தி

கொழும்பு குண்டு வெடிப்புத் தொடர்பாக புலிகளின் குரல் வானொலி பின்வருமாறு செய்தி வெளியிட்டது:

"சிறீலங்காவின் தலைநகரில் உயர் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்ட பொருளாதார மையப்பகுதியில் பாரிய குண்டுத்தாக்குதல் ஒன்று இன்று இடம்பெற்றுள்ளது.

இன்று காலை 7.10 மணியளவில் தலைநகரையும், ஆட்சியாளர்களையும் உலுக்கி எடுத்துள்ள இத் தாக்குதலில் சந்திரிக்காவால் மூன்று நாட்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்ட, சிறீலங்காவின் மிக உயர்ந்த கட்டடமான உலக வர்த்தக மையம், கலதாரி மற்றும் ஹில்டன் ஹொட்டல்களும் அதனைச் சூழ உள்ள கட்டடங்களும் பாரிய அதிர்ச்சியால் சேதமடைந்துள்ளன." என்று செய்தி கூறப்பட்டது.

குண்டுவெடிப்புக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று புலிகளின் இலண்டன் கிளையினர் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் ஷெல்வீச்சு – பொதுமக்களும் படையினரும் பலி!
### கட்டடங்கள் வீடுகள் வாகனங்கள் சேதம்!

மட்டக்களப்பு நகரிலும், பாதுகாப்பு வலயங்களாக உள்ள பகுதிகளிலும் ஷெல் தாக்குதல் நடத்தும் உத்திகளைப் புலிகள் இயக்கத்தினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

படையினரதும், பொலிஸாரினதும், படையினருக்கு உதவியளிக்கும் இயக்கத்தினரதும் முகாம் சூழலுக்குள் வசிக்கும் பொது மக்கள் 500 மீட்டர் தூரத்துக்கப்பால் விலகியிருக்குமாறு புலிகள் இயக்கத்தினர் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் மக்களைக் கேட்டிருந்தனர். இருப்பினும் பொது மக்கள் எவரும் அகலவில்லை. ஆயினும் தமது முன்னறிவித்தலின்படி புலிகள் இயக்கத்தினர் ஷெல்தாக்குதலை ஆரம்பித்திருக்கிறார்கள்.

கடந்த 17.10.97 அன்று மட்டக்களப்பு-முறக்கொட்டான்சேனை, மாவடிவேம்பு ஆகிய பகுதிகளின் மீது புலிகள் இயக்கத்தினர் ஷெல் ஏவினார்கள். இதனால் மாவடி வேம்பில் ஒரு படை அதிகாரி கொல்லப்பட்டார். முறக்கொட்டான்சேனையில் படையினர் எவருக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை. மாறாக பொதுமக்களில் கு.லோகநாயகி (30), நொயேந்திரன் சுபாஷினி (18) எனும் மாணவி ஆகியோர் கொல்லப்பட்டனர். மேலும் 14 பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். இவர்களில் 10பேர் பெண்களாவர். முறக்கொட்டான்சேனையிலும், மாவடிவேம்பிலும் புலிகளால் 19 ஷெல்கள் ஏவப்பட்டன. வீழ்ந்தவற்றில் 2 ஷெல்கள் வெடிக்கவில்லை. அவற்றைப் படையினர் எடுத்து வெடிக்க வைத்தனர்.

### பதினாறு பேர் காயம்

கடந்த 14.10.97 அன்று மட்டக்களப்பு 3வது பிரிவு இராணுவத் தலைமையகம், கல்லடி இராணுவ முகாம், மட்டக்களப்பு கச்சேரி (மாவட்டச் செயலகம்) விமானப் படைத் தளம் மற்றும் மட்டக்களப்பு-கொழும்பு வீதியிலுள்ள மாவடி வேம்பு இராணுவ முகாம் ஆகியவற்றின்மீது புலிகள் இயக்கத்தினர் 81 எம்.எம். ஷெல்களை ஏவினர். சுமார் 40 இற்கு மேற்பட்ட ஷெல்கள் அவ்வாறு ஏவப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. குறித்த இடங்கள் மீது ஏக காலத்திலேயே ஷெல்கள் ஏவப்பட்டிருக் கின்றன.

இவற்றின் விளைவாக 16 படையினரும் 2 பொதுமக்களும் காயம்பட்டார்கள். கச்சேரிக்குச் சொந்தமான 5 பிக்-அப் வாகனங்கள், 3 ஜீப் வண்டிகள் என்பன பெருஞ் சேதத்திற்குள்ளாகியுள்ளன. கச்சேரிக்குத் தற்போது ஒரேயொரு பிக்-அப் வாகனமே எஞ்சியுள்ளது. கச்சேரியில் இயங்கிய பதிவாளர் அலுவலகம், உணவுக் கட்டுப்பாட்டுப்பகுதி, காணி அலுவலகம் என்பன பலத்த சேதமடைந்தன.

புலிகள் இயக்கத்தினர் ஷெல் தாக்குதல் மேற்கொண்ட 3வது பிரிவு இராணுவத் தலைமையகப் பகுதியைச் சூழ ஒரு புறம் மட்டக்களப்பு வாவியும் மற்றப் புறங்களில் கச்சேரி, நீதிமன்றம், பொதுநூலகம், பள்ளிவாசல், வானிலை அவதான நிலையம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், வின்சன்ற் பெண்கள் தேசியக் கல்லூரி, மெதடிஸ்த மத்திய கல்லூரி, மண்முனை வடக்கு பிரதேச செயலகம், ஒருங்கிணைந்த புனர்வாழ்வு புனரமைப்பு அலுவலகம், மாவட்டக் கல்வித் திணைக்களம், பிரதமதபாலகம், வெபர் விளையாட்டரங்கு என்பன உள்ளன. ■

## ஆசிரிய இடமாற்றத்தில் அரசியல்வாதிகள்!

பதுளை மாவட்டத்தில் பல தோட்டப் புறப்பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களை தமது அரசியல் விளையாட்டுக்களால் தொடர்ந்து தேவையற்ற இடமாற்றம் செய்து வருவதாக அப்பகுதி அரசியல் வாதிகள்மீது குறை கூறப்பட்டு வருகிறது. அநீதியான முறையில் அரசியல் வாதிகள் தமது செல்வாக்குகளை ஆசிரியர்கள் மீது பரிசோதித்துப் பார்க்க முயற்சிப்பது பின் தங்கிய தோட்டப் புற சிறார்களுக்குச் செய்யும் துரோகம் என்று பதுளைப் பகுதி வலயக் கல்வியதிகாரியொருவர் மனம் சலித்துக் கொண்டார்.

சமீபத்தில் லுணுகலை ஹோலண்ட்ஸ் தமிழ் மேல் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியையொருவர் காரணமில்லாமல் ஒரு மாதத்திற்கிடையில் மீண்டும் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். ■

## வீதி ரோந்து அணிமீது தாக்குதல்–மூவர் பலி!

பொலன்னறுவை-வெலிக்கந்தையில் வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த படை அணிமீது புலிகள் இயக்கத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதில் ஒரு இராணுவ அதிகாரியும் மற்றும் இரண்டு சிப்பாய்களுமாக மூவர் பலியாகினர். இத் தாக்குதல் 18.10.97 அன்று காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது. ■



படிப்பகம்

# "1977ல் நடந்ததும் கருத்துக் கணிப்புத்தான்!"

## ம.தி.மு.க. தலைவர் வை.கோ. தெரிவிப்பு!

இலங்கைத் தமிழர் பிரச்சனையில் மறுமலர்ச்சி தி.மு.க.வின் இன்றைய நிலைப்பாடு தொடர்பாக, அக் கட்சியின் தலைவர் வை.கோபால்சாமி 'துக்ளக்' இதழுக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறியுள்ளார்:

"ஈழத் தமிழரின் தேசிய இனப் பிரச்சனைக்கு தனித் தமிழ் ஈழம்தான் நிரந்தரப் பரிகாரத்தை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். வரலாற்று ரீதியாக இருக்கக்கூடிய பல காரணங்களை கணக்கில் எடுத்துக் கொண்டு, ஆலோசனை செய்துதான் நாங்கள் இந்த முடிவை எடுத்தோம்.


1976ம் ஆண்டு மே 4ம் திகதி வட்டுக்கோட்டையில் 'ஈழத்துக் காந்தி' என்று போற்றப்பட்ட அகிம்சாமூர்த்தி என்று மதிக்கப்பட்ட செல்வா, தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் இந்தப் பிரகடனத்தை அறிவித்தார்.

அந்தப் பிரகடனத்தில் ஏன் சேர்ந்து வாழ முடியாது, ஏன் சக வாழ்வு சாத்தியமில்லை? என்ற காரணங்களை அவர் விளக்கினார்.

தமிழர் பகுதி அதிக உரிமையுள்ள சுயாட்சிப் பகுதியாக இருக்க வேண்டும் என்று போராடி, அது இனி முடியவே முடியாது என்று அவரே அனுபவபூர்வமாக முடிவுக்கு வந்து, தமிழ் ஈழமே பிரச்சனைக்குத் தீர்வு என்பதை அடிப்படையாக வைத்துத்தான் 77ல் தேர்தலுக்கு போனார்கள். 99 சதவிகித தமிழ் மக்கள் அதை ஆதரித்து வாக்குப் போட்டார்கள்.

ஏறத்தாழ அது ஒரு கருத்துக் கணிப்பு மாதிரித்தான். இப்போது என்ன நிலமை? அதிகாரப் பரவலாக்கல் திட்டம் என்று இலங்கை அதிபர் சந்திரிகா ஏமாற்றுகிறார்.

தமிழர் தாயகப் பகுதியில் அரசின் உதவியோடு செய்யப்பட்டுள்ள கட்டாயக் குடியேற்றம்தான் முக்கிய பிரச்சனை. இது பற்றி அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தில் எந்தத் தீர்வும் இல்லை.



சிங்களக் குடியேற்றத்தை நீக்க வழியில்லை. இதனால் இரண்டாம் தரக் குடிமக்களாகத் தான் தமிழ் மக்கள் இருப்பார்கள்.

தமிழ் மக்கள் ஏற்க இயலாத இந்தப் புதிய திட்டத்தைக்கூட புத்த பிக்குக்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் இதை எதிர்த்து சத்தியாக்கிரகம் நடத்துகிறார்கள்.

ஆகையால், தமிழர்களுக்கு சுயாட்சி அதிகாரங்களைக்கூட அவர்கள் கொடுக்கத் தயாராக இல்லை. இந்நிலையில் ஈழ மக்களுக்கு தனித் தமிழ் ஈழம்தான் தீர்வாக அமையும். அதுதான் எங்களுடைய கருத்து.

இதைத்தான் தீர்மானமாக நிறைவேற்றி உள்ளோம். நாங்கள் எந்தக் குறிப்பிட்ட அமைப்புக்கும் ஆதரவு என்று தீர்மானம் போடவில்லை."

இவ்வாறு வை.கோபால்சாமி கூறியுள்ளார்.

தமிழ் நாட்டில் உள்ள வை.கோபால்சாமி, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ், தமிழர் தேசியக் கட்சித் தலைவர் ப.நெடுமாறன் ஆகியோரும் அமெரிக்காவுக்குள் நுழையத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

## கைக்குண்டு வெடிப்பு

**14.10.97** அன்று யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் படையினர் ட்ரக் வண்டியில் ரோந்து சென்று கொண்டிருந்தனர்.

ட்ரக்கில் இருந்த சிப்பாய் ஒருவர் கீழே குதித்தபோது, கிரனேட் தவறிவிழுந்து வெடித்தது. வீதியால் சென்ற இளைஞர் ஒருவரது காலுக்கு கீழே உருண்டு வெடித்தது.

இராணுவச் சிப்பாயான விந்தக்குமார (28), நவரத்தினம் சுதர்சன் (21) இணுவில், இரத்தின சபாபதி சுப்பிரமணியம் (41) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், ஆகியோர் காயமடைந்தனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் நாவாந்துறையில் படையினருக்கு உதவி செய்ததாகக் கூறி, 45 வயதுடைய ஒருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார். 13.10.97 இரவு 9.30 மணிக்கு இச் சம்பவம் இடம்பெற்றது.

கொடிகாமம், இணுவில் ஆகிய பகுதிகளில் மேலும் இருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர். அக்டோபர் 13, 14ம் திகதிகளில் இச் சம்பவங்கள் இடம் பெற்றன.

## $3\frac{1}{2}$ இலட்சம் ரூபா நிதியுதவி

(காத்தான்குடி நிருபர்)

கடந்த கால யுத்தங்களின்போது அழிவிற்குள்ளான மட்டக்களப்பு மாவட்ட இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய ஆலயங்களுக்கு புனர்வாழ்வளிக்கும் திட்டத்தின் கீழ் 3 இந்துக் கோயில்கள், கிறிஸ்தவ தேவாலயம் ஆகியவற்றிற்கு 3 1/2 இலட்சம் ரூபா நிதியினை பிரதி தபால் - தொலைத் தொடர்புகள், தகவல்துறை அமைச்சர் அல்ஹாஜ் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் மட்டக்களப்பில் நடைபெற்ற வைபவமொன்றில் ஆலய நிர்வாகிகளிடம் கையளித்தார்.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ் வரர்கோயில், மட்டுநகர் சென் ஜோன்ஸ் தேவாலயம், எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் கோயில் ஆகியவற்றிற்கு தலா 1 இலட்சம் ரூபாயும், நாவற்குடா ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலுக்கு 50ஆயிரம் ரூபாவுமாக மேற்படி தொகை வழங்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் 20 ஆலயங்களுக்கு 15 இலட்சம் ரூபாய் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழே இல்லாத 'தவளம'

## சமாதான நாடகத்தில் அரசியல்

அக்குறணை நிருபர்

தேசத்தை ஒன்றுபடுத்த எண்ணி அரசால் நடாத்தப்படும் நிகழ்ச்சி 'தவளம'. வீதிகள்-சந்தைகள் தோறும் பல இலட்ச ரூபாக்கள் செலவில் சமாதானத்தை வரவழைக்க பகீரதப் பிரயத்தனம் செய்கிறார்கள். கடந்த 6.10.97 அன்று முழுக்க முழுக்க தமிழ்பேசும் முஸ்லிம்கள் நிறைந்த பிரதேசமான அக்குறணையில் 'தவளம' நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

இளைஞர் யுவதிகள் சமாதானம் பற்றி மக்களுக்கு என்னதான் விளங்க வைக்கப் போகிறார்கள் என்ற ஆர்வத்துடன் வீதிக்கு ஆண்கள், பெண்கள் என எல்லோரும் வந்திருந்தார்கள்.

பஸாரை அண்டிய உயர்ந்த கட்டடங்கள் பாதையின் ஓரங்கள் எல்லாமே மக்கள் கூட்டம்.

சிறிதான மழை தூறலுடன் 'தெருக் கூத்து' ஆரம்பமானது. ஆட்டமும் பாட்டும் துள்ளலும் ஓங்காரமும் தான் மக்களுக்குத் தெரிந்தன. 'ஒரேநாடு ஒரேமக்கள்' என்ற ஒரே ஒரு தமிழ் சொல்லைத் தவிர வேறெந்த வார்த்தைகளையும் தமிழில் மறந்தும் உச்சரிக்கவில்லல கூத்தாடிகள்.

'இதன்மூலம் என்ன சொல்ல வருகிறார்கள்? யாருக்கு சமாதானத்தை விளங்க வைக்கப் பார்க்கிறார்கள்? ஏன் இவ்வளவு காசைக் கரியாக்குகிறார்கள்?' என்ற பல தரப்பட்ட கேள்விகளுடன் மக்கள் நேரம் போகப் போக ஏமாற்றத்துடன் கலைந்து சென்றார்கள்.

இடையில் 'பைலா' போன்று 'அரோஹரா அரோஹரா' என்றும் பாடினார்கள். பச்சையான பகிடிகளும் சிங்களத்தில் சொன்னார்கள். பார்க்கப்போனால் இது சமாதானத்திற்கான கூத்து அல்ல; மாறாக ஒரு தேர்தல் பிரசாரம் போல அமைந்திருந்தது.

எதிரணி அரசியலை பலவிதமாக சாடியதையும் கூத்தினைப் பார்த்தவர்களில் சிங்களம் தெரிந்தவர்கள் அவதானிக்கத் தவறவில்லை.

கூட்டத்தில் நின்ற குழந்தை ஒன்று தனது தந்தையைப் பார்த்துக் கேட்டது "வாப்பா! 'தவளம' என்றால் என்ன? தவளைப் பாய்ச்சலா?"

"இதுவும் ஒருவகை தவளைப் பாய்ச்சல் தான்!" என்று அருகில் இருந்த முரசின் அபிமானி ஒருவர் கூறியது கேட்டது.

# ஜனாதிபதியின் உத்தரவு என்னாச்சு?




அண்மையில் நடைபெற்ற அம்பகமுவ பிரதேச சாகித்திய விழாவிற்கான அழைப்பிதழ் முழுக்க முழுக்க தனிச் சிங்களத்தில் அச்சடிக்கப் பட்டுள்ளது. அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் பெரும்பாலான மக்கள் தமிழர்களாவர். அத்துடன் அம்பகமுவ பிரதேசசபையின் தலைவரும் ஒரு தமிழராவார்.

அரசாங்கத்துடன் தொடர்புள்ள நிறுவனங்கள் கட்டாயம் தமிழ் மொழிக்கும் இடமளிக்க வேண்டுமென ஜனாதிபதி அவர்கள் உத்தவிட்டுள்ளாரென்பது நாடறிந்த விடயம். இது இவ்வாறிருக்க மேற்படி சாகித்திய விழா ஏற்பாட்டுக்குழு ஜனாதிபதியின் உத்தரவை மீறி தான்தோன்றித் தனமாக நடந்துள்ளமை கண்டிக்கத் தக்கதாகும்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் மேற்படி விடயத்தை ஆராய்ந்து, இனி மேலும் இவ்வாறு நிகழாதிருக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சோ.ஸ்ரீதரன், பொகவந்தலாவ.


## தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக தெய்வீக சேவை

GOVT REGED NO. HA\04\BT\219

வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள், காதல், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, என்பவற்றிலும், வேண்டியவர்களைச் சேர்க்கவும், வேண்டாதவர்களைமகற்றவும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்ட வடிவமைப்பில் எதிர்கால வாழ்க்கைப் பலனையும் அறிந்து கொள்ளலாம்.

'ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர்' நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்.

| | |
|---|---|
| பாலுசோதிடர்-S.A.M.P. | BALUSOTHIDAR-S.A.M.P. |
| தெய்வீக சக்தி நிலையம் | THEYVIGASAKTHY CENTRE, |
| கல்லடி-அரசவிடுதி வீதி, | BATTICALOA (P.O.) |
| மட்டக்களப்பு. (P.O). | SRI LANKA. |

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்." - "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"

## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

இளைஞர்களே! மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதித்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை. இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

**SEXUAL DISORDERS**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்கு**

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத் தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள்: மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர், மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072-609388

**கொழும்பில் ஒக்டோபர் 20 முதல் 30 வரை**

Dr. P. Arumugam. AHAMED TOURIST INN.
BANG BANG BUILDING No. 10, Reclamation Road,
(Entrance: Bankshall St, Opposite Renjanas) Colombo 11. T.P. 436383, 436390
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

**ஓட்டமாவடி நவம்பர் 5, 6ம் தினங்களில்**

Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி.

**கல்முனையில் நவம்பர் 8, 9, 10, 11ம் தினங்களில்**

T.M.M. பாமசியிலும் T.P. 072/609388
மற்றைய நாட்களில் Dr. P. Arumugam
No. 33. Tissa Weerasingam Sq.,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.

Chinese cookery வெகு விரைவில் ஆரம்பமாகும்
Fabric painting-
Wilton suger flowers
Indian Blouse Cutting
கற்பிக்கப்படும்.
தொடர்புகொள்ளவும்
Zulfikah Hameed,
Phone: 683005

## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

## றெறாசோ ஷிப்ஸ் (TERRAZZO CHIPS)

★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்

றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

## UNION

யூனியன் மோட்டிஸ்
கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks,
(English Origin)

றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218



## மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
பி.கே. சாமி J.D.G.A.N&JP
ஸ்ரீ துர்காதேவி மாந்திரிக உச்சாட்டபீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி,
மே பிலட் ரோட், கொழும்பு-13

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்-
342463-344831

## விசேட வைத்திய சேவை

- நாட்பட்ட நோய்கள்
- தோல் நோய்கள்
- மூளைக் கோளாறுகள்
- வாதம் - தொய்வு
- ஒவ்வாமை - (அலர்ஜி)
- நரம்புத் தளர்ச்சி
- போதை வஸ்துக்களால் ஏற்பட்ட பாதிப்பு

மேல் காணும் நோய்களுக்குப் பக்க விளைவுகளற்ற முறையில் நவீன மருந்துகளால் சிறந்த சிகிச்சைகள் வழங்கப்படும்.

வைத்திய கலாநிதி. கே.வி.ராஜா
கோணேஸ்வரா மெடிக்கல் சென்ரர்
இல. 403, மின்சார நிலைய வீதி,
திருக்கோணமலை.
தொலைபேசி : 026 - 22736

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

'இரத்மலானையில் புலிகளின் மறைவிடம் ஒன்று பிடிக்கப்பட்டது. இரத்மலானை விமானத்தள தாக்குதலின் சூத்திரதாரிகள் கைது' என்றொரு செய்தியும் வந்தது.

கண்டுபிடிக்கப்பட்ட மறைவிடத்தில் காணப்பட்ட ஆயுதங்கள் போதுமானவையல்ல. அதுதவிர புலிகளின் தாக்குதல் குழுவும் மாட்டுப்படவில்லை. அதனால் தலைநகர் அபாயம் விலகவில்லை என்று அப்போதே குறிப்பிட்டிருந்தோம்.

அக்டோபர் 15ல் கொழும்பின் அதிகூடிய பாதுகாப்பு நிறைந்த இதயப் பகுதிக்குள் குண்டுத் தாக்குதல் நடைபெறப்போவது நாம் கணிப்பில் ஊர்ஜிதமானது.

இரத்மலானையில் இரண்டுவிதமான தாக்குதலுக்கு புலிகள் திட்டமிட்டிருந்தனர் என்று கூறியிருந்தோம்.

**ஒன்று: விமான நிலையத்துக்கு செல்லும் முக்கிய புள்ளிகளை இடை நடுவே வைத்து குண்டுபொருத்திய வாகனத்தால் மோதுவது.**

**இரண்டாவது: விமான நிலையத்தை தகர்ப்பது.**

இந்த இரண்டில் ஏது முதலில் வசதிப்படுகிறதோ அதனைக் குறிவைத்திருந்தனர்.

உளவறியும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இரண்டுபேர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இரத்மலானையில் இருந்த மறைவிடமும் மாட்டிக் கொண்டது. தாக்குதல் திட்டமும் அம்பலமானது.

அதன்பின்னர் தாக்குதல் இலக்கை மாற்றிக் கொண்டனர் புலிகள்.

**அக்டோபர் 12ம் திகதி உலக வர்த்தக மையத்தை ஜனாதிபதி திறந்து வைக்கப்போகிறார் என்ற தகவல் புலிகளுக்கு எட்டியது.**

**உலக வர்த்தக மைய கட்டடத்தை ஜனாதிபதி திறந்துவைக்கும் தினத்தன்று தாக்குதல் நடத்த முடிந்தால் நடத்துவது. மேலிடத்து உத்தரவு கிடைத்தது.**

**குண்டுவெடித்த அதிர்ச்சியில் இருந்து ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் மீள்வதற்கு இடையில், கரும்புலிகள் வர்த்தக மையத்துக்குள் புகுந்து ஜனாதிபதியை தீர்த்துக்கட்டுவதுதான் திட்டம்.**

15 பேர் கொண்ட அணி தாக்குதலில் ஈடுபட இருந்ததாகக் கூறப்படுகிறது. அத்தனை பேரும் கரும்புலிகளாகவே களத்தில் இறக்கப்பட இருந்தனராம்.

அக்டோபர் 12ம் திகதி அதிகாலையில் குண்டு பொருத்தப்பட்ட லொறி கொழும்பு நகருக்குள் பிரவேசித்து விட்டதாம்.

தலைநகரின் வர்த்தகப் பகுதி ஒன்றில் லொறிகளோடு லொறியாக நிறுத்திவைத்து விட்டு காத்திருந்தனர்.

கொழும்பில் செக்பொயிண்ட், சோதனைகள் அதிகமாக இருப்பதால் கொழும்புக்கு வெளியேவைத்துத்தான் லொறியில் குண்டு பொருத்தப்பட்டிருக்கிறது.

ஆனால் தாக்குதல் குழுவைச் சேர்ந்தவர்கள் கொழும்புக்குள்ளேதான் இருந்துள்ளனர். அவர்களுக்கான ஆயுதங்களும் தயார் நிலையில் இருந்தன.

அக்டோபர் 12 அன்று உலக வர்த்தக மையத்தை ஜனாதிபதி திறந்து வைப்பது உறுதி செய்யப்பட்டது.

ஆனால் குறிப்பிட்ட நாளில் திட்டமிடப்பட்ட இலக்கை நோக்கி லொறி செல்ல முடியாதளவுக்கு பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

எப் பாதையால் லொறியை கொண்டு செல்லத் திட்டமிட்டிருந்தார்களோ, அப்பாதைகள் வழியாக செல்ல முடியாதளவுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

லொறி புறப்பட முன்பாக நோட்டம் பார்க்கச் சென்றவர்களுக்கு அன்று தாக்குதல் நடத்துவது இயலாது என்று தெரிந்துவிட்டதாம்.

அதனால் அக்டோபர் 12ம் திகதி நடத்தப்பட இருந்த தாக்குதல் ஒத்திவைக்கப்பட்டது.

எனினும் குண்டு லொறியை தொடர்ந்து தலைநகருக்குள் வைத்திருப்பது பாதுகாப்பானதல்ல. சிக்கிக் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. அதனால் விரைவான மற்றொரு தாக்குதலுக்கு திட்டமிட்டிருக்கின்றனர்.

உலக வர்த்தக மைய கட்டடத்தில் திறப்பு விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி, சர்வதேச முதலீட்டாளர்களுக்கு இந்த நாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

1996, ஜனவரி-31ல் மத்தியவங்கி குண்டு வெடிப்பின் பின்னர் தலைநகரில் பாரிய குண்டுத்தாக்குதல் எதுவும் இடம்பெறவில்லை.

அதனால் கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்திகரமாக உள்ளதாக அரசும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உத்தரவாதம் கொடுக்க முடிந்தது.

சமீபகாலமாக சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரிக்கத் தொடங்கியிருந்தது.

இதனை எல்லாம் கருத்தில் கொண்ட புலிகள் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடிக்கத் திட்டமிட்டனர்.

உல்லாசப் பயணத்துறையையும் அச்சுறுத்த வேண்டும். சர்வதேச முதலீட்டாளர்களையும் கதிகலங்க வைக்க வேண்டும்.

குறியில் இருந்து ஜனாதிபதி தப்பிவிட்ட நிலையில், உலக வர்த்தக மைய கட்டடத் திறப்பு விழாவில் ஜனாதிபதி விடுத்த அழைப்புக்கு பதிலடி கொடுக்கக்கூடியதாகவும் புதிய தாக்குதல் திட்டமிடப்பட்டது.

**கொழும்பில் நடைபெறும் தாக்குதல்களில் பொதுமக்களின் உயிரிழப்புக்கள் அதிகம் ஏற்படக்கூடாது என்பது பிரபாவின் கண்டிப்பான உத்தரவு.**

கொழும்பு மத்திய வங்கி தாக்குதலில் பொதுமக்களின் உயிரிழப்புக்களைப் பற்றி புலிகள் அதிகம் கவலைப்படவில்லை. எனினும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட உலகக் கண்டனங்கள் புலிகளின் தலைமைப்பீடத்தை சற்று யோசிக்க வைத்திருக்கிறது.

**பாதுகாப்பு படையினர் தவிர்ந்த ஏனைய உயிரிழப்புக்களை தவிர்க்கும் வகையில் தாக்குதல் நடத்தக்கூடிய இலக்குகளையே கொழும்பில் தெரிவு செய்யுமாறு புலிகளின் உளவுப் பிரிவினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாம்.**

எனவே- அக்டோபர் 12ம் திகதி திட்டமிட்டிருந்த தாக்குதல் கைகூடவில்லை என்றதும்,



# அக்டோபர் 12 முதல்–15 வரை காத்திருந்த குண்டு லொறி

அக்டோபர் 15ம் திகதி போயா தினத்தை தமது அடுத்த தாக்குதலுக்காக தெரிவு செய்தனர்.

**உலக வர்த்தக மையக் கட்டடத்தை மட்டும் குறிவைத்து தாக்கினால் இலங்கையில் முதலீடு செய்ய வருபவர்கள் மட்டும்தான் அச்சுறுத்தலுக்கு உள்ளாவர். உல்லாசப் பயணிகள் வருகை பாதிக்கப்படமாட்டாது.**

**கலதாரி ஹோட்டலை மட்டுமே குறிவைத்துத் தாக்கினால் உல்லாசப் பயணிகள் மட்டும்தான் பாதிக்கப்படுவர். முதலீட்டாளர்களுக்கான எச்சரிக்கையாக கருதப்படாமல் போகலாம்.**

**எனவே- சர்வதேச முதலீட்டார்களையும், உல்லாசப் பயணிகளையும் ஒரே தாக்குதல் மூலம் எச்சரிக்கக்கூடியதாகவே குண்டுலொறி மோதும் இடம் தெரிவு செய்யப்பட்டது.**

கலதாரி ஹோட்டலுக்குள் லொறியை கொண்டு சென்று மோதுவது சுலபம். அவ்வாறு செய்ய புலிகள் நினைத்திருந்தால், ஹோட்டல் முற்றாகத் தகர்ந்து போயிருக்கும்.

அதனால் வெளிநாட்டவர்கள் பல நூற்றுக் கணக்கில் பலியாகி இருப்பர். பல நாடுகளுக்கு இங்கிருந்து பிணமாக அவர்கள் அனுப்பப்பட்டிருந்தால், அந்த நாடுகளில் புலிகளுக்கு எதிரான நிலைப்பாடுகளும் தோன்றும்.

வெளிநாட்டுப் பயணிகளின் உயிர் இழப்பைத் தவிர்க்க புலிகள் முக்கிய கவனம் செலுத்தியதற்கு அதுவும் ஒரு காரணம்.

**தங்கள் இயக்கத்துக்கு எதிரான பிரசாரமாக அரசாங்கம் பயன்படுத்த முடியாதளவிலும், அதே நேரம் அரசுக்கு பலத்த நெருக்கடியைக் கொடுக்கும் வகையிலும் புலிகளால் தாக்குதல் திட்டமிடப்பட்டது.**

முன்கூட்டியே பலமுறை சரிபார்க்கப்பட்ட பாதைவழியாக கலதாரி ஹோட்டலுக்கு குண்டு லொறியைக் கொண்டுசெல்ல திட்டமிடப்பட்டது.

1996, ஜனவரி மத்திய வங்கிமீதான குண்டுத் தாக்குதலில் மூன்று புலிகள் நேரடியாக ஈடுபட்டனர். ஒருவர் கரும்புலி. அவர்தான், லொறியை ஓட்டிச்சென்று கட்டிடத்தோடு மோதி, தானும் மாண்டார்.

ஏனைய இரண்டு புலிகளும் குண்டுலொறி இலக்கைச் சென்றடைய வழி ஏற்படுத்திக் கொடுக்க அனுப்பப்பட்டவர்கள்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி மத்திய வங்கிக்கு முன்புள்ள பாதைத் தடைகளை அகற்றுவதுதான் இரண்டு புலிகளுக்கும் கொடுக்கப்பட்ட வேலை.

ஆனால் இம்முறை தலைநகரப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாக்கப்பட்டுள்ளதால், அதற்கேற்ப தாக்குதல் குழுவும்தெரிவு செய்யப் பட்டது.

லொறிச் சாரதி உட்பட ஏழுபேர் கொண்ட தாக்குதல் குழு நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டது. லொறியை நிறுத்திவிட்டு சாரதி இறங்கி வந்தபின்னர்தான் லொறி வெடிக்கும்.

**முடிந்தால் தப்பிவருவது. இல்லையெனில் தற்கொலைப் படையாக மாறுவது என்ற திட்டப்படிதான் ஏழுபேரும் களத்தில் இறக்கப்பட்டனர். கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாக இருப்பதாக கூறப்பட்டாலும் அதில் உள்ள ஓட்டைகளைப் புலிகள் கண்டுபிடித்து விடுகின்றனர்.**

உலக வர்த்தக மையக் கட்டடம், மத்திய வங்கி, மற்றும் சர்வதேசப் பிரபலமான ஹோட்டல்கள் அனைத்தும் உள்ள தலைநகர இதயப் பகுதிதான் இலங்கையிலேயே அதிக கூடிய பாதுகாப்புக் கொண்ட பகுதியாகும்.

ஆனால் அந்தப் பகுதிக்குள் சுலபமாக புகக்கூடிய பாதைகள் இருந்தன. அந்தப்பாதைகளில் சோதனை அரண்களே கிடையாது என்றால் நம்புவதற்கு கஷ்டமாக இருக்கும். ஆனால் உண்மை அதுதான்.

வகை தொகையற்ற கைதுகள், தேடுதல்கள் என்பவைதான் பாதுகாப்பு ஏற்பாடுகளாக கூறப்படுகின்றன. அவை தவிர்க்க முடியாதவை என்று நியாயப்படுத்தப்படுகின்றன.

ஆனால், தலை நகரின் இதயத்துக்குள் புகக்கூடிய பாதைகள் மட்டும் வெகு சுதந்திரமாக விட்டுவைக்கப்பட்டிருந்தன.

ஒன்று, மருதானை ஒலிம்பியா திரையரங்கின் முனையில் இருந்து ஆரம்பமாகும் டி.ஆர்.விஜயவர்த்தன மாவத்தை.

இந்தச் சாலையில் கப்பிதாவத்தை கோயில்

# தலை நகரை உலுக்கிய தாக்குதல் அணி

வழி, பிரதம தபால் காரியாலயம், தனியார் வர்த்தக நிலையங்கள், லேக் ஹவுஸ் பத்திரிகைக் காரியாலயம் முதலியன அமைந்துள்ளன.

இந்தச் சாலை வழியாகச் சென்று கலதாரி ஹோட்டலை அடைவது சுலபம். இடையில் எந்தவொரு சோதனை அரணும் இருக்க வில்லை. ஆனால் திடீர் திடீர் என்று தடை அரண் நிறுவி சோதனைகள் நடப்பதுண்டு.

இன்னொரு பாதையும் இருக்கிறது. கோட்டைப் பகுதியில் இருந்து குண்டு லொறி புறப்பட்டால், ஒல்கொட் மாவத்தை வழியாக கலதாரி ஹோட்டலுக்கு செல்லலாம்.

ஒல்கொட் மாவத்தைச் சாலையில்தான் உலக சந்தை இருக்கிறது. உலகச் சந்தை முன்பாக பொலிஸ் காவலரண் அநேகமாக இருப்பதுண்டு. சில சமயங்களில் சோதனைகள் நடப்பதில்லை. பொலிசாரும் காணப்படுவதில்லை.

இந்த இரண்டு பாதைகளில் ஒன்றைத்தான் குண்டுலொறியுடன் இலக்கை அடையும் பாதையாக புலிகள் தெரிந்தெடுத்தனர்.

திடீர் திடீர் என்று சோதனை அரண்கள் வீதிகளில் நிறுவப்பட்டு இராணுவத்தினர் சோதனைகளில் ஈடுபடுவதால், அவ்வாறான தடைகளையும் எதிர்கொள்ளும் வகையில்தான் தாக்குதல் திட்டம் வகுக்கப்பட்டது.

**சோதனைக்காக இடை நடுவே லொறி தடுக்கப்பட்டால், லொறிக்குள் இருக்கும் கரும் புலிகள் கீழே குதித்து தாக்குதல் நடத்துவர்.**

**அந்த அமளியில் லொறி தொடர்ந்து இலக்கு நோக்கி செல்லும். சாரதியும், இன்னொருவரும் லொறியில் செல்ல, ஏனைய ஐந்து புலிகள் சண்டையில் ஈடுபட்டுக்கொண்டிருப்பர். அதுதான் திட்டம்.**

சோதனை அரண்களை தகர்க்கக்கூடிய 'பொம்பா' மற்றும் கைக்குண்டுகள், துப்பாக்கிகள் என்பவற்றுடனும்தான் தாக்குதல் அணி புறப்பட்டது.

இரண்டு தடைகளை எதிர்கொள்ள தாக்குதல் குழு தயாராக இருந்திருக்கிறது.

ஒன்று: தமது பாதையில் எதிர்பாராத விதமாகத் திடீர் சோதனை நடத்தப்பட்டால், சோதனையிடும் படையினரை எதிர்கொள்வது.

இரண்டாவது: கலதாரி ஹோட்டலுக்குள் செல்லும்போது, ஹோட்டல் பாதுகாப்பு ஊழியர்களால் ஏற்படக்கூடிய தடை.

கலதாரி பாதுகாப்பு ஊழியர்களின் தடையை எதிர்கொள்ள ஆயுதம் ஏந்திய ஒரு புலியே போதும்.

ஆனால் பாதையில் திடீர் சோதனை அரண்களை தகர்க்கத்தான் சாரதி தவிர, ஆறுபேர் அனுப்பப்பட்டனர்.

ஆனால், கலதாரி ஹோட்டலை சென்றடையும்வரை எந்தத் தடையும் குறுக்கிடவில்லை. கலதாரி ஹோட்டலுக்கு சம்பா அரிசி கொண்டு செல்வது போலவே லொறி சென்றிருக்கிறது.

அரிசி மூடைகளில் சம்பா என்று எழுதப்பட்டிருந்தது. கலதாரி ஹோட்டல் நுழைவாயிலில் தடுப்பு அரண் இருந்தது. அங்கு மூன்று பாதுகாப்பு ஊழியர்கள் கடமையில் இருந்தனர்.

அவர்களில் ஒருவர் லொறியை மறித்தார். அவருக்கு லொறியில் இருந்தவர்கள்மீது சந்தேகம் வந்துவிட்டது. சாரதி உட்பட மூன்றுபேர் முன்னால் இருந்தனர். ஏனையோர் லொறியின் பின்னால் அரிசி மூட்டைகளுக்குள் பதுங்கி இருந்தனர். முன்னால் இருந்தவர்கள்மீதுதான் பாதுகாப்பு ஊழியருக்கு சந்தேகம்.

'ஓரமாக நிறுத்துங்கள். சோதனை போட வேண்டும்' என்று பாதுகாப்பு ஊழியர் கூறியதும், லொறியின் முன்னால் இருந்த ஒருவர் ஆயுதத்துடன் கீழே குதித்தார். அவரைத் தொடர்ந்து பின்னால் பதுங்கி இருந்தவர்களும் ஆயுதங்களுடன் கீழே குதித்தனர்.

**விபரீதத்தை உணர்ந்த பாதுகாப்பு ஊழியர்கள் ஓடத் தொடங்க, துப்பாக்கிகள் சடசடத்தன. மூன்று ஊழியர்களும் அந்த இடத்திலேயே பலியாகினர்.**

மூவரில் ஒருவர் ஓய்வு பெற்ற இராணுவ வீரர், இன்னொருவர் கடற்படையில் இருந்தும், மூன்றாமவர் பொலிசில் இருந்தும் ஓய்வு பெற்றவர்கள்.

துரித கதியில் பாதைத் தடுப்புக்களை அப்புறப்படுத்திவிட்டு, லொறியை கலதாரி கார்ப் பார்க்கினுள் கொண்டு சென்றனர்.

**கலதாரி கார்ப் பார்க் உலக வர்த்தகமையக் கட்டடத்தின் பின்புறமாய் உள்ளது. கார்ப் பார்க்கின் முடிவில் உள்ள சுவர்தான் வர்த்தக மையக் கட்டடப் பின் சுவராகும்.**

அந்தச் சுவருடன் வெடித்தால் வர்த்தக மையக் கட்டடம் உட்பட கலதாரி ஹோட்டல், ஹில்டன் ஹோட்டல் மட்டுமல்ல, கொழும்பின் இதயப் பகுதியில் உள்ள பல முக்கிய நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படும். மிகப் பரவலான பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய முறையில்தான் குண்டு வெடிப்புக்கான இடத்தை தெரிவு செய்திருக்கிறார்கள்.

தடைகளை விலக்கி லொறியை கார்ப் பாக்கிற்குள் செலுத்தியபோது உலக வர்த்தக மையக் கட்டடச் சுவரை அடைய முடியாமல் கார் ஒன்று குறுக்கே நின்றது.

லொறியால் இடிந்து அந்தக் காரை அகற்றிவிட்டே சுவர் அருகே லொறியைக் கொண்டு சென்று நிறுத்தினர்.

இதற்கிடையே கலதாரி ஹோட்டலின் வெளியே நின்ற ஊழியர்களை உள்ளே போகுமாறு புலிகள் துரத்தி இருக்கிறார்கள். அவர்கள் யாருக்கும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்படவில்லை.

உள்ளே ஓடிய ஊழியர்கள் வெளியேகண்ட காட்சியை சொல்வதற்கு இடையே, குண்டு லொறி வெடித்த சத்தம் நகரையே உலுக்கியது.

லொறி நிறுத்தப்பட்டதும் தாக்குதல் குழுவினர் ஓடிவந்து கலதாரி ஹோட்டலின் நுழைவாயிலுக்கு வெளியே தரையோடு தரையாகப் படுத்து நிலை எடுத்துவிட்டனர்.

**அதன்பின்னரே லொறி வெடித்தது. லொறி வெடித்த அதிர்வு அடங்கியதும் தரையில் இருந்து எழுந்து தப்பிச் செல்லும் பாதையில் தாக்குதல் அணி முன்னேறியது.**

கலதாரி ஹோட்டல் அமைந்திருந்த சுற்று வட்டாரம் லேசுப்பட்டதல்ல. கோட்டை பொலிஸ் நிலையம், பொலிஸ் தலைமையகம், கடற்படை தலைமையகம், இராணுவ தலைமையகம், விமானப் படை தலைமையகம் போன்ற முக்கிய நிலைகள் அந்த சுற்று வட்டாரத்தில்தான் இருந்தன.

கலதாரி பாதுகாப்பு ஊழியர்களை புலிகள் சுட்டபோது ஏற்பட்ட வெடியோசை கேட்டு, ஆறு நிமிடங்களின் பின்னரே குண்டு லொறி வெடித்தது.

**லொறி வெடித்த அதிர்வுக்குப் பின்னரே புலிகளின் தாக்குதல் குழு தப்பிச்செல்லத் தொடங்கியது. ஆக மொத்தம் கிட்டத்தட்ட பத்து நிமிடங்கள் பாதுகாப்பு நிறைந்த பகுதிக்குள் புலிகள் சுதந்திரமாகச் செயற்பட்டிருக்கின்றனர்.**

தாக்குதலை முடித்துக் கொண்டு தப்பிச் செல்வதற்கான பாதையும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டிருந்தது.

கலதாரி ஹோட்டலில் இருந்து தெருவை குறுக்காகக் கடந்து சம்புத்தலோ விகாரைப் பக்கம் சென்றால், அந்த விகாரைக்கு அருகிலுள்ள படிக்கட்டுக்கள் வழியாக ரயில் பாதைக்குச் செல்லலாம்.

தாக்குதல் குழுவினர் தெருவைக் கடக்கும்போது சுற்றுப்புறத்திலிருந்து படையினர் ஓடிவரத் தொடங்கிவிட்டனர். தெருவை கடக்கும் போதே துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடிதான் புலிகள் கடந்தனர்.

படையினரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கினார்கள். விகாரைப்பக்கம் சென்ற புலிகளில் ஒருவருக்கும், படையினருக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் சிக்குப்பட்டே பௌத்த மதகுரு ஒருவர் கொல்லப்பட்டார்.

விகாரை அருகில் புலிகளில் ஒருவர் சூடுபட்டு விழ, ஏனையோர் லேக் ஹவுஸ் பின்புறமாகத் தப்பிச் சென்றனர்.

ரயில் பாதையில் மற்றொரு புலி சூடுபட்டு விழுந்தார். அவர் தற்கொலை தாக்குதலுக்கான அங்கி அணிந்திருந்தார். சூடுபட்டதும் தற்கொலை அங்கியில் பொருத்தப்பட்டிருந்த குண்டும் வெடித்தது.

இதனையடுத்து மூன்று புலிகள் லேக் ஹவுசின் பின்புற வழியாக உள்ளே நுழைந்தனர். படையினர் நெருங்கி வந்துவிட்ட நிலையில், தொடர்ந்து ரயில் பாதை வழியாக ஓடமுடியாது என்றுதான் லேக் ஹவுசுக்குள் புகுந்தனர்.

லேக் ஹவுசுக்குள் புலிகள் புகுந்துவிட்டதை அறிந்ததும் படையினரின் கவனம் யாவும் லேக் ஹவுசை முற்றுகையிடுவதில் சென்றது.

லேக் ஹவுசை தகர்க்கத்தான் உள்ளே சென்றிருக்கிறார்கள் என்று நினைத்து விட்டனர். பின்னர் நேரம் செல்லச் செல்ல லேக் ஹவுஸ் ஊழியர்களை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டு தப்பிச் செல்ல திட்டமிடுகிறார்களோ என்று நினைத்தனர்.

**ஒன்றில் லேக் ஹவுஸ் உள்ளே குண்டுத் தாக்குதல், அல்லது பணயக் கைதிகள் நாடகம், இந்த இரண்டில் ஒன்றை எதிர்பார்த்து லேக் ஹவுசை படையினர் முற்றுகையிட்டனர்.**

**இந்த அமளியில் தாக்குதல் குழுவைச் சேர்ந்த இரண்டு புலிகள் தப்பிச் சென்று விட்டனர்.**

லேக் ஹவுசுக்குள் சென்ற மூன்று புலிகளுக்கும் யாரையும் பணயக் கைதிகளாக பிடிக்கவோ, அல்லது லேக் ஹவுசுக்குள் தாக்குதல் நடத்தவோ எந்தத் திட்டமும் இருக்கவில்லை. தங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த உத்தரவுக்கு புறம்பான காரியத்தில் அவர்கள் ஈடுபடவும் நினைக்கவில்லை.

முதலில் லேக் ஹவுஸ் ஊழியர்கள் இருபது பேர்வரை உள்ளே இருந்தனர். அவர்களில் சிலர் கெஞ்சி மன்றாடியபோது வெளியே செல்லுமாறு புலிகள் அனுப்பி வைத்தனராம்.

வெளியே விடப்பட்ட ஊழியர்கள் மூலமாக உள்ளே இருப்பது மூன்று புலிகள் தான் என்று தெரிந்த பின்னரே அதிரடிப் படையினர் உள்ளே புகுந்துள்ளனர்.

புலிகளும் முதலில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இனிமேல் தப்பிச் செல்ல வழியே இல்லை என்ற நிலையில், கரும்புலி ஒருவர் உள்ளே நுழைந்த படையினர் மத்தியில் குதித்திருக்கிறார்.

**தற்கொலைத் தாக்குதலை எதிர்பார்த்து பதுங்கு நிலையில், ஒருவர் பின் ஒருவராக சென்றதால் அதிரடிப்படையினருக்கு பாதிப்பு பெரிதாக ஏற்படவில்லை. ஒரு அதிரடிப்படை வீரர் பலியானார். பத்துப்பேர்வரை காயமடைந்தனர்.**

துப்பாக்கிச் சண்டையில் காயமடைந்த மற்றொரு புலி சயனைட் உட்கொண்டு பலியானார். மூன்றாவது புலி தன் உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்கவைத்து மாண்டார்.

மொத்தம் ஐந்து புலிகள் பலியானார்கள். அதில் மூன்றுபேர் கரும்புலிகள். இரண்டு புலிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

## நாரதர்

படையினரின் இரும்புக் கோட்டை போன்ற முற்றுகை மத்தியில் இரண்டு புலிகள் தப்பிச் சென்றனர் என்பதை வெளியே பெரிதாகச் சொல்வதில் படையினருக்கு சங்கடங்கள் உள்ளன.

தப்பிச் செல்லும் புலிகளை ஏற்றிச் செல்ல புலிகளின் வாகனம் ஒன்று தயார் நிலையில் நின்றிருக்கிறது. ஐந்து பேரை இழந்த நிலையில், ஏனைய இரண்டு பேரையும் ஏற்றிக் கொண்டு புலிகளின் வாகனம் பறந்துவிட்டது.

இதுவரை கொழும்பில் நடைபெற்ற தாக்குதல்களுக்குள் அதிக நஷ்டத்தை ஏற்படுத்தி உள்ள தாக்குதல் இதுதான்.

மத்திய வங்கி தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கையும், நேரடியாகப் பார்க்கும்போது தெரிந்த பாரிய இடிபாடுகளும் பயங்கரமாக இருந்தன. கண்களுக்கு உடனே தெரிந்தன.

**ஆனால் கலதாரி ஹோட்டல் குண்டு வெடிப்பால் ஏற்பட்டுள்ள சேதங்கள் உள்காயம் போன்றது. மத்திய வங்கி குண்டுவெடிப்பைவிட பாரியது.**

அக்டோபர் 12ல் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி, அக்டோபர் 15இன் பின்னர் இலங்கையின் தலைவிதி நாட்டில் நடைபெறும் யுத்தத்தினால் தான் தீர்மானிக்கப்படுகிறது என்ற உண்மையை மீண்டும் ஒருதடவை ஒத்துக் கொள்ள வேண்டிய தாகியது. ■

# அதிரடி அய்யாத்துரை



**கொழும்பில் உள்ள** நண்பர் ஒருவர் பத்திரிகையில் உலக வர்த்தக மையக் கட்டடத்தின் படத்தைப் பார்த்தார். "உது எங்கே கொழும்பிலோ இருக்கிறது?" என்று கேட்டார். "கொழும்பில் இருந்து கொண்டு கேட்கிற கேள்வியோ இது. அந்தப் பக்கமே நீர் போனது இல்லையோ?" எண்டு நான் கேட்டனான். அதுக்கு அவர் என்ன சொன்னவர் தெரியுமோ? "போறனான் தான், ஆனால் கட்டடங்களை நிமிர்ந்து பார்க்கிற வாடிக்கையே வைச்சுக் கொள்ளுறதில்லை. வம்பை விலைக்கு வாங்குவானேன்?" என்டார். நியாயம்தான்!

**வவுனியாவில் கழகத்தார்** நடத்திய ஹர்த்தால் பூரண வெற்றிதான். நகரமே நல்ல தூக்கத்தில்தான் இருந்தது. அப்படியிருந்தும் நகருக்குள் ஒரு ரவுண்ட் அடித்த சிலரின் சைக்கிள்கல் கழகத்தார் காற்றைப் பிடுங்கிவிட, அவை உருட்டிக்கொண்டு நடராஜாவிலைதான் போனவையாம். இப்படி வவுனியாவில் பெரிசாக ஹர்த்தால் நடத்தவிட்டால் நாளை யாழிலும் நடக்குமல்லோ எண்டு அங்குள்ள பச்சை உடைத்தரப்பார் முணுமுணுத்ததாகக் கேள்வி.

**சுற்றுலாவுக்கு பொறுப்பான** தர்மர்தான் மெத்தவும் கலங்கிப்போனார். 'மேடம்' அவரை அழைத்து "உங்கள் துறைதான் மிகப் பாதிக்கப்படப்போகுது" எண்டு சொன்னவராம். பிரசாரத்திற்காக என்னதான் சொன்னாலும், சம்பவம் நடந்த சத்தம் கேட்ட சூட்டோடு சூடாக முட்டை முடிச்சுக்களைக் கட்டி ரெடியானவைதான் எக்கச்சக்கமாம். பயந்து பயந்து இங்கே இருக்க வேணும் எண்டு அவைக்கு என்ன வேண்டுதலோ?

**ரூபவாகினியில் குமாரர்** கொடுத்த பேட்டியில் எக்கச்சக்கமான சூடு. இப்பவும் 'தமிழ்த்தேசிய இனம்,' 'தமிழர் தாயகப் பிரதேசம்' எண்டு அடிக்கடி உச்சரிக்கிற ஒரு மனுசன் குமாரர்தான். அதுகள் பற்றி முதலில் பேசி புள்ளடி புள்ளடியாக வாங்கியவை. அதை இப்ப பேசினால் பொல்லடி விழும் எண்ட மாதிரியல்லோ மௌனம் சாதிக்கினம்!

**கூட்டான கட்சிக்குள்** மும்மூர்த்திகளின் ஆதிக்கம் சகிக்க முடியவில்லை எண்டு சேனாதிபதியார் காட்டமாக ஒரு கடிதம் அனுப்பியுள்ளாராம். சிவம், நீலம், சம்பந்தம் எனப்படும் மும்மூர்த்திகள் தாங்கள் கூடிக் குசுகுசுத்து முடிவுகளை எடுக்கினமாம். அம்பாறையை விட்டுக் கொடுத்த விவகாரத்தில் சேனாதிபதியார் கடும் கடுப்பில் இருப்பதாக ஒரு தகவல்.

**யாழ் குடாநாட்டில்** மெல்ல மெல்ல சனம் துணிஞ்சு கேள்விகள் கேட்கத் தொடங்குது. 'சென்ரி பொயிண்ட்'டுகளில் ஏறி இறங்கிச் செல்லும் பழக்கம் சனத்துக்குப் பிடிக்கவில்லையாம். "எங்களை என்ன அடிமைகள் எண்டோ நினைக்கினம்?" எண்டு பலரும் பொருமுகிறார்களாம்.

**வல்வை ஆழ்வார்** கோயில் திருவிழாவில் ரெண்டு எழுத்தார் நடமாட்டம் இருந்ததாம். கச்சான் வாங்கிக் கொறித்துக் கொண்டு நடமாடியவையாம். யாழ் குடாநாட்டுக்குள்ளும் நடமாட்டம் முன்பைவிட அதிகமாவதாகத்தான் பேச்சு.

**நீலக் கட்சி அலுவலகம்** யாழில் மூடப்பட்டுள்ளதாம். முன்னணியில் நின்றவர் ரெண்டு எழுத்தாரால் போடப்பட்டபின்னர், அடுத்த இடத்தில் இருந்தவர் தலைமறைவாம். வேலை கிடைக்கும் எண்ட நம்பிக்கையில் விண்ணப்பம் கொடுத்தவை தேடித் திரியினம்.

**தலைநகர ரயில் நிலையத்தில்** சுருட்டல் பேர்வழிகள் கொடிகட்டிப் பறக்கினமாம். பைகள், பொதிகளை வைச்சுப்போட்டு கண்ணை மூடிக் கண்ணைத் திறப்பதற்கிடையில் காணாமல் போகின்றனவாம். பயங்கரமான 'பிக்பொக்கட் படை' நடமாடுது.

**கொழும்பு குண்டு வெடிப்பு** விவகாரத்தில் ஒருவர் கடற்புலி எண்டு இனம் காணப்பட்டதாகச் செய்திகள் வந்தன. அது உறுதியான தகவலோ எண்டு சந்தேகமாம். தமிழ் இயக்க வட்டாரம் ஒன்றுதான் அடையாளம் சொன்னதாகக் கேள்வி. சும்மா அள்ளி விட்டினமோ தெரியேல்லை.

**இவ்வாரம்** ஒரு பட்டினத்தார் பாடல்:

**ஆறுண்டு; தோப்புண்டு; அணிவீதி அம்பலம் தானுமுண்டு;**
**நீறுண்டு; கந்தை நெடுங்கோவணம் உண்டு; நித்தம் நித்தம்**
**மாறுண்டு உலாவிமயங்கும் நெஞ்சே! மனைதோறும் சென்று**
**சோறுண்டு தூங்கிப்பின் சும்மா இருக்கச் சுகமும் உண்டே!** ■


படிப்பகம்

www.padippakam.com





# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



**யா**ழ் குடாநாட்டில் புன்னாலைக் கட்டுவன் பகுதியில் இந்தியப் படையினரால் நடத்தப்பட்ட அத்துமீறல்கள் இந்தியப் பிரதமரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

ராஜீவ் காந்திக்கு ஒரு மனு ஒன்றும் அனுப்பி வைத்தனர். அந்த மனுவில் புன்னாலைக் கட்டுவன் பகுதியில் நடைபெற்ற சம்பவங்களை விபரித்திருந்தனர்.

## கொலை-கொள்ளை நடத்திய 'மண்டையன் குழு'

கே.கே.எஸ்.வீதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இந்தியப் படைச் சிப்பாய்கள் இருவருக்கு பொழுது போகவில்லை. அருகிலுள்ள சுகுமாரன் என்பவரது வீட்டுக்குள் பிரவேசித்தனர். சுகுமாரனை அடித்து உதைத்து கட்டிவைத்து விட்டு, அவரது மனைவியை பாலியல் வதைக்கு உள்ளாக்க முயன்றனர்.

மனைவியான சற்குணதேவி அவலக் குரல் எழுப்ப முற்பட்டார். சத்தம் போட்டால் அவரையும், அவர் கணவரையும் கொன்றுவிடப் போவதாக மிரட்டினார்கள்.

பின்னர் சற்குணதேவி பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார்.

புன்னாலைக் கட்டுவன் பகுதியில் வீடு வீடாக இந்தியப் படையினர் தேடுதல் நடத்தினார்கள்.

திருமதி செல்வநாயகம் என்பவர் தனியாக வீட்டில் இருந்தார். இந்தியப் படைச் சிப்பாய்கள் சிலர் ஒன்றுசேர்ந்து தமது சதைவெறியைத் தீர்த்துக் கொண்டனர்.

புன்னாலைக் கட்டுவன் கிராமமக்கள் அனைவரையும் அங்குள்ள கோயிலின் முன்பாக ஒன்றுகூடும்படி இந்தியப் படையினர் அறிவித்தனர்.

கோவிலின் முன்பாக கூடியிருந்த மக்களுக்குள் இளம் வயதினர் படையினரால் தாக்கப்பட்டனர்.

புன்னாலைக் கட்டுவனில் இந்தியப் படையினர் நுழையும்போது, அங்குள்ள கோயில் மணியை அடித்து புலிகளை சிலர் உஷார்படுத்தி விடுகின்றனர் என்று படையினர் அறிந்தனர்.

பொதுமக்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்று நினைத்தனர்.

கோயில் முன்பாக கூடி இருந்தவர்களில் சின்னத்தம்பி மனோகரன் என்ற இளைஞரை பிடித்து, கோயில் மணியை அடிக்குமாறு கூறினர்.

அவர் மணி அடித்துக் கொண்டிருந்த போது சிப்பாய் ஒருவர் தனது துப்பாக்கி முனையை அந்த இளைஞரது காதுக்குள் வைத்து சுட்டார். சின்னத்தம்பி மனோகரன் அதே இடத்திலேயே பலியானார்.

சின்னத்தம்பி மனோகரன் புலிகளுடன் எவ்வித தொடர்பும் இல்லாதவர். தந்தை இல்லாத குடும்பத்தைத் தன் உழைப்பின் மூலம் பராமரித்து வந்தவர் என்று கிராமத்தினர் கூறினார்கள்.

முத்ததம்பி கனகேஸ்வரி என்ற பெண்ணும் வீட்டில் தனியாக இருந்தார். மூன்று சிப்பாய்களால் அவர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார்.

நாகமுத்து சரவணை என்பவரது வீட்டில் புகுந்த சிப்பாய்கள் அவரது பெண் பிள்ளைகளை பலாத்காரம் செய்ய முயற்சித்தனர். அவர்கள் அவலக்குரல் எழுப்பியதால் சிப்பாய்கள் அங்கிருந்து ஓடிவிட்டனர்.

இவ்வாறு வெளியே தெரிந்த சம்பவங்கள் தவிர மேலும் பல சம்பவங்கள் புன்னாலைக் கட்டுவனில் நடைபெற்றன. பயம் காரணமாகவும், அவமானம் என்று நினைத்தும் வெளியே சொல்லாமல் இருந்தவர்களும் உள்ளனர்.

பல வீடுகளும் இந்தியப் படையினரால் தீயிட்டு கொளுத்தப்பட்டன. ஆறுமுகம் என்பவரும், அவரது மகனும் இந்தியச் சிப்பாய்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

புன்னாலைக் கட்டுவனில் நடைபெற்ற இந்த அட்டூழியங்கள் பற்றி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பப்பட்ட மனுவுக்கு என்னாயிற்று என்பதே தெரியவில்லை.

### வல்வையில் தாக்குதல்

வல்வெட்டித்துறையில் 19.01.89 அன்று நடைபெற்ற தாக்குதல் பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தியது.

வல்வெட்டித்துறையில் இந்தியப் படை மீது புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றுக்கு பழிதீர்க்கும் விதமாக மக்கள் மீதும், மக்களின் சொத்துக்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

காலை 10 மணிக்கு ஆரம்பமான தாக்குதல்கள் பிற்பகல் இரண்டு மணி வரை தொடர்ந்தன. வீடுகளுக்குள் இருந்த பொதுமக்கள் ஆண், பெண், சிறுவர்கள் என்ற பேதம் இல்லாமல் வீதிக்கு இழுத்து வரப்பட்டுத் தாக்கப்பட்டனர்.

25ற்கு மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப் பட்டன. பிரபல சோதிடரான சண்முகம் என்பவரது வீடு முற்றாக எரிந்து சாம்பரானது.

ஆறு வயதுச் சிறுவன் ஒருவன் இந்தியப்படை சிப்பாய் ஒருவரால் கத்தியால் குத்தப்பட்டார். நூற்றுக்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும் படுகாயமடைந்தனர். மருத்துவமனைகள் நிரம்பி வழிந்தன.

இந்தியப் படையினரின் அத்துமீறல்களைக் கண்டித்து 20.1.89 அன்று வல்வெட்டித்துறையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது.

இந்தியப் படையின் வடமராட்சிப் பொறுப்பதிகாரி காயம்பட்ட மக்களை நேரில் சந்தித்தார். அவர்கள் முன்னிலையில் உரையாற்றினார்.

"இந்தியப் படையினரின் இவ்வாறான செயலை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இதற்காக நான் வெட்கப்படுகிறேன்.

இதுபோன்ற வன்செயல்கள் எதிர்காலத்தில் நடைபெறாது என உறுதி தருகிறேன். இந்தத் தாக்குதலில் சம்பந்தப்பட்ட சகல இராணுவத்தினரையும், இராணுவ அதிகாரிகளையும் உடனடியாக இங்கிருந்து இடம் மாற்ற நடவடிக்கை எடுப்பேன்." என்று வடமராட்சிப் பொறுப்பதிகாரி கூறினார்.

### கனகராயன் குளத்தில்

வன்னியில் கனகராயன்குளப் பகுதியில் ரோந்து சென்ற இந்தியப் படையினர்மீது கண்ணிவெடித் தாக்குதல் ஒன்று நடைபெற்றது.

இத் தாக்குதலில் இந்தியப் படையினர் தரப்பில் ஒன்பதுபேர் பலியானார்கள். இதனால் வவுனியா, யாழ் வீதியில் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டன.

நெடுங்கேணிப் பகுதியிலும் புலிகளின் தாக்குதல்கள் இடம்பெற்றன. இத் தாக்குதல்களை அடுத்து சந்தேகத்தின் பேரில் ஒன்பது பேரை இந்தியப் படையினர் கைது செய்தனர்.

பின்னர் எட்டுப்பேர் விடுதலையாகினர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான பாடசாலை மாணவன் தேவரூபன் (வயது 19) என்பவர் இந்தியப் படையினரால் கொல்லப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

விடுதலையானவர்கள் மூலம் தகவல் அறிந்த தேவரூபனின் உறவினர்கள் சடலத்தைப் பெற முயன்றனர். சடலத்தை கையளிக்க இந்தியப் படையினர் மறுத்தனர்.

### மண்டையன் குழு

தமக்கு எதிரானவர்களை தீர்த்துக்கட்ட 1988–89ல் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஒரு இரகசிய குழுவை உருவாக்கியது.

தலைமைப்பீடத்துக்கு நம்பகமான உறுப்பினர்களைக் கொண்ட அந்தக் குழு 'மண்டையன் குழு' என்று அழைக்கப்பட்டது.

தங்கள் இயக்கத்தினருக்கு எதிரானவர்களை தீர்த்துக்கட்டுவது மட்டுமல்லாமல், இரவில் கொள்ளை நடவடிக்கைகளிலும் 'மண்டையன் குழு' ஈடுபட்டது.

'மண்டையில் போடுதல்', 'தட்டுதல்', 'டம்ப் பண்ணுதல்', 'பொட்டு வைத்தல்' என்று பலவிதமான புதிய சொற்பதங்கள் இயக்கங்கள் மத்தியில் உலாவின. அத்தனை பதங்களும் ஒருவரைக் கொலை செய்வதையே குறிக்கின்றன.

'மண்டையில் போடுதல்' என்ற சொற்பதத்தை தழுவி 'மண்டையன் குழு' என்று அழைக்கப்பட்டதுதான் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உருவாக்கிய இரகசியக் கொலைக்குழு.

நல்லூர் கந்தசாமி கோவில் முன்பாக மண்டையன் குழுவால் புலிகள் இயக்க ஆதரவாளர்கள் சிலர் வெட்டிக் கொல்லப் பட்டனர்.




இக் கோரக்கொலைகளுக்கு பின்னர் 'மண்டையன் குழு' என்ற பெயர் பரவலாக அடிபட்டது.

மண்டையன் குழுவினர் கொள்ளைக்கு நோட்டமிடுவதுகூட வித்தியாசமாக இருக்கும். காலையிலோ அல்லது மாலையிலோ பெயின்ட் ரின்னுடன் திரிவார்கள். வீட்டுச் சுவர்களில் 'தமிழ்த் தேசிய இராணுவம் வாழ்க' என்று எழுதிக் கொண்டிருப்பார்கள்.

அப்படி எழுதும்போதே கொள்ளையடிக்கத் தோதான வீடாகப் பார்த்து வைத்து விடுவார்கள். இரவு ஊரடங்கிய பின்னர் குறிப்பிட்ட வீடுகளுக்குள் ஆயுதபாணிகளாகப் புகுந்து கொள்ளையடிப்பார்கள்.

புலிகள்மீதோ அல்லது ரெலோ போன்ற ஏனைய இயக்கங்கள்மீதோ பழி விழுந்து விடும்.

'மண்டையன் குழு'வைச் சேர்ந்த சிலர் இந்தியப் படையினரால் கையும் களவுமாகப் பிடிபட்டனர். இந்தியப் படை முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டனர்.

பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க தலைமைப்பீடத்தின் தலையீட்டால் விடுவிக்கப்பட்டுவிடுவர்.

### வாய் வீச்சுக்கள்

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கம் இராணுவ நடவடிக்கைகளில் பின்னடைந்தாலும்கூட, வாய்வீச்சுக்களில் எப்போதும் முன்னணியில் நின்ற அமைப்பாகும்.

சகல இயக்கங்களும் புரிந்துணர்வுடன் செயற்பட்ட காலத்தில், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க உறுப்பினர்களுடன் விவாதிப்பதற்கு ஏனைய இக்க உறுப்பினர்கள் பின் நிற்பார்கள்.

'கதை பேசுவதில் மட்டுமல்ல, தங்கள் இயலாமைக்கும் தத்துவக் காரணங்கள் கூறிப் பூசி மெழுகிவிடுவார்கள்.' என்று ஏனைய இயக்கங்கள் மத்தியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பற்றி ஒரு அபிப்பிராயம் இருந்தது.

வடக்கு-கிழக்கு மாகாணசபை முதல்வராக இருந்த வரதராஜப் பெருமாள் பேச்சு மன்னன். மாகாண சபை முதல்வர் என்ற ரீதியில் மாலை மரியாதையுடன், மேள தாளங்களுடன் வரதராஜப் பெருமாளுக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

மலையகப் பகுதியான அட்டனில் ஒரு கூட்டத்தில் உரையாற்ற வரதராஜப் பெருமாளை அழைத்திருந்தனர்.

வடக்கு-கிழக்கில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆட்சி இந்தியப் படையை நம்பியிருந்தது. இந்தியப்படை வெளியேறினால் மாகாண சபையே காணாமல் போய்விடும் என்ற நிலைதான் நிலவியது.

ஆனால் அட்டனில் உரையாற்றிய வரதராஜப் பெருமாள் என்ன சொன்னார் என்று பாருங்கள்: "நாம் வடக்கு, கிழக்கு, மலையகம் என்று பிரித்து மக்களைக் கூறுபோடமாட்டோம். அவ்வாறு பிரித்துப் பார்ப்போரையும் அனுமதிக்க மாட்டோம்.

மலையக மக்களின் பாதுகாப்புக்கு எதிர்காலத்தில் அச்சுறுத்தல் ஏற்படுமானால், அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க எம்மால் தோற்றுவிக்கப்பட்ட தொண்டர் படை முன் வரும்" என்றார் பெருமாள்.

இப்போது வரதராஜப் பெருமாளுக்கு உரிய பாதுகாப்பையே அவரது இயக்கத்தினரால் உறுதிப்படுத்த இயலவில்லை.

### தேசியக் கவுன்சில்

1989இன் ஆரம்பத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் தேசிய கவுன்சில் ஒன்றை அமைக்கப் போவதாக அறிவித்தனர்.

இது தொடர்பாக அக் கட்சியின் அன்றைய செயலாளர் நாயகம் க. பத்மநாபாவால் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.

1985ல் திம்புப் பேச்சுவார்த்தை நடந்த காலகட்டத்தில் ரெலோ, எல்.ரி.ரி.ஈ., ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கங்களுக்கிடையே தேசியக் கவுன்சில் அமைக்க இணக்கம் காணப்பட்டது.

அதன் அடிப்படையில் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் உள்ள விடுதலை இயக்கங்களும், கட்சிகளும், பொது ஸ்தாபனங்களும் தமக்கு இடையிலான முரண்பாட்டை மறந்து ஒன்றுபட வேண்டும்.

'தங்கள் இயக்கத்தினரை பரவலாக சுட்டுத்தள்ளிக் கொண்டிருக்கும் ஈ.பி.ஆர். எல்.எஃப். இயக்கத்தின் ஒற்றுமைப் பேச்சுக்கள் கபடத்தனமானவை' என்று ஈரோஸ் இயக்கத்தினர் கூறினர்.

'வடக்கு-கிழக்கு மாகாண சபையைப் பலப்படுத்தி, ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கம் தான் தலைமைச் சக்தி என்று முதன்மைப் படுத்தும் முயற்சி இது.' என்று புளொட் கூறியது.

முயற்சி கைகூட முன்னரே தேசியக் கவுன்சில் வாழ்க என்று வீதி வீதியாக எழுதத் தொடங்கிவிட்டனர்.

### கலைஞர் முயற்சி

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் சந்தித்து வடக்கு-கிழக்கு நிலவரங்கள் தொடர்பாக விளக்கினார்கள்.

உத்தியோகபூர்வமற்ற இந்தச் சந்திப்புக்களில் புலிகள் இயக்க அரசியல் பிரிவுச் செயலாளர் பேபி சுப்பிரமணியமும் கலந்து கொண்டார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையைக் கலைத்துவிட்டு விடுதலைப் புலிகளிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் என்ற கருத்தை கலைஞர் கருணாநிதியை ஏற்கச் செய்துவிட்டனர்.

ஏனைய இயக்கங்களால் புலிகளைத் தாக்குப் பிடித்து நிற்க முடியாது. எனவே அதிகாரத்தை புலிகளிடம் கொடுத்துவிடலாம் என்பதே நியாயம் என்ற அபிப்பிராயத்துக்கு கலைஞர் சென்றார். அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது.

இந்திய மத்திய அரசில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டே தீரும், நாடாளுமன்றத் தேர்தலில் ராஜீவ் அரசு தோல்விகாணும் என்பது முன்கூட்டியே தெரிந்துவிட்டது.

தேசிய முன்னணியில் தி.மு.க.வும் ஒரு அங்கம். தேசிய முன்னணி பதவிக்கு வந்து, வி.பி.சிங் பிரதமரானால் இந்தியப் படை வாபஸ் பெறப்படுவது உறுதியிலும் உறுதி என்பது கலைஞருக்குத் தெரியும்.

அப்படி வாபசானால் மாகாணசபை ஆட்சியும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். போன்ற இயக்கங்களும் இந்தியப்படைக்கு முன்னரே இந்தியாவுக்கு தப்பி ஓடிவந்துவிடுவார்கள் என்று கலைஞருக்குப் புலிகள் விளக்கி இருந்தனர்.

இந்தியப் படையையே எதிர்த்து போரிடும் புலிகளுக்கு ஏனைய இயக்கங்கள் எம்மாத்திரம்? என்று நினைத்தாரோ என்னவோ புலிகளுக்கு முழுச் சார்பான போக்கைக் கைக்கொண்டார் கலைஞர் கருணாநிதி.

இக் கட்டத்தில் வவுனியாவில் இந்தியப் படையின் சிறையில் இருந்த தமது போராளிகளை மீட்க அதிரடி நடவடிக்கை ஒன்றுக்கு திட்டமிட்டனர் புலிகள்.

கச்சிதமாக நடத்தப்பட்ட அந்த சிறையுடைப்புப் பற்றிய விபரங்களை அடுத்த வாரம் தருகிறேன்.

(தொடர்ந்து வரும்)

### "வாலிபர்கள் போராடுவார்கள்" 1976 இல் தந்தை செல்வா

**த**மிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், முதறிஞருமான தந்தை செல்வநாயகம் கடைசிக் காலத்தில் வெளியிட்ட கருத்துக்களை கூட்டணியினர் மறைத்தாலும் உண்மைகள் உறங்காது அல்லவா. இதோ ஒரு செய்தி.

"தமிழினத்தின் விடுதலை என் சீவிய காலத்துக்குள் கைகூடிவிடும் என்ற எதிர்பார்க்கிறேன். தற்செயலாக எனது காலத்துக்குள் கைகூடாது போனால் வாலிபர்களாகிய நீங்கள் தொடர்ந்து போராடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அந்த உணர்வுடன் நான் கண்மூடுவேன்."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் கொழும்பு சட்டக்கல்லூரி தமிழ் மாணவரின் முத்தமிழ் விழாவில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது: "நான் கண் மூடுவதற்கு முன் தமிழ் மக்களின் விடுதலை கைகூடவேண்டுமென விரும்புகிறேன். உங்கள் உணர்ச்சி தமிழ் மக்களின் எதிர்காலத்தைமிட்டு நம்பிக்கை தருவதாக இருக்கிறது."

நன்றி– உதயசூரியன்
10.09.1976
–கூட்டணியின் வெளியீடு.

### வன்னிக் களக் காட்சிகள்





முதல் படத்தில் கிரனேட் லோஞ்சர் சகிதம் தமது காவலரணில் காத்து நிற்கின்றனர் புலிகள் இயக்க உறுப்பினர்கள். இரண்டாவது படத்தில் இருப்பது வன்னிச் சமரில் புலிகளால் கைப்பற்றப்பட்டு சேதமாக்கப்பட்ட யுத்த டாங்கிகள்.



படிப்பகம்

www.padippakam.com

# தலைநகரின் இதயத்தில் வெடித்த குண்டு

## அலசுவது- இராஜதந்திரி

அமெரிக்கா தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தனது பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் சேர்த்துள்ளது. ஆனால் புலிகள் இது குறித்து எவ்விதத்திலும் அடிபணிந்து விடவில்லை என்பதை வெளிக்காட்டுவதாகவே கொழும்பு கோட்டையில் இடம் பெற்றுள்ள 'கலதாரி' குண்டு வெடிப்புச் சம்பவம் விளங்குகின்றது.

இலங்கையிலுள்ள முக்கிய ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் ஒன்றே கலதாரியாகும். இதன் அமைவிடம் கேந்திர முக்கியத்துவம் மிக்க பகுதியிலேயே காணப்படுகின்றது.

கடந்தவாரம் ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்ட உலக வர்த்தக நிறுவனக் கட்டடம் (World Trade Centre), மற்றும் இலங்கை வங்கியின் தலைமையகக் கட்டடம், ஜனாதிபதியின் செயலகம், இராணுவத் தலைமையகம், கடற்படைத் தலைமையகம், சற்றுத் தொலைவில் விமானப்படைத் தலைமையகம், அரசசார்பு லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் போன்ற முக்கிய கட்டடப் பகுதிகள் ஆகியன 'கலதாரி' ஐந்து நட்சத்திர ஹோட்டலின் சுற்றாடலில் அமைந்துள்ளன.

கடந்த ஆண்டு கடுந்தாக்குதலுக்குள்ளான இலங்கை மத்திய வங்கிக் கட்டடம், சிலிங்கோ கட்டடம், போன்றவற்றிலிருந்தும் கூப்பிடு தூரத்திலேயே கலதாரி ஹோட்டல் இருக்கின்றது.

**இந்நிலையில் கடந்த பௌர்ணமி தினத்தன்று ஒரு விடுமுறை தினத்தில் அக்குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது. இதனால் உயிர், உடமைச் சேதங்கள் பெரிதும் குறைவாக இருக்கலாம். ஆனால் இலங்கை அரசின் பாதுகாப்புக்கும், அதன் பொருளாதார நடவடிக்கைகளுக்கும், உல்லாசப் பயணத்துறைக்கும் வீழ்ந்த அடிமிகப் பலமானதாகவே உள்ளது.**

கலதாரி குண்டு வெடிப்பையடுத்து காயமடைந்தவர்களைப் பார்வையிட உல்லாசப் பயணத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா கொழும்பு வைத்தியசாலைக்குச் சென்றிருந்தார்.

அங்கு வைத்து பத்திரிகையாளர்களிடம் பேசிய அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா, தமது அரசின் பாதுகாப்புச் சேவையில் நிலவிய தளர்வை ஒளிவு-மறைவின்றி ஏற்றுக் கொண்டிருந்தார்.

கடந்த ஆண்டு எத்தகைய வடிவில் மத்தியவங்கிக் குண்டுத் தாக்குதல்

இடம்பெற்றதோ, அதே வடிவிலேயே 'கலதாரி' குண்டுச் சம்பவமும் நடந்திருந்தது என்றும், பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட படுமோசமான தளர்வையே இச்சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது எனவும் திரு. தர்மசிறிசேனநாயக்கா கூறியிருந்தார்.

முன்பு பொதுசனத் தொடர்புத்துறை அமைச்சராக இருந்த திரு. தர்மசிறி சேனநாயக்கா தற்போது உல்லாசப் பயணத்துறையையே முழு அளவில் கவனித்து வருகின்றார். இலங்கையில் உல்லாசப் பயணத்துறை சார்ந்த பல்வேறு மகாநாடுகள், கருத்தரங்குகள் என்பவற்றைக்கூட அவர் நடத்தி வருகின்றார்.

இக் கூட்டங்கள், கருத்தரங்குகளில் பேசும்போதெல்லாம், "இலங்கையில் ஓர் உள்நாட்டு யுத்தம் நடப்பது உண்மைதான். ஆனால் அந்த யுத்தம் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களிலேயே இடம்பெறுகின்றது. கொழும்பு மநாகரமும், நாட்டின் ஏனைய பகுதிகளும் மிகவும் பாதுகாப்பாகவே உள்ளன," என்றே திரு. தர்மசிறி சேனநாயக்கா தமது உரையை நிகழ்த்துவது வழக்கமாகும்.

**ஆனால் இலங்கையின் வடக்கு-கிழக்கில் மட்டுமல்ல, தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பாதுகாப்புப் பலமற்றதாக இருக்கின்றதென்பதையே கலதாரி குண்டு வெடிப்பு நிரூபித்துள்ளது.**



இதுதவிர இலங்கை அரசினால் எவ்விதத்திலும் தகுந்த பாதுகாப்பை மேற்கொள்ள முடியாது என்பதையும் கூட தலைநகரின் இதயப்பகுதியில் நடைபெற்றுள்ள குண்டு வெடிப்புச் சம்பவம் எடுத்துக் காட்டியுள்ளது.

குண்டு வெடிப்புக்குள்ளான கலதாரி ஹோட்டல் மற்றும் குண்டின் அதிர்வினால் சேதமுற்ற ஹில்ட்டன் ஹோட்டல் ஆகியன முதல்தர ஐந்து நட்சத்திர ஹோட்டல்களாகும்.

இவற்றுக்கு வரும் விருந்தினர்களில் பெரும்பாலானோர் முக்கிய வர்த்தக-கைத்தொழில் புள்ளிகளாகவே இருப்பதுண்டு.

**இவ்விருந்தினர்கள் இலங்கையில் முதலீடுகளைச் செய்வது, அவைபற்றிய தகவல்களைத் திரட்டுவது, சந்திப்புக்களை மேற்கொள்வது போன்றவற்றுக்கெல்லாம் ஹில்டன், கலதாரி ஹோட்டல்களையே பிரதானமையங்களாகக் கொள்வதுண்டு.**

**இவை தவிர இலங்கையில் இடம்பெறும் சர்வதேச தரத்திலான கூட்டங்கள், கருத்தரங்குகள் என்பவைகூட இந்த இரு ஹோட்டல்களிலுமே முக்கியமாக இடம்பெறுவதுண்டு. இந்நிலையில் இந்த இரு ஹோட்டல்களுக்கும் ஏற்பட்ட தாக்கங்கள், இலங்கை அரசு கட்டியெழுப்ப முனையும் பொருளாதார ரீதியான அத்திவாரங்களை தகர்த்துவிடுவதாகவே இருக்கின்றன.**

கலதாரி ஹோட்டலை நோக்கிக் கொண்டுவரப்பட்ட குண்டு, மத்திய வங்கியை நோக்கிக் கடந்த ஆண்டு கொண்டுசெல்லப்பட்ட பாணியிலேயே அமைந்திருந்தது.

கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் ஆங்காங்கே ஆயுதங்கள், வெடி பொருட்கள் என்பவற்றைக் கண்டுபிடித்துவிட்டு, "பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. முக்கிய சூத்திரதாரிகள் கைது" என்று பாதுகாப்புத்தரப்பினர் அறிவிப்பதுண்டு.

ஆனால் எத்தகையதொரு பாதுகாப்பு நடவடிக்கையையும் மிஞ்சிவிட்டதாகவே கலதாரி குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் அரசின் பொருளாதார நடவடிக்கைகளைத் திணறடிக்கச் செய்வதிலேயே குறியாக இருந்துள்ளார்கள் என்பதே தெட்டத் தெளிவாகியுள்ளது.

குண்டுவெடிப்பு நடைபெற்றபோது கலதாரி ஹோட்டலில் அமெரிக்காவின் 'கிறீன் பேரட்' என்றழைக்கப்படும் கொமாண்டோக்கள் 15 பேர்வரை தங்கி இருந்துள்ளனர்.

சமாதானம், ஜனநாயகம் பற்றி உதட்டளவில் தம்பட்டம் அடித்துக்கொண்டு, இலங்கை யுத்தத்தில்

> **கொழும்பு குண்டு வெடிப்பு அரசியல் தீர்வின் அவசியத்தை உணர்த்தி உள்ளது.**
> *ஜனாதிபதி சந்திரிக்கா*
>
> **கொழும்பு கோட்டையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு அமெரிக்க ஏகாதிபத்தியக் கொள்கைக்கு ஒரு பலத்த அடியாகும். ஏகாதிபத்தியவாதிகளின் முகத்தில் ஓங்கி அறைந்தது போல் இருக்கிறது.**
> *விக்கிரமபாகு கருணாரட்ன*
> *நவ சமசமாஜக் கட்சி*
>
> **கொழும்பு கோட்டையில் நடைபெற்ற குண்டுவெடிப்பு இனப்பிரச்சனைக்கு உடனடித் தீர்வு தேவை என்பதை வலியுறுத்தும் முன்னறிவித்தல் ஆகும்.**
> *அமைச்சர் அஷ்ரப்*
> *ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.*

அமெரிக்காவும் ஒரு பங்காளியாக மாறியுள்ளமை வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

**புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பு என்ற பட்டியலில் சேர்த்துள்ள அமெரிக்கா, இங்கு நடைபெறும் பயங்கரப் போருக்கு தன் பயிற்சியாளர்களையும் உடனடியாக அனுப்பிவைத்துள்ளது.**

'கிறீன் பேரட்' என்றழைக்கப்படும் அமெரிக்க கொமாண்டோக்கள் இலங்கைப் படையினருக்கு பயிற்சி கொடுக்கவந்திருப்பது இது மூன்றாவது தடவையாகும்.

ஆகவே அமெரிக்கா புலிகளை தடை செய்தமையானது, இலங்கையில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் அல்ல என்பதும், தமது ஆதரவும் ஆலோசனையும் பெற்றுள்ள அரச படையினரின் வெற்றி வாய்ப்பைத் துரிதப்படுத்தவே என்பதும் புலனாகியுள்ளது.

இந்நிலையில், அமெரிக்கா புலிகளைதடை செய்த சூட்டோடு சூடாக கொழும்பின் இதயப்பகுதியில் நடைபெற்ற குண்டுவெடிப்பு அமெரிக்காவுக்கும் நெற்றியடியாகவும், அதன் முகத்தில் ஓங்கி அறைந்தது போலவுமே அமைந்திருந்தது.

"அமெரிக்கத் தடை காரணமாக புலிகளுக்கு சர்வதேச அரங்கில் பலத்த பின்னடைவுகள் தோன்றியுள்ளன. நெருக்கடிகள் உருவாகியுள்ளன" என்று அரசு பிரசாரம் செய்து வந்தது.

**உள்நாட்டில் மட்டுமல்ல, உலக அரங்கிலும் புலிகளுக்கு எதிரான நகர்வுகளையே அரசு தனது அரசியல் இலாபத்துக்கான பிரசாரமாக தென்னிலங்கையில் முன்னெடுத்துச் செல்வதையும் அவதானிக்க முடிந்தது.**

ஆனால் கொழும்பு குண்டுவெடிப்பானது அரசின் பிரசாரங்களுக்கும் பலத்த அடியாக அமைந்திருந்தது. அமெரிக்கத் தடை தங்களை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்பதையும் புலிகள் உணர்த்தியுள்ளனர்.

இதேவேளை கொழும்பு குண்டுவெடிப்பு இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வின் அவசியத்தை உணர்த்தியுள்ளதாக ஜனாதிபதி சந்திரிக்கா தெரிவித்துள்ளார். கொழும்பு குண்டுவெடிப்பை அடுத்து தமிழ்மக்களுக்கு எதிரான வன்செயல்கள் நடைபெறாமல் தடுத்ததாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஆனால் கொழும்பில் இதுவரை நடந்த குண்டு வெடிப்புக்களைவிட கலதாரி குண்டுவெடிப்பில் உயிரிழப்புக்கள் குறைவாகவே இருந்தன. அதுதவிர வெளிநாட்டு உல்லாச பயணிகளை அச்சுறுத்தும் வகையிலேயே குண்டு வெடிப்பு இடம்பெற்றிருந்தது.

சாதாரண சிங்கள மக்களும் நிலமைகளையும், நோக்கங்களையும் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு தற்போது பழக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், தமிழருக்கு எதிரான வன்செயல்கள் நடைபெறாமல் தடுக்கப்பட்டதாக கூறுவது, அவ்வாறான எண்ணம் இல்லாதோருக்கும் அந்த எண்ணத்தை ஏற்படுத்திவிடுவதாகவும் அமைந்துவிடும்.

கொழும்பில் தமிழருக்கு எதிரான பாரிய வன்செயல்கள் நடைபெற்றிருக்குமானால்,

அரசுக்கும் உலக அரங்கில் அவப்பெயர்தான் ஏற்பட்டிருக்கும்.

எனினும் குண்டுவெடிப்பை அடுத்து தனியார் வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டன என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருப்பது சரியான கூற்றேயாகும்.

**சிங்கள தனியார் வானொலி ஒன்று கிரிக்கெட் வர்ணனை போல தொடர்ச்சியாக குண்டுவெடிப்பு பற்றிய விவரணங்களை வெளியிட்டுக் கொண்டிருந்தது. தப்பான பல தகவல்கள் சொல்லப்பட்டன.**

அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் தமது நம்பகத்தன்மையை துரிதமாக இழந்துவருவதால், பொதுமக்கள் இவ்வாறான தனியார் வானொலிகள் மற்றும் தொலைக்காட்சிகளின் செய்தி அறிக்கைகளை நம்பும் நிலைக்கு இட்டுச் செல்கின்றன.

**ஜனாதிபதியே கூறியிருப்பதுபோல கொழும்பு குண்டுவெடிப்பு அரசியல் தீர்வின் அவசியத்தையே உணர்த்தியுள்ளது.**

**ஆனால் எத்தகைய அரசியல்தீர்வின் அவசியத்தை என்பதை அரசாங்கமும் இன்றுவரை புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை என்பதுதான் துரதிஷ்டம்.**

தற்போது அரசின் கையில் இருக்கும் அரசியல் தீர்வு யோசனைகள் நிரந்தரத் தீர்வாகக் கொள்ளப்பட முடியாதவை என்பதை தமிழ்க்கட்சிகள் பல கூறியுள்ளன.

**ஆனால் இத்தகைய குறைந்த பட்ச தீர்வுகளை தென்னிலங்கையில் விற்கவும்கூட புலிகளின் நடவடிக்கைகளை காட்டித்தான் விளம்பரம் செய்ய வேண்டி இருக்கிறது என்பதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.**

சிங்களக் கமிஷன் அறிக்கை பிரபாகரனுக்கு இலாபகரமானது என்று அமைச்சர் மங்கள சமரவீர முன்னர் கூறியிருந்தார்.

கொழும்பு குண்டுவெடிப்பு அரசியல்தீர்வின் அவசியத்தை உணர்த்துவதாக ஜனாதிபதி கூறியிருக்கிறார். மொத்தத்தில் பிரபாகரனும், புலிகளும்தான் தமிழ்பேசும் மக்களுக்கு வழங்கப்படக்கூடிய தீர்வுகளின் அவசியத்தை தென்னிலங்கையில் உணர்த்த அரசுக்கு உதவுகிறார்கள்.

**பயங்கரவாதிகள் என்று புலிகளை அரசு கூறினாலும், இனப்பிரச்சனையின் தீவிரத்தை உணர்த்த புலிகளையே உதாரண புருஷர்களாகவும் அரசாங்கம் சுட்டிக்காட்ட வேண்டி உள்ளது.**

தமிழ் பேசும் மக்களுக்கும், உலகுக்கும் சிங்களக் கமிஷன், எதிர்க்கட்சி போன்றவை தீர்வை எதிர்க்கின்றன என்று சுட்டிக்காட்டிக் கொண்டு, குறைந்த பட்ச தீர்வை நியாயப்படுத்த முயல்கின்றனர் ஆட்சியாளர்கள்.

மறுபுறம் சிங்கள மக்களுக்கு புலிகளின் நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி, தாங்கள் வழங்கும் குறைந்த பட்சத் தீர்வின் அவசியத்தை உணர்த்த முயலுகின்றனர்.

இவ்வாறு இரண்டு தோணியில் கால்வைத்துக்கொண்டு நிற்பதால்தான் நிரந்தரத் தீர்வு என்ற கரையை சென்றடைய முடியாமல் ஆட்சியாளர்கள் தடுமாறுகின்றனர்.

**அரசியல்தீர்வை வழங்கியே தீருவோம் என்று குண்டுவெடிப்புக்கள் மத்தியிலும் ஜனாதிபதி கூறுவது உலக அரங்கில் வரவேற்புப் பெறக்கூடிய பேச்சுத்தான். ஆனால் நியாயமான தீர்வொன்றை வழங்கும் துணிச்சல் இருந்தால் மட்டுமே நாட்டை அழிவுப் பாதையில் இருந்து மீட்க முடியும்.**

அதற்கு தற்போது அரசின் கையில் உள்ள தீர்வு யோசனைகள் உதவப்போவதில்லை. அமெரிக்கா போன்ற வெளிச் சக்திகள் மூலம் உலக அரங்கில் இருந்து புலிகளைத் தனிமைப்படுத்தி, நெருக்கடிக்கு உள்ளாக்கி இன்றைய தீர்வு யோசனைகளை புலிகளும் ஏற்கச் செய்யலாம் என்பதே அரசின் தந்திரோபாயம்.

ஆனால் அந்தத் தந்திரோபாயம் தங்களிடம் செல்லாது என்பதையே புலிகள் உணர்த்தி வருகின்றனர். இந்நிலையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றின் ஊடாக திறந்த மனதோடு அரசியல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதே உரிய வழியாகும்.

---

## கதிர்காமர் அமெரிக்கா கதிர்காமம் கலதாரி

கதிர்காமர், அமெரிக்கா, கதிர்காமம் மூன்றுக்கும் இடையே சுலபமாக ஒரு முடிச்சுப்போடலாம்.

வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் அமெரிக்கா சென்றார். புலிகளைத் தடை செய்யும்படி அவர் விடுத்திருந்த நீண்டநாள் கோரிக்கை நிறைவேறியது.

அமெரிக்கா புலிகளைத் தடைசெய்ய முன்பாக அந்த நாட்டின் பிரதி வெளிநாட்டமைச்சர் இலங்கைக்கு வந்தார்.

வன்னிக் களம் சென்று போர் நிலவரங்களைப் பார்வையிட்டார். தமது ஆயுத உதவிகள், ஆலோசனைகள் எந்தளவுக்கு பயன் அளிக்கின்றன என்று நேரில் காண விரும்பினாராக்கும்.

அமெரிக்காவுக்கு எப்போதுமே தன் ஆயுதங்களும், ஆலோசனைகளும் ஆற்றல்மிக்கவை என்று நினைப்பு.

இப்படித்தான் இஸ்ரேல் பெறும் ஒவ்வொரு வெற்றியையும் தனது வெற்றியாக அமெரிக்கா எண்ணி மகிழ்ந்தது உண்டு.

சோவியத் கொடுத்த பயிற்சியும், ஆயுதங்களும் தரமற்றவை. அதனால்தான் சிரியா போன்ற நாடுகள் இஸ்ரேலிடம் அடிவாங்குகின்றன என்று அமெரிக்கா கேலி செய்தது ஒரு காலத்தில்.

இலங்கைப் படையினருக்கும் அமெரிக்கப் பயிற்சியாளர்கள் இங்கு வந்தும், அமெரிக்காவில் வைத்தும் தீவிரப் பயிற்சிகள் கொடுத்துள்ளனர்.

தற்போது 'ஜயசிக்குறுய்' நடவடிக்கைக்கு பொறுப்பாக உள்ள சில அதிகாரிகளும் அமெரிக்காவில் பயிற்சி பெற்றுவிட்டு வந்தவர்கள்தான்.

தனது பயிற்சியும், ஆலோசனைகளும் பயன்படாது போனால் அமெரிக்கா உள்ளூர வருதப்படவே செய்யும்.

வன்னிக் கள நிலவரத்தை பார்வையிட்ட பின்னர், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளையும் கொழும்பில் வைத்து சந்தித்தார் அமெரிக்க பிரதி வெளிநாட்டமைச்சர்.

கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் புலிகளுடன் பேசுவதற்கு என்ன இருக்கிறது? என்று கேள்வி எழுப்பி பிரதி வெளிநாட்டமைச்சரை சந்தோசப்படுத்திய செய்தி முன்னரே முரசில் வந்திருந்தது.

புலிகளை தடை செய்ய முன்னர் தமிழ்க் கட்சிகளின் நாடித்துடிப்பை அறிந்துவிட்டுத்தான் போனார் அமெரிக்க பிரதி வெளிநாட்டமைச்சர். நாடித்துடிப்பு அமெரிக்காவின் விருப்பத்திற்கு ஏற்பவே இருந்தது.

அதன் பின்னர் நமது வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் அமெரிக்கா சென்றார். அமெரிக்கா புலிகளை தடை செய்த அறிவிப்பும் வெளியானது.

அமெரிக்கா புலிகளை தடை செய்த அறிவிப்பு வெளியான பின்னர் 10.10.97 அன்று இரவு கதிர்காமம் பஸ் நிலையத்தில் ஒரு பாரிய தாக்குதல் இடம்பெற்றது.

கதிர்காமம் யால காட்டுப் பகுதியைச் சார்ந்த பிரதேசமாகும். யால காட்டுப் பகுதியில் பல தாக்குதல் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடந்து வருகின்றன. யால விலங்குகள் சரணாலயத்தின் எல்லைப் புறமாக இருக்கிறது கதிர்காமம்.

யால சரணாலயம் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவருகின்ற மையங்களில் ஒன்றாகும். அதனால் யால காட்டுப் பகுதியில் நடைபெறும் தாக்குதல்களை அரசாங்கமும் பெரிதாக வெளியில் சொல்வதில்லை.

படையினர் சிலர்தான் அங்கு நடைபெறும் சம்பவங்களுக்கு காரணம் என்றே கூறப்பட்டுவந்தது. யாலவில் விடுதிகள் எரிக்கப்பட்ட சம்பவத்தின் பின்னர் சில இராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர்.

காணாமல்போன ஜீப்பின் உதிரிப்பாகங்கள் அவர்களிடம் இருந்ததாகக் கூறப்பட்டது. ஒருவேளை தாக்குதல் நடந்த பின்னர், நடந்ததோடு நடந்ததாக ஜீப் ஒன்றை தாங்கள் அமுக்கிக் கொள்ள நினைத்துதான் மாட்டுப்பட்டார்களோ என்றும் தெரியவில்லை.



எனினும் யால சம்பவங்களுக்கு படையினரே காரணம் என்று சில தென்னிலங்கை பத்திரிகையாளர்களும் கூறிக்கொண்டிருந்தனர்.

இந்நிலையில்தான் எவ்வகையிலும் மறைக்க முடியாதளவான பாரிய தாக்குதல் ஒன்று 10.10.97 அன்று கதிர்காமத்தில் நடந்திருக்கிறது.

கதிர்காமம் பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த 19 பஸ்வண்டிகள் நாசமாக்கப்பட்டன. முற்றாகத் தீயில் எரிந்தன. பஸ் நிலையமும் நாசமானது. ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு காரியத்தில் படையினரில் ஒரு பகுதியினர் துணிச்சலாக ஈடுபட முடியாது. ஏனெனில் அங்கிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் வீரவில இராணுவ தளம் இருக்கிறது. கதிர்காமத்தில் பொலிஸ் நிலையமும் உண்டு. எனவே மாட்டுப் படக்கூடிய அபாயம் இருப்பதால் துணிந்திருக்க மாட்டார்கள்.

தாக்குதலில் ஈடுபட்டவர்கள் அதிகாலைவரை அப் பகுதியில் இருந்துள்ளனர்.

தாக்குதலுக்கு வந்தவர்களின் துணிச்சல், மற்றும் குறிப்பிட்ட தாக்குதலின் காரணமான விளைவுகள் என்பவற்றை பார்க்கும்போது படையினரில் ஒரு பகுதியினர் செய்த காரியமாகத் தெரியவில்லை.

புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தால் பின்வரும் நோக்கங்கள் இருக்கலாம்.

1) யால சரணாலயத்துக்கும், அதனைச் சார்ந்த பகுதிகளுக்கும் உல்லாசப் பயணிகள் செல்லாமல் தடுப்பது.
2) தென்னிலங்கையின் நுழைவாயிலுக்குள் புகுந்து தாக்குவது மூலம், அப் பகுதிகளின் பாதுகாப்புக்கு படையினரின் எண்ணிக்கையை அதிகப்படுத்தச் செய்வது. அதன் மூலம் போர் முனையில் படைக் குவிப்பை தடுப்பது.
3) அரசுக்கு பொருளாதார நஷ்டங்களை ஏற்படுத்துவது.
4) வடக்கு-கிழக்கின் எல்லைகளுக்குள் மட்டும் யுத்தத்தை கட்டுப்படுத்திக் கொண்டு, நாட்டின் ஏனைய பகுதிகளில் பாதுகாப்பு திருப்திகரமாக இருக்கிறது என்று அரசு சித்தரிப்பதை பொய்யாக்குவது.

இன்னொரு முக்கிய காரணமும் இருக்கிறது.

இலங்கைப் படையினருக்கு அமெரிக்க கொமாண்டோக்கள் பயிற்சி கொடுக்கும் பிரதான இடம் வீரவில.

கதிர்காமத்தில் இருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வீரவிலவில் இராணுவ முகாம், விமானத்தளம் என்பன இருக்கின்றன. திறந்த வெளிச் சிறைச்சாலையும் உண்டு.

வீரவில முகாம்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும், அங்கு அமெரிக்க கொமாண்டோக்கள் சென்று பயிற்சி அளிப்பதை அச்சுறுத்தவும்கூட கதிர்காமத் தாக்குதல் ஒரு பரீட்சார்த்தமாக நடத்தப்பட்டிருக்கலாம். இதன் தொடர்ச்சியான தாக்குதல்கள் மேலும் அங்கு நடக்கவும் சாத்தியம் இருக்கிறது.

தென்னிலங்கையில் தமது தாக்குதலின் பாணியை புலிகள் மாற்றியுள்ளனர். பொதுமக்களுக்கு அதிக சேதமில்லாமல், அரசுக்கு பொருளாதார நஷ்டத்தை ஏற்படுத்தும் விதமான தாக்குதலாக கலதாரி குண்டுவெடிப்பு நடத்தப்பட்டது.

கலதாரி குண்டுவெடிப்புக்கு ஐந்து நாட்களுக்கு முன்பாக நடத்தப்பட்ட கதிர்காம பஸ் நிலையத் தாக்குதல் புலிகளின் புதிய பாணித் தாக்குதலுக்கு பிள்ளையார் சுழிபோல உள்ளது.

ஏனெனில், அங்கும் கட்டடங்களும், அரச உடமைகளும் மட்டுமே குறியாக இருந்துள்ளன. பொதுமக்கள் நடமாடாத இரவு நேரத்தில் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

கலதாரி குண்டுவெடிப்பின் பின்னர் ஒலிநாடா ஒன்று கண்டெடுக்கப்பட்டது. 'பொதுமக்களை அழிப்பது எங்கள் நோக்கமல்ல. கட்டடங்களை நாசமாக்குவதே நோக்கம்' என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கதிர்காமத் தாக்குதல், கலதாரித் தாக்குதல் இரண்டும் ஒத்துப்போகின்றன.

இன்னொரு ஒற்றுமையும் இருக்கிறது. கதிர்காமத்துக்கு அருகே வீரவிலவில் அமெரிக்க கொமாண்டோக்கள் பயிற்சி கொடுக்க தங்கி இருந்தனர். கலதாரியிலும் அமெரிக்க கொமாண்டோக்கள் தங்கியிருந்தனர். ஆனால் கலதாரியில் அமெரிக்க கொமாண்டோக்கள் தங்கியிருந்த தகவல் புலிகளுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.


படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான்தேவி

66

தருவது ரசிகன்

கிராமத்துக்குள் கொள்ளைக் கோஷ்டி புகுந்து விட்டது என்ற தகவல் பொலிசாருக்கு எட்டியதும் அவர்கள் உடனே புறப்பட்டு வந்தனர்.

கிராம எல்லையில் தனது ஆட்களில் இருவரை மான் சிங் காவலுக்கு நிறுத்திவிட்டுத்தான் சென்றிருந்தான்.

பொலிசார் வருவதைக் கண்டதும் அவர்கள்தான் ஓடிவந்து தகவல் கொடுத்தனர்.

"பொலிஸ்.. பொலிஸ் வருகிறது" என்று முதலில் பூலானிடம்தான் சொன்னார்கள். பூலானுக்கு அவர்கள் சொன்னது காதில் விழுந்தமாதிரித் தெரியவில்லை.

சுட்டுக் கொல்லப்பட்ட பண்ணையார்கள் இரத்த வெள்ளத்தில் எருமைகள் போல விழுந்து கிடந்தார்கள்.

கிராமம் எங்கும் அவலக்குரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

அன்று ஸ்ரீராமும் அவன் ஆட்களும் தன்னை வதைத்தபோது கிராமமே கைகொட்டிச் சிரித்த காட்சியை மனக் கண்ணில் நிறுத்திப் பார்த்தாள் பூலான்.

அதனால் அவலக்குரல்கள் எதுவும் அவள் மனதில் சங்கடத்தையோ, பரிதாபத்தையோ தோற்றுவிக்கவில்லை.

பூலானிடம் சொன்ன தகவலை மான் சிங்கிடம் ஓடிப்போய் தெரிவிக்க, அவன் உஷாரானான்.

நெருக்கடியான தருணங்களில் தங்கள் குழுவினரை எச்சரிக்கவும், வாபஸ் பெறச் செய்யவும் விசில் ஊதுவதுதான் வழக்கம்.

அன்றும் மான் சிங் விசில் எடுத்து ஊதினான். பண்ணையார் வீடுகளுக்குள் கொள்ளையிட்டுக் கொண்டிருந்தவர்கள் விசில் சத்தம் கேட்டதும் வெளியே ஓடி வந்தார்கள்.

மான் சிங் பூலானை கையில் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடினான்.

அப்போதுதான் பூலானுக்கு சூழ்நிலையின் விபரீதம் புரிந்தது.

அந்தக் கிராமத்தில் இருந்து வெளியே செல்லக்கூடிய வழிகள் பற்றி முன்கூட்டியே மான் சிங் அறிந்து வைத்திருந்தான்.

அதனால் பொலிசார் கிராமத்துக்குள் புகுந்தபோது, மறு பாதை வழியாக தன் ஆட்களை அழைத்துக் கொண்டு வெளியேறினான் மான் சிங்.

பொலிசார் தங்களைப் பின் தொடர்ந்து வராமல் இருப்பதற்காக, வானத்தை நோக்கி சுட்டுக்கொண்டுதான் அவர்கள் கிராமத்தைவிட்டு வெளியேறினர்.

பல கிராமங்களைச் சுற்றிக்கொண்டு தான் அவர்கள் தங்கள் இடத்திற்கு செல்ல வேண்டி இருந்தது. செல்லும் வழியில் ஓரிடத்தில் சற்று நேரம் ஓய்வெடுத்தார்கள்.

பண்ணையார் வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளையும், பணத்தையும் பூலானிடம் கொடுத்தார்கள்.

பூலானுக்கு எல்லாமே பிரமிப்பாக இருந்தது. மான் சிங்கை நோக்கினாள்.

"பெற்றுக்கொள்ளுங்கள். குழுவுக்கு யார் தலைமை தாங்குகிறார்களோ, அவரிடம்தான் கொள்ளையிட்ட பொருட்களை ஒப்படைக்க வேண்டும். அதுதான் எங்கள் விதிமுறை. இவற்றை உங்கள் கைகளால் பாபாவிடம் ஒப்படைக்கலாம்." என்றான் மான்சிங்.

பூலான் அனைத்தையும் பெற்றுக் கொண்டாள். ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டாள். அந்த மூட்டையை ஒருத்தன் சுமந்து செல்ல, பாபாவின் இருப்பிடம் நோக்கிச் சென்றார்கள்.

விக்கிரம் மல்லாவை பூலான் நினைத்துக் கொண்டாள். மல்லா சொன்னது போலவும், அவன் விரும்பியது போலவும் கொள்ளைராணியாக தான் மாறிவிட்டதை நினைக்க அவளுக்குத் திருப்தியாக இருந்தது.

பூலானுக்கு ஆவிகளிலும் நம்பிக்கை இருந்தது. மல்லா ஆவியாகத் திரிந்து இந்தக் காட்சிகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருப்பான் என்று நினைத்தாள்.

மல்லா தன்னைவிட்டுப் போகமாட்டான். எப்போதும் தன்னைச் சுற்றித்தான் ஆவியாக நடமாடிக்கொண்டிருப்பான் என்று திடமாக நம்பினாள்.

பூலானும், மான் சிங்கும் தங்கள் ஆட்களோடு பாபாவின் இருப்பிடம் சென்ற போது ஆச்சரியம் காத்திருந்தது.

பாபாவே நேரில் வந்து வரவேற்றார்.

"பூலான் தேவிக்கு ஜே" என்று எல்லோரும் உரக்கக் கோஷித்தனர்..

பாபா தன் கண்களில் சந்தோசம் மின்ன பூலானைப் பெருமையுடன் நோக்கினார்.

பூலானுக்கு உணர்ச்சிமயமான அந்தச் சூழல் நெஞ்சுக்குள் குளிர்ந்த தண்ணீரைக் குடம் குடமாகக் கொட்டியது போலிருந்தது.

அன்றிலிருந்து இரண்டாவது நாள் பூலான் தலைமையில் இன்னொரு கிராமத்துக்குள் மான் சிங்கும் பாபாவின் ஆட்களும் புகுந்தனர்.

அதுவும் பண்ணையார்களின் கிராமம் தான். பண்ணையார்களின் வீடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த அரிசி மூட்டைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

பண்ணையார்களின் நான்கு லொறிகளில் அனைத்தும் ஏற்றப்பட்டன.

"எங்கேயடா ஸ்ரீராம்? பண்ணையார் சாதிக்கு பாதுகாப்புக் கொடுக்க வருவானாடா?" என்று கேட்டு ஒரு பண்ணையாரை உதைத்தாள் பூலான்.

பண்ணையாரின் மனைவி பூலானிடம் மன்றாடினாள். "உங்களுக்கு ஸ்ரீராம் ஆட்களில்தானே கோபம்? அவனது சகோதரி அடுத்த வீட்டில்தான் இருக்கிறாள். எங்களை ஒன்றும் செய்யாதீர்கள் அம்மா." என்றாள்.

அதன் பின்னர் பூலான் அங்கு நிற்கவில்லை. ஒரே பாய்ச்சலில் அடுத்த வீட்டுக்குள் பாய்ந்தாள்.

அந்த வீட்டுக்குள் கொள்ளையிட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு, அங்கே இருப்பது ஸ்ரீராமின் சகோதரி என்பது தெரியாது.



பூலான்

அவள் ஒரு மூலையில் பயத்தில் நடுங்கிக்கொண்டு நின்றிருந்தாள். அவள் கணவனும் பக்கத்தில் நின்றான்.

பூலான் நேராகச் சென்று "எங்கேயடி உன் அண்ணன் ஸ்ரீராம்?" என்று கேட்டாள்.

அப்படிக் கேட்டபோதுதான் அவள் முகத்தை தெளிவாகப் பார்த்தாள் பூலான்.

எங்கேயோ அவளைப் பார்த்ததுபோல நினைவு வந்தது. தன் நினைவின் இடுக்குகளில் அவசரமாய்த் தேட, நினைவுக்கு வந்து விட்டது.



ஸ்ரீராமுடனும், குசுமாவுடனும் அவளைப் பார்த்திருக்கிறாள் பூலான்.

பூலானை நிர்வாணமாக்கிவிட்டு ஸ்ரீராமும், குசுமாவும் பல்லைக் காட்டி இளித்துக் கொண்டிருந்தபோது அவர்கள் பக்கத்தில் நின்றவள் அவள்தான்.

பூலான் கூனிக் குறுகிக் கொண்டு, நெஞ்சு வெடித்துவிடும்போல பீறிட்ட துயரத்தை அடக்கிக்கொண்டு தவித்தபோது "தேவடியாள்" என்று சொல்லால் எறிந்தவள் இவள்தான்.

அந்த நினைவு வந்ததும் பூலானுக்கு தன் முன்பாக நிற்பவள் பெண்ணாகவே தெரியவில்லை.

அவளது கூந்தலைக் கொத்தாகப் பிடித்து இழுக்க, அவள் அப்படியே முன் நோக்கிக் கவிழ்ந்து "ஐயோ!" என்று கத்தினாள்.

பூலானின் முழங்கால் அவள் தாடையில் இடியாய் மோதியது.

"ராட்சசி!" என்று திட்டிக்கொண்டே அவளைக் கீழே போட்டு மிதித்தாள். குறுக்கே வந்த அவள் கணவனை மான் சிங் பின்புறமாய் உதைக்க அவன் குப்புற வீழ்ந்தான்.

கணவனும், மனைவியும் கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டிருந்தார்கள்: கதறிக் கொண்டிருந்தார்கள்.

பூலான் அவளின் சேலையை உருவி வீசினாள். அவளின் ரவிக்கையை ஒரே வீச்சில் கிழித்து எறிந்தாள்.

**கடந்த வாரம்**

**ஸ்ரீ ராம் குழுவினர் தன்னைக் கொண்டு சென்று அவமானப்படுத்திய கிராமங்களில் ஒன்றுக்குள் பாபாவின் ஆட்களுடன் செல்கிறாள் பூலான்.**
**ஸ்ரீ ராமுக்கு நெருக்கமான ஐந்து பண்ணையாளர்களை பூலானும், மான்சிங்கும் சுட்டுக் கொல்கிறார்கள்.**
**பண்ணையாளர் வீடுகளில் கொள்ளை அடிக்கிறார்கள்.**
**அப்போது.....**

பூலானின் கோபத்துக்கு தீனி போடுவது போல ஒருவன் ஓடிவந்து "இவன்தான் பொலிசாருக்குத் தகவல் கொடுப்பவன். உயிரோடு விட்டு விடாதீர்கள்!" என்று கூறினான்.

அந்தத் தகவலைக் கூறியவன் பாபா கோஷ்டிக்கு நம்பகமான ஆள். அந்தக் கிராமத்தில் இருந்து தகவல் கொடுப்பவன். பண்ணையார்களிடம் கூலிவேலை செய்பவன்.

அவன் சொன்னதும் மான் சிங், "இவன் பொய் சொல்லமாட்டான்!" என்றான் பூலானிடம்.

அவர்கள் இருவரையும் கயிற்றால் கட்டி வீட்டுக்கு வெளியே இழுத்து வந்தார்கள்.

வீடுகளுக்குள் பதுங்கிக்கொண்டும், பயந்து கொண்டும் இருந்த பண்ணையார்கள் பலரை வீடுகளுக்கு வெளியே அழைத்துவரச் சொன்னாள் பூலான்.

ஒரு கூட்டம்போல பண்ணையார்கள் கூடிவிட்டனர். எல்லோர் முகங்களிலும் கிலி பிடித்திருந்தது.

தங்களில் யாரைச் சுட்டுத் தள்ளப் போகிறார்களோ என்ற மரண பயம் அவர்கள் மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

ஸ்ரீராமின் சகோதரி அரை நிர்வாணமாக அழுது புலம்பிக் கொண்டிருந்தாள். அவள் தாடை வெடித்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது.

அவள் கணவனின் தலையில் இருந்தும், மூக்கில் இருந்தும் இரத்தம் வழிந்தோடியது.

பூலானின் குரல் என்றுமில்லாத கம்பீரமாக எழுந்து உயர்ந்து ஒலித்தது.

"நான்தான் பூலான்தேவி. உங்கள் சாதியால் வஞ்சிக்கப்பட்ட அதே பூலான் தேவி. தெருத் தெருவாக உங்களால் நாய் போல நடத்தப்பட்ட பூலான்தேவி. அப்படி என்னடா செய்தேன் உங்களுக்கு? பாருங்களடா இவளை, இவள் உங்கள் சாதிதானே?. இவளிடம் இல்லாதது எதையடா என்னிடம் கண்டு சிரித்தீர்கள்? உங்கள் பெண்டாட்டிகளிடமும், உங்களைப் பெற்றவர்களிடமும் இல்லாத எதையடா என்னிடம் பார்த்தீர்கள்? நாய்க்கு பிறந்தவர்களா நீங்கள்? தாய்க்கு பிறக்கவில்லையாடா நீங்கள்? சொல்லுங்களடா நாய்களே?"

கூட்டம் தலை குனிந்தது. தங்கள் சாவுகள் உறுதியாகிவிட்டதை நினைக்க அவர்கள் உடல்கள் நடுங்கத் தொடங்கின. பெண்கள் கைகூப்பி அழுது தங்கள் கணவன்மாரின் உயிருக்காக மன்றாடத் தொடங்கினார்கள்.

"அழுங்கள்! அன்று சிரித்தீர்கள் அல்லவா? அழுங்களடி அழுங்கள்! உங்கள் புருசன்மாரை அன்றுமட்டும் இழுத்துக் கொண்டு போகத் தெரியவில்லையே, 'அவளும் எங்களைப் போலப் பெண்தானடா பேடிப் பயல்களே!' என்று கழுத்தில் பிடித்து இழுத்துப் போனீர்களாடி? இப்போது அழுகிறாள்களாம். ஏண்டி உங்களுக்கு .....இல்லையா? ......இல்லையா? எதையடி பார்க்கவிட்டீர்கள் இந்த பண்ணையார் நாய்களை?"

பூலான் வெறிகொண்டவள்போல கத்திக் கத்திக் கேட்டாள்.

கடைசியாகச் சொன்னாள்: "பிழைத்துப் போக விடுகிறேன். ஆனால் இனிமேல் யாராவது ஒரு பெண்ணுக்கு இந்தக் கிராமத்தில் உங்கள் சாதித் திமிரைக் காட்டினீர்கள், நாய்களே! இந்த கிராமத்தையே அழிப்பாள் இந்தப் பூலான் தேவி!"

ஸ்ரீராமின் சகோதரிக்கும், அவள் கணவனுக்கும் தண்டனை கொடுக்கப் போவதாகவும் அறிவித்தாள் பூலான்.

"பொலிசாருக்குத் தகவல் கொடுப்பவன் இவன். ஸ்ரீராமின் இரத்தம் இவள். இரண்டு பேரும் உங்கள் கண்முன்னால் துடி துடித்துச் சாகப் போகிறார்கள். நீங்கள் இங்கே காணப்போகும் காட்சியை ஸ்ரீராமுக்கும், லாலா ராமுக்கும் சொல்ல வேண்டும். ஒவ்வொன்றாகச் சொல்லிச் சொல்லிக் காட்ட வேண்டும்!"

கூறியபடியே பூலான் ஸ்ரீராமின் சகோதரியைச் சுட்டாள்.

'டுமீல்'.

பின்னர் அவளுடைய கணவனைச் சுட்டாள்.

'டுமீல்!'

"அந்த நாய் ஸ்ரீராம் உண்மையான ஆம்பிளையாக இருந்தால் என்னை, இந்தப் பூலான் தேவியை .நேருக்கு நேர் சந்திக்கச் சொல்லுங்கள்!. அவனுக்கு..... மிஞ்சாது."

லொறிகளில் ஏறி அனைவரும் புறப்பட்டனர்.

மான் சிங்குக்கு தான் கண்ட காட்சிகளை நம்பமுடியாமல் இருந்தது. அந்தப் பிரமிப்புடன் அன்றிரவு பூலானை நெருங்கினான்.

**(தொடர்ந்து வரும்)**

## வர்த்தக மைய குண்டு வெடிப்பு

### விஷ ஊசி செலுத்த உத்தரவு!

'சர்வதேசப் பயங்கர வாதம்' என்றதும் உடனே ஞாபகத்திற்கு வருவது அமெரிக்கா தான். தனக்கு விரோதமான உலக நாடுகளின் தலைவர்களைப் படு கொலை செய்வது; ஆட்சிகளைக் கவிழ்ப்பது; உள்நாட்டுப் பூசல்களை தோற்றுவிப்பது என்று அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. கொடிகட்டிப் பறந்தது.



மெய்க் வொய்ஸ்

'தன் வினை தன்னைச் சுடும்' என்று தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது. தனது நலனை பத்திரப்படுத்த உலக நாடுகளின் பத்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாக இருந்தது அமெரிக்கா. ஆனால் அந்த அமெரிக்காவிலேயே குண்டுகள் வெடிக்க ஆரம்பித்தன.

1995ல் நியூயோர்க் உலக வர்த்தக மையக் கட்டடத்தில் குண்டு வெடித்தது.. வர்த்தக மையம் அருகே நிறுத்தப்பட்டிருந்த காரில் இருந்த குண்டுதான் வெடித்தது. இக் குண்டு வெடிப்பின் பின்னரே 'பயங்கரவாதத்தை ஒழிப்பது', 'குண்டு வெடிப்புக்களை கண்டிப்பது' என்று அமெரிக்கா பசப்பத் தொடங்கியது. தன் வினை தன்னைச் சுட்டதால் ஏற்பட்ட கிலிதான் காரணம்!.

வர்த்தக மையக் குண்டு வெடிப்புத் தொடர்பாக கைது செய்யப்பட்ட 'மெய்க் வொய்ஸ்' என்ற பெயருடைய 29 வயது இளைஞருக்கு அமெரிக்க நீதிமன்றம் சமீபத்தில் மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

மெய்க் வொய்ஸ் அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றியவர். வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதைதான். பன்னிரண்டு நீதிபதிகள் கொண்ட விசாரணையின் முடிவில் விஷ ஊசி செலுத்தி மரண தண்டனையை நிறைவேற்றுமாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

'மெய்க் வொய்ஸ் குற்றமற்றவர்; அவரைக் காப்பாற்ற மேல் முறையீடு செய்யப்போகிறோம்!' என்று அவரது சட்டத்தரணிகள் கூறியிருக்கிறார்கள்.

## றொக்கெற் விட்ட தமிழர்கள்

இந்தியா செயற்கைக் கோளை விண்ணுக்கு ஏவும் முயற்சியில் இரண்டு தடவை தோல்வி கண்டது. சமீபத்தில் வெற்றிகரமாக ஏவிவிட்டது.

ஐ.ஆர்.எஸ்-ஐ.டி. என்ற அடையாளத்துடன் விண்ணை ஊடறுத்து சென்றுள்ளது அந்த செயற்கைக்கோள்.

அமெரிக்கா போன்ற நாடுகள் இந்தியா செயற்கைக்கோளை வெற்றிகரமாக ஏவுவதை விரும்பவில்லை. தொழில் நுட்பங்களை கொடுத்து உதவ மறுத்தன.

ரசியாவைக்கூட இந்தியாவுக்கு உதவ வேண்டாம் என்று கிளின்ரன் நிர்வாகம் தடுத்தது. "இந்த தடைகள்தான் எங்களை எங்கள் சொந்தக் காலில் நிற்கவைத்தன," என்கிறார்கள் 'றொக்கெற்றை' ஏவியுள்ள விஞ்ஞானிகள்.

அதுமட்டுமல்ல இந்த செயற்கைக்கோள் வெற்றிகரமாக ஏவப்பட்டது பற்றி இந்தியப் பிரதமர் குஜ்ரால் பின்வருமாறு கூறியிருக்கிறார்: "வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகளை தங்களுக்கு இணையாக எழுந்துவிடாமல் தடுக்கத் தொடர்ந்து தடையாக இருக்கின்றன. தொழில் நுட்பத்தைத் தரமறுக்கின்றன. அப்படி மறுக்கப்படும் ஒவ்வொரு தொழில் நுட்பமும் நமக்கு நாமே தொழில் நுட்பங்களை கண்டுபிடிக்க வாய்ப்பாக அமைகிறது. இன்று நாம் நமது சொந்தக் கால்களில் தீர்க்கமாகவும், உறுதியாகவும் எழுந்து நிற்கிறோம்." என்று கூறியிருக்கிறார்.



குஜ்ரால் மறைமுகமாக சாடியது அமெரிக்காவைத்தான்.

உலகில் தன்னைத்தவிர வேறெந்த நாடும் வல்லரசாக மட்டுமல்ல, விஞ்ஞானத்தில் கூட முன்னணியில் வந்துவிடக் கூடாது என்பதுதான் அமெரிக்காவின் வயிற்றெரிச்சல்.

அந்த வயிற்றெரிச்சல் காரணமாகவே இந்தியாவுக்கு தொழில் நுட்பம் கொடுக்க மறுத்தது.

தற்போது இந்தியா ஏவிய றொக்கெற்றை தயாரித்த இந்திய விஞ்ஞானிகளில் இரண்டு பேர் தமிழர்கள் என்பது பெருமைப் படக்கூடிய விஷயம். ஒருவர் பெயர் ராமகிருஷ்ணன். இன்னொருவர் ராஜாங்கம். ராஜாங்கம் இன்னொரு வியக்கத்தகு முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறார்.

செயற்கைக்கோளில் பயன்படுத்தப்படும் ஐந்து மீட்டர் அளவுள்ள காமராவை ஒரு மீட்டர் அளவுக்கு சிறியதாக்கப் போகிறாராம். இதனைச் சாதித்தால் விண்ணிலிருந்து சாலைப் போக்குவரத்தை துல்லியமாகப் படம்பிடிக்கலாம்.

அமெரிக்காவின் தடைகளைமீறி இந்தியா விண்ணில் வெற்றி நடை போடுகிறது. மன உறுதி இருந்தால் அமெரிக்கா என்ன அமெரிக்கா!

## தொலைபேசியில் கிசுகிசு

'தொலைபேசி செக்ஸ் சேவை' என்று புதிதாக ஆரம்பித்துத் தொலைத்திருக்கிறார்கள். இந்திய சஞ்சிகைகளிலும் தொலைபேசி இலக்கங்களைக் குறிப்பிட்டு விளம்பரங்கள் வெளியாகியுள்ளன.



சர்வதேச கிரடிட் கார்ட்டுக்கள் மூலம் பணம் செலுத்தினால் போதும். இந்த சேவை(?!) கிடைத்துவிடும்.

ஆண்களுடன் தொடர்பு கொள்ளத் தனியாகவும், பெண்களுடன் தொடர்பு கொள்ள என்று தனியாகவும் இலக்கங்கள் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

பெண்கள் ஆண்களுடன், ஆண்கள் பெண்களுடன் டயல் செய்து பேசிக்கொண்டிருக்கலாம். எல்லாமே 'அந்த மாதிரியான' பேச்சுக்கள்தான். கிளு கிளுப்பாக பேசுவதில் இனிமை காணும் ஆண்களும், பெண்களும் தான் இந்த தொலைபேசி சேவையின் வாடிக்கையாளர்கள்".

"'எய்ட்ஸ்' பயமுறுத்துவதாலும், நேரடித் தொடர்புகள் மூலம் ஏற்படும் தொல்லைகளை விரும்பாதவர்களும் எங்கள் வாடிக்கையாளர்களாக இருக்கிறார்கள். உலகெங்கும் இருந்து தொலைபேசி அழைப்புக்கள் வருகின்றன. அவரவர் தேவை அறிந்து அதற்கேற்ற விதமான ஆலோசனைகளும் கூறுகிறோம்" என்கிறார் அமெரிக்காவில் உள்ள தொலைபேசி 'செக்ஸ்' சேவை நிறுவனம் ஒன்றின் உரிமையாளர்.

இந்தச் சேவையை சாதாரண ஆட்கள் பெற முடியாது. பேசும் ஒவ்வொரு நிமிடத்துக்கும் சர்வதேச கிரடிட் கார்ட்டில் இருந்து பணத்தை உருவி எடுத்துவிடுவார்கள். பணம் படைத்தவர்களுக்கு என்றே இப்படியான பொழுதுபோக்குகள் உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றன.

## கூச்சமில்லாத திருமணம்



எப்படி எப்படி புதுமை செய்வது என்று விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது. தாய்வானில் சூகியோ என்னும் பெண் அடித்திருக்கிற கூத்தைப் பாருங்கள்.

விரைவில் தனது காதலனை திருமணம் செய்து கொள்ளப் போகிறாள். 'செய்யட்டுமேன்' என்கிறீர்களா? அதற்குள் அவசரப்பட்டால் எப்படி?

திருமணத்தில் சூகியோவும், அவள் காதலனும் பிறந்தநாள் உடையோடுதான் காட்சிதரப் போகிறார்களாம். அதாவது ஆதாம், ஏவாள் போல துணியே இல்லாமல் போஸ் கொடுக்கப் போகிறார்கள். சுற்றம் சூழச் சென்று வாழ்த்துவோர் என்ன பாடுபடப் போகிறார்களோ?

சூகியோ இப்படிப் புதுமை செய்வது இதுதான் முதற்தடவையல்ல. ஹோட்டல்களின் காபரே நடனம் ஆடும்போது உச்சக்கட்டத்தில் முற்றும் துறந்த அனுபவம் இருக்கிறது.

தாய்வானில் நடைபெற்ற தேர்தலிலும் சூகியோ போட்டியிட்டார்.


தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தன் துணிகளை கழற்றிப் போஸ் கொடுத்தார். இன்னொரு வாக்குறுதியும் கொடுத்தாராம். "என்னை வெற்றி பெறச் செய்தால் தெருவில் நிர்வாணமாக ஓடுவேன்!" என்றாராம். நல்ல வேளையாக தோற்றுப்போனார்.



படிப்பகம்

www.padippakam.com


# யார் இந்த மெலியர்கள்?



➜ சூடான் நாட்டில் உள்நாட்டுப் போர் சூடாக நடந்து வருகிறது. தெற்கு சூடானின் மக்கள் விடுதலைப் படையினர் மேற்கொண்ட திடீர் தாக்குதல் ஒன்றில் சூடான் இராணுவத்தினர் சிக்கிக் கொண்டனர். தங்களிடம் சிக்கிக் கொண்ட சூடான் இராணுவத்தினரைப் பணயக் கைதிகளாக வைத்திருக்கின்றனர் மக்கள் விடுதலைப் படையினர்.

கடும் பஞ்சம் தலைவிரித்தாடும் சூடானில் பணயக் கைதிகளும் பட்டினி தான். பசியால் மெலிந்து பட்டினி கிடக்கும் சூடான் இராணுத்தினர்தான் படத்தில் காணப்படுகின்றனர். போர்ப் பசியால் வயிற்றுப்பசி. ■

## தகவல் பெட்டி



## அசத்தலான சாதனை

↑ சாதனை படைக்க ஊனம் ஒரு தடை அல்ல என்பதை நிரூபித்துள்ளார் ஜப்பானைச் சேர்ந்த புருஹாதா என்ற இளைஞர். 25 வயதில் ட்ரையத்லான் (நீச்சல், சைக்கிள் ஓட்டம், ஓட்டப்பந்தயம் மூன்றும் கலந்தது) போட்டிகளில் பங்கேற்கத் தொடங்கினார்.

சிறந்த வீரராக விளங்கி வந்த அவருக்கு 29 வயதில் ஒரு பேரிடி ஏற்பட்டது. அவரது வலது காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவரது வலது காலை எடுக்கும்படி ஆகிவிட்டது. ஆனாலும் அவர் மனம் தளரவில்லை. செயற்கைக் காலுடன் தளராத நம்பிக்கையுடன் பயிற்சி செய்தார்.

தொடர்ந்து 3.8 கிலோமீட்டர் தூரம் ஓடி சாதனை படைத்தார். 180.2 கிலோமீட்டர் தூரத்தை சைக்கிளில் கடந்துள்ளார். 42.195 கிலோமீட்டர் தூர மரதன் போட்டியில் கலந்து கொண்டுள்ளார். செயற்கை காலுடன் சாதனை படைத்து வரும் இவரை ஜப்பானில் 'இரும்பு மனிதர்' என்று அழைக்கிறார்கள்.

இவர் மரதன் போட்டியில் 42.195 கிலோமீட்டர் தூரத்தை 15 மணி 17 நிமிடங்களில் கடந்துள்ளார். இவரது தற்போதைய வேகம் 10 மணி 40 நிமிடங்களாக உள்ளன. ■

## வெற்றி விருது



➜ பாம்பைக் கண்டு நடுங்காத பாலகன். எந்தக் குழந்தையும் துணிந்த குழந்தைதான். அது கோழையாவதும், வீரனாவதும் வளர்க்கும் முறையினிலே என்று சொல்லாமல் சொல்லுகிறாரோ தந்தையார்.

இந்தியாவின் 50வது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஃபிலடெல்பியாவில் புகைப்படப் போட்டி ஒன்று நடைபெற்றது. 250 புகைப் படங்கள் மத்தியில் வெற்றி விருதை தட்டிச் சென்ற படம் இதுதான்.

பயங்கரமான ஆட்களப்பா என்று பயந்து கொண்டு கொடுத்துவிட்டார்களாக்கும்.

## அன்று எதிர்ப்பு! இன்று வரவேற்பு!!

↓ 'மருதநாயகம்' படத்தைப் பிரமாண்டமாக நம் நாட்டு மதிப்பில் கிட்டத்தட்ட 35 கோடி ரூபா செலவில் தயாரிக்கிறார்கள். எலிசபெத் மகாராணியும் துவக்க விழாவில் கலந்து கொண்டது தான் முக்கிய சமாச்சாரம்.

ஏன் தெரியுமா? அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்தவன் மருதநாயகம். "வெள்ளையனே வெளியே போ" என்று கர்ஜித்தவன். இப்போது அதே 'மருதநாயகம்' போன்ற மேக்-அப்புடன் எலிசபெத் ராணியை கமல் வரவேற்றிருக்கிறார்.

'ஆதிக்கம் செய்ய வந்தபோது எதிர்த்தோம், இப்போது நட்பை நாடி வந்ததால் வரவேற்கிறோம்' என்று சொல்லாமல் சொல்லும் காட்சி இது.

1764ல் மருதநாயகம் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டார். அதேதினம்தான் மற்றொரு தமிழக வீரன் கட்டப் பொம்மனும் தூக்கிலிடப்பட்டார்.

மருதநாயகம் முஸ்லிமாக மதம் மாறியபோது 'யூசுப்கான்', 'கான்சாகிப்' ஆகிய பெயர்களால் அழைக்கப்பட்டார்.

மருதநாயகம் படத்தில் கமல் பேசியுள்ள ஒரு வசனம் இது: "நான் தாண்டா இந்த மண்ணு, நான்தான் இந்த விதை, நான்தான் உரம். எங்க அப்பன் சாம்பலும் இந்த மண்ணோட தூசியிலே இருக்கு. நாளைக்கு நானும் இருப்பேன். இதை விக்க யாருக்கும் உரிமை இல்லை." ■







படிப்பகம்

## மைடியர் குட்டிச் சாத்தான்

'திரீடீ' படமாக வெளியாகி சக்கை போடு போட்ட படம் மைடியர் குட்டிச் சாத்தான். தியேட்டர் வாயிலில் தனியான மூக்குக் கண்ணாடி கொடுப்பார்கள். அதைப் போட்டுக் கொண்டுதான் படம் பார்க்கலாம்.

அப் படத்தின் பாகம் 2ஐ எடுக்க திட்டமிட்டனர். பின்னர் தொலைக் காட்சித் தொடராக தயாரித்து விட்டனர்.

மைடியர் குட்டிச் சாத்தானில் நடித்த சிறுமி சோனியா இப்போது குமரியாகி விட்டார்.

'வீரபாண்டிக் கோட்டை' உட்பட பல படங்களில் நடித்து வருகிறார். மைடியர் குட்டிச் சாத்தான் தொலைக் காட்சித் தொடரில் தற்போது சிறுமியாக நடிப்பவர் பேபி ஆனி. அவ்வை சண்முகியில் கமலின் மகளாக நடித்தவர்.



முகப்பில்: ரோஷினி
அஞ்சு அரவிந்த்
படம்: அதைச் தம்பி

## ராணியின் சோகம்

'காதல் கோட்டை' படத்தில் 'வெள்ளரிக்கா பிஞ்சு வெள்ளரிக்கா' பாடல் காட்சியில் நடித்தது மூலம் ரசிகர்களின் நாடித்துடிப்பை அதிகப் படுத்தியவர் ராணி. அதன் பின்னர் தொடர்ந்து கவர்ச்சி மழைபொழிந்து வருகிறார்.

கவர்ச்சி நடிகையாக இருப்பதால் பல விதமான தொந்தரவுகளாம். இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் மட்டுமல்லாமல், சின்ன சின்ன நடிகர்கள், உதவி இயக்குநர்கள்கூட தங்களை அனுசரித்துப் போகவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களாம். நொந்து போயிருக்கிறார் ராணி.

## காதோடு சொல்லுகிறோம்

மீன் நடிகையுடன் தில்லானா தித்திக்கின்ற தேனா என்று ஆராய்ச்சி நடத்துகிறார் ஒரு இயக்குநர். 'கண்ணம்மா' என்ற பெயரை உள்ளடக்கிய படத்தின் இயக்குநர் அவர். முவேந்தர்களில் ஒருவரது பெயர்தான் அவர் பெயர். இச்செய்தி வெளியானதும் இயக்குநர் அவசர மறுப்பு வெளியிட்டாராம். "நான் உணர்ச்சிகரமான ஆளுங்க. நான் எதிர்பாக்கிற நடிப்பு வரணும்னு படப்பிடிப்பில் கொஞ்சம் நெருக்கமாக இருந்து சொல்லிக் கொடுப்பேன். அதைப் போய் 'லவ்' என்னு சொல்லலாமா?" என்று கண்ணைக் கசக்கிறாராம். நடிக்கத் தெரிந்த இயக்குநர்.

முதலில் கிசு கிசுக்களை வெறுத்துக் கொண்டிருந்தார் மந்த்ரமான நடிகை. இப்போது பட்டு விட்டதால், அவரே கிசு கிசுக்களை சொல்லி சில நிருபர்களுக்கு தகவல் கிறாராம். கிசுகிசுக்களின் புண்ணியத்தி கள் வட்டாரத்தில் வரவேற்புக் கிடைத் தாம்.

குமார நடிகருக்கும் முன்றெழுத் நடிகைக்கும் இடையே லடாய். முன்றெழுத்து தேவலோக நடிகையாம். யின் காதலரை மட்டுமல்லாமல், 'மா' ந காதலரையும் அலைய வைத்திருக்கிற லோக நடிகை. 'மா' நடிகை கெட்ட இருக்கிறார்.

ஜென்டில்மேன் ஆக்ஷன் நாயகன் புதிய பட நாயகியுடன் உதட்டோடு உ மல்லாமல், உள்ளத்தோடும் இணைத்துவி 'ஆக்ஷன் கிங்' இப்படியாகிவிட்டாரே.

## காந்தி இயக்குநர்

'காந்தி' படம் ஹெலிவுட்டில் தயாரானது. அப்படத்தை இயக்கியவர் ரிச்சர்ட் அட்டன்பரோ. அவருக்கு உதவி இயக்குநராக இருந்தவர் ஒரு இந்தியர். பெயர்: ஷாஜகான். அந்த ஷாஜகான் இப்போது கமலின் மருதநாயகம் படத்தில் இணை இயக்குநராகப் பணியாற்றுகிறார்.

## எஸ்.பி.பி.க்கு தொண்டையில் பிரச்...

முப்பதாயிரம் பாடல்களுக்கு மேல் பாடி எஸ்.பி.பாலசுப்பிரமணியம். நடிப்பிலும் வருகிறார்.

எஸ்.பி.பி. பற்றி சில வருடங்களுக்கு ஒரு செய்தி வெளியாகியது. "எஸ்.பி.பி.யா முடியவில்லை. தொண்டை கெட்டுப்போ என்பதுதான் செய்தி. அவருக்கு வேண் யாரோ கிளப்பிவிட்ட கதை என்றுதான் நினைத்தனர்.

ஆனால் அது உண்மைதானாம். எ இப்போது அதைச்சொல்லியிருக்கிறார். ராமலிங்கம் என்ற டாக்டர்தான் தொ அறுவைச் சிகிச்சை செய்து பூரண குணப்ப ராம். "எனக்கு குரல் கொடுத்தவர் அ என்கிறார். எஸ்.பி.பி. தொண்டையில் சிறு கட்டியை அறுவைச் சிகிச்சை அகற்றினார்களாம்.

அறுவைச் சிகிச்சையில் ஒரு இல்லையாம். ஆனால் அறுவைச் கான மேசைதான் பிரச்சனையாக தாம். எஸ்.பி.பி.யின் உடலுக்கு அ வில்லையாம். பின்னர் சரி னார்களாம். இப்போது ஒரு கிடையாது.

எஸ்.பி.பி. ஒய்ந்திருந்தபே மனோ போன்றோர் காட்டி மழை. இப்போது மறுபடி ரா நடத்திக் கொண்டிருக்கிறார்



ரவளி
படம் மனசுக்குள் வரலாமா




## இறக்குமதி

'உயிரோடு உயிராக' படத்தில் அஜித் குமாருடன் நடிக்கும் ரிச்சா மும்பாய் இறக்குமதி.

'ஓவியம்', 'சுழல்' ஆகிய தொலைக்காட்சி தொடர்களிலும் நடித்து வருகிறார். அஜித்குமாருடனும் சுழல்கிறார்.

'உயிரோடு உயிராக' படத்தை இயக்குபவர் ஒரு பெண். பெயர் சுஷ்மா. பாலுமகேந்திராவின் இந்திப் படத்தில் உதவியாளராக இருந்தவர் சுஷ்மா.

## சீனியரும்–ஜூனியரும்

சீனியராக இருந்தவர் ஜூனியராகி விட்டார். ஜூனியராக இருந்தவர் சீனியராகிவிட்டார். அருண்குமார் படித்த கல்லூரியில் சிவகுமாரின் மகன் சூர்யா சீனியர்.

லயோலா கல்லூரியில் அருண்குமாரை 'ராக்கிங்' செய்தாராம் சூர்யா. "டேய் நீ நல்லா ஃபைட் பண்ணுவியாமே. பண்ணுடா" என்றாராம் சூர்யா. செய்து காண்பித்தாராம் அருண் குமார். பின்னர் தோப்புக்கரணம் போடச் சொன்னாராம்.

இப்போது சினிமாவில் சீனியர் அருண்குமார். ஜூனியர் சூர்யா. சினிமாவில் ராக்கிங் இல்லாமல் போச்சுதே! சூர்யா தப்பித்தார்.

பாலச்சந்தர் தயாரிப்பில் உருவாகும் 'துள்ளித்திரிந்த காலம்' படத்தில் சின்னதாக தாடி வைத்துக்கொண்டு நடிக்கிறார் அருண்குமார். 'லவ்டுடே' இயக்குநர் பாலசேகரன் இயக்கும் படம் இது.

## அப்பாஸ் திடீர் அறிவிப்பு

பெண் ரசிகைகள் மத்தியில் இன்று பிரபலமாக இருப்பவர் அப்பாஸ். சிம்ரானுடன் காதல் என்றும் கதை அடிபடுகிறது.

திடீரென்று என்ன நினைத்தாரோ தெரியாது, "என் முறைப் பெண்ணை விரைவில் திருமணம் செய்யப் போகிறேன்" என்று அதிர்ச்சி வெடி ஒன்றை வீசியிருக்கிறார்.

அதற்கு முன்னர் சென்னையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் அப்பாசும் சிம்ரானும் இணைந்து டிஸ்கோ ஆடி மகிழ்ந்தார்கள். பின்னர் ஏன் இந்தத் திடீர் மாற்றம் என்று பலரும் குழம்பிப் போய்விட்டனர்.

அப்பாசின் திருமண அறிவிப்பால் சிம்ரானும் சிறிதாக அதிர்ந்து போயிருக்கிறார். அதைவிடப் பெரிய அதிர்ச்சி படத் தயாரிப்பாளர்களுக்கு.

அப்பாஸ் திருமணம் செய்துகொண்டால் அவரது 'இமேஜ்' பெண் ரசிகைகளிடம் சரிந்துவிடும். பின்னர் படம் ஓடாதே என்பது தயாரிப்பாளர்களின் கவலை.

## ரஜினி சிபாரிசு

'காதலா, காதலா' படத்தில் நடிக்காமல் மீனா மீனாக நழுவியதால், சௌந்தர்யாவுக்கு சான்ஸ். கமலின் சார்பாக சௌந்தர்யாவுடன் பேசி சம்மதிக்க வைத்தவர் ரஜினிதானாம். ரம்பாவையும் நடிக்காமல் செய்ய தூதுகள் சென்றதாம். கமல் படத்தில் நடிப்பது என் பாக்கியம். நடித்தே தீருவேன் என்று சொல்லிவிட்டாராம் ரம்பா.

ரம்பாவை ஓரம் கட்டிக் காட்டுகிறோம் என்று சபதம் செய்திருக்கிறார்களாம் சில இயக்குநர்கள். அதில் முன்னணியில் நிற்பவர் பாரதிராஜா.

கமல் நல்ல நடிகர், ஆனால் அவரது தற்போதைய நிலைப்பாடு கடைந்தெடுத்த சுயநலம் என்கிறார் கமலின் குருநாதரான பா...

## கமல் ரசிகர்

"கமலுடன் நடிப்பதில் ரொம்பப் பெருமை. கமலும் முதலில் நடன இயக்குநராக இருந்தவர்தான். பின்னர் நடனம் மூலம் ரசிகர்களைக் கவர்ந்தவர். கமல் படம் என்றால் கண்டிப்பாக நடனம் இருக்கும் என்று அந்தக் காலத்தில் நானே ஓடி ஓடிப் பார்த்திருக்கிறேன். நடனத்தில் கமலை அசைக்கவே முடியாது. சகலகலாவல்லவன் படத்தில் கமலின் நடனத்திற்காகவே அப் படத்தை பத்துத் தடவை பார்த்திருக்கிறேன்." இப்படி சொல்லியிருக்கிறார் பிரபுதேவா.

'காதலா காதலா' படத்தில் நடிக்கக் கேட்டபோது "கரும்பு தின்னக் கூலியா?" என்று உடனே சம்மதித்தாராம் பிரபு தேவா. படத்தில் பிரபுதேவாவின் நடனத்திற்கும் முக்கிய இடம் இருக்குமாம்.

கமல்-பிரபுதேவா
படம் காதலா காதலா

## மினி சினி

* 'பாரதி கண்ணம்மா' சேரனைத் தொடர்ந்து, கே.எஸ்.ரவிக்கு உதவியாளராக இருந்து இயக்குநராக அறிமுகமாகிறார் எஸ்.பி.ரா... இவர் பிரபு கதாநாயகனாக நடிக்க 'பொன்மனம்' என்ற படத்தை ...கிறார்.

* பாலு மகேந்திரா இயக்கிய 'யாத்ரா' என்ற மலையாளப்படத்திற்காக ... போட்டு நடித்தவர் மம்முட்டி. இவர் 'அம்... என்ற படத்திற்காக மறுபடியும் மொட்டை ...ருக்கிறார்.

* சுஜாதா, பாலகுமாரன், பட்டுக்கோட்டை ... ஆகியோரைத் தொடர்ந்து எழுத்தாள ... யர்களான சுபாவும் திரையுலகில் கால... கிறார்கள். பிரபுதேவா நடிக்கும் 'நாம் ... நமக்கு இருவர்' படத்திற்கு இந்த இரு... வசனகர்த்தாக்கள்.

* 'லவ்டுடே' படத்தை இயக்கியுள்ள பால... தற்போது கே.பாலச்சந்தர் தயாரிக்கும் '... திரிந்த காலம்' படத்தை இயக்கி வருகிறா... அருண்குமார்-ரோஷினி ஜோடியாக வருகிறார்கள்.

* அப்பாஸ்-பிரியாகில் ஜோடியாக நடிக்க... இயக்கும் படத்திற்கு 'ரொமான்ஸ்' என்று வைக்கப்பட்டது. தற்போது இதற்கு 'பூவெல்லாம் கேட்டுப்பார்' என்று ... மாற்றி விட்டார்கள்.

* சரவணன்- சுவலட்சுமி நடிக்கும் 'சந்தோஷம்' படத்தைத் தயா... வி.பாபு. சரவணனின் கூடப்பிறந்த அண்ணனான இவர், 'சந்... முடிவடைந்ததும் சரவணன் நடிக்கும் இன்னொரு படத்தையும் த... வுள்ளார்.

* வனிதா விஜயகுமார் மலையாளத்தில் நடித்த முதல்படமான '... பிரதர்ஸ்' வெற்றிகரமாக ஓடுவதைத் தொடர்ந்து வனிதாவுக்கு... மலையாளப்படங்களில் நடிக்கும் வாய்ப்புக்கள் வந்த வண்ணம் உ...

* தெலுங்கில் நாகர்ஜுன் நடித்த 'அன்னமய்யா', 'நின்னே பெல்லாடுதே... இரு படங்களின் பெரு வெற்றியால் தற்போது தெலுங்கில் நம்பர் வன்... அவருக்குத்தான். ஒரு படத்திற்கு அவர் வாங்கும் சம்பளம் இந்திய ம... ஒன்றரைக் கோடி ரூபாய்.

* கமல் நடித்த 'சிங்காரவேலன்' தான் இளையராஜாவின் பாவலர் கிரியே... நிறுவனம் தயாரித்த கடைசிப் படம். நீண்ட இடைவெளிக்குப் பின்... நிறுவனம் ஒரு படத்தைத் தயாரிக்கவுள்ளது.

* ரஷிகா அறிமுகமான 'பூஞ்சோலை' படத்திலிருந்து கடைசியாக ஒப்பந்... 'கபடி கபடி' வரை எந்தப்படமும் வெளியாகவில்லை. இருப்பினும் வாய்ப்புக்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. கடைசியாக ஒப்பந்தமாகியுள்ள படம் 'பிரார்த்தனா'.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 26

# பெரிய நடிகரை ஆட்டிப் படைத்த நடிகை
## நடிகையின் திருமணத்துக்கு ஏற்பட்ட தடை!

மக்களைக் கவர்ந்த அந்த பெரிய நடிகருக்கும் 'ஜெய' நடிகைக்கும் இடை ான 'ஊடல்கள்' பற்றி கடந்தவாரம் சொல்லப்பட்டிருந்தது.

பெரிய நடிகர் உலகைச் சுற்றி எடுத்த படத்தில் நடிப்பதற்கு 'ஜெய' நடிகை லகீழாக நின்றும் கடைசிவரை வாய்ப்பே கிடைக்கவில்லை.

இக் கட்டத்தில் வேறு இரு நடிகைகள் பெரிய நடிகரின் அன்பைப் பெறு ில் வெற்றி பெற்றனர். ஒருவர் மஞ்சளான நடிகை. இவர் தற்போது ஒரு .சத்திரக் குடும்பத்துக்கே தலைவியாக இருக்கிறார். இன்னொருவர் தற்போது ுபடி நடிக்கத் தொடங்கியுள்ள இரண்டெழுத்து நடிகை. இவர் தற்போது ரசியலிலும் ஆர்வம் காட்டி வருகிறார்.

இந்த இரு நடிகைகளும் பதினாறு வயதுக்கு முன்னரே நடிக்க வந்த ஞ்சிலேயே பழுத்தவர்கள். 'ஜெய' நடிகை பெரிய நடிகரிடம் செல்வாக்குப் றுவதை பெரிய நடிகரின் வலதுகரமாக இருந்த ஒருவர் விரும்பவில்லை. ந்த வலது கரம் பிலபர படத்தயாரிப்பாளராகவும், பின்னர் அமைச்சராகவும் ருந்தவர். 'வீர'மான பெயர் கொண்டவர்.

அந்த வலதுகரம்தான் மஞ்சளான நடிகையை தனது சொந்தத் தயாரிப்பில் வளியான படம் ஒன்றில் நடிக்க வைத்தார். 'ஜெய' நடிகையை நடிக்க வக்கலாம் என்றுதான் பெரிய நடிகர் விரும்பினார்.

பணம் போனால் போகட்டும் என்று மஞ்சளான நடிகையை வைத்து ஒரு பாடல் ாட்சியை எடுத்தார் வீரமான வலதுகரம். அதனை பெரிய நடிகருக்கும் போட்டுக் ாண்பித்தார். மஞ்சளான நடிகையின் ஆடலும், துடிப்பும் பெரிய நடிகரையும் வர்ந்தது. "சரி, இந்தப் பெண்ணே நடிக்கட்டும்" என்று அனுமதி கொடுத்துவிட்டார்.

பெரிய நடிகருக்கு சிறந்த குணங்கள் எல்லாம் இருந்தன. மிகவும் இரக்க பாவம் உடையவராகவும் இருந்தார். ஆனால் ஒரே ஒரு பலவீனம் மட்டும் 'றுதிவரை அவரிடம் ஒட்டிக் கொண்டிருந்தது. அதன் காரணமாகவே வறான சில பெண்கள் அவரை ஏமாற்ற முடிந்தது.

மஞ்சளான நடிகையுடன் பெரிய நடிகர் ஜோடியாக நடிப்பதைக் கள்விப்பட்ட 'ஜெய' நடிகை பெரிய நடிகரைச் சந்தித்து அழுது புலம்பினார். உங்களை விட்டால் எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்?" என்று நீலிக் ண்ணீர் வடித்தார்.

மனம் இரங்கிய பெரிய நடிகர் படப்பிடிப்புக்களுக்கு செல்லாமல் ிருந்துவிட்டார். அதனால் குறிப்பிட்ட படத்தின் படப்பிடிப்புக்கள் நீண்ட ாலம் தள்ளிப் போயின.

### ஆட்டிப்படைத்தார்

ஒரு நாள் எப்படியோ வீரமான தயாரிப்பாளர் பெரிய நடிகரை படப்பிடிப்புக்கு அழைத்துச் சென்றுவிட்டார். மேக் அப் அறைக்குச் சென்றார் நடிகர். நீண்ட நேரமாகியும் நடிகர் திரும்பி வரவில்லை.

வீரமான தயாரிப்பாளர் நேராக மேக்-அப் அறைக்கு சென்றபோது, அங்கு பெரிய நடிகரை காணவில்லை.

ஒரு தொலைபேசி அழைப்பு வந்ததாகவும், அதன் பின்னர் நடிகர் புறப்பட்டுச் சென்றுவிட்டதாகவும் அறிந்தார் தயாரிப்பாளர். தொலைபேசி அழைப்பு 'ஜெய' நடிகையிடம் இருந்தே வந்தது என்பதையும் அறிந்து கொண்டார்.

இப்படியெல்லாம் பெரிய நடிகரை ஆட்டிப்படைத்த 'ஜெய' நடிகை உலகம் சுற்றி எடுக்கப்பட்ட படத்தில் மட்டும் என்னதான் முயன்றும் வாய்ப்பே கிடைக்கவில்லை.

'ஜெ' நடிகையிடம் ஒரு குணம் இருந்தது. தனக்கு விரும்பியது கிடைக்காவிட்டால் அவரால் தாங்கிக்கொள்ளவே முடியாது. பிடிவாதக் குணம் அவருடன் கூடவே பிறந்தது.

மஞ்சளான நடிகைக்கு நடிக்கவே தெரியாது என்று பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்தார் 'ஜெய' நடிகை.

'ஜெய' நடிகையின் வீட்டுக்கு பிரபல தெலுங்கு நடிகர் ஒருவர் அடிக்கடி வந்து செல்கிறார் என்ற தகவலும் பெரிய நடிகரின் கவனத்துக்கு வந்தது. தன் உதவியாளரை அனுப்பி அதனை உறுதி செய்து கொண்டார் நடிகர்.

அதன் பின்னர் 'ஜெய' நடிகையுடனான தொடர்பை நிறுத்திக் கொண்டார். 'ஜெய' நடிகையும் அலட்டிக் கொள்ளவில்லை. தெலுங்கு நடிகருடன் ஒட்டி உறவாடத் தொடங்கினார்.

### தடை போட்டார்

தெலுங்கு நடிகரையே திருமணம் செய்யவும் முடிவு செய்தார். பெரிய நடிகர் அப்போது அரசியலில் செல்வாக்குப் பெற்ற நேரம் அது.

அந்த தெலுங்கு நடிகரை நேரில் அழைத்தார் பெரிய நடிகர்.

"நீ நன்றாக இருக்கவேண்டியவன். அந்த நடிகையைப் பற்றி உன்னைவிட எனக்கு நன்றாகத் தெரியும். வேண்டாம். திருமண ஆசையை கைவிடு. அதுதான் உனக்கும் நல்லது. உன் எதிர்காலத்தை கெடுத்துக்காதே" என்று கூறிவிட்டார்.

பெரிய நடிகரின் சொல்லை மீறினால் என்னாகும் என்பது அந்த நடிகருக்கும் நன்கு தெரியும். அதனால் 'ஜெய' நடிகையிடம் சொல்லிக் கொள்ளாமலேயே ஆந்திராவுக்கு கிளம்பிப் போய்விட்டார்.

தன் திருமணம் தடைப்பட்டதற்கு காரணம் 'பெரிய நடிகர்' என்று அறிந்து ஜெய நடிகை வாயில் வந்தமாதிரியெல்லாம் திட்டித் தீர்த்தார்.

அதன்பின்னர் சிறிது காலம் சினிமா உலகைவிட்டே விலகி இருந்தார் 'ஜெய' நடிகை. பெரிய நடிகரோ உயர்ந்த இடத்துக்கு சென்று அமர்ந்துவிட்டார்.

ஒரு நாள் 'ஜெய' நடிகையிடம் இருந்து பெரிய நடிகரின் அலுவலகத்துக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. ஜெய நடிகையின் கார்ச் சாரதியாக இருந்து, பின்னர் பெரிய நடிகரின் உதவியாளராக இருந்தவர்தான் போனை எடுத்தார்.

நடிகையின் குரலைக் கேட்ட உதவியாளருக்கு அதிர்ச்சி. ரிசீவரை வைத்துவிட்டு நடிகரிடம் ஓடிப்போய் தகவல் தெரிவித்தார்.

"பேச முடியாது என்று சொல்லிவிடு!" என்றார் நடிகர்.

'ஜெய' நடிகைக்கு அப்போது எக்கச்சக்கமான பணக் கஷ்டம். அதனால் பெரிய நடிகர் தன்னை அவமானப் படுத்தியதையும் பொருட்டாக எடுக்காமல் தொடர்ந்து போன் செய்தார்.

இறுதியில் பெரிய நடிகர் மனம் இரங்கினார். பணமும் தந்தார். இருவரும் சந்தித்தனர்.

மறுபடி பெரிய நடிகரை தன் பிடியில் கொண்டு வந்தார் 'ஜெய' நடிகை. கட்சியில் பதவியும் கேட்டார். அதுவும் கிடைத்தது.



சௌந்தர்யா-மீனா
படம்: தேடி வந்த தேவதை



ராணி
படம்: காதல் பள்ளி

## 'அன்புள்ள காதலுக்கு' நாயகிகள் தேவை

'பயணங்கள் முடிவதில்லை' உட்பட பல வெள்ளிவிழாப்படங்களில் நடித்தவர் மோகன். நடிப்பில் கமலின் சாயல் தெரியும்.

பெண் ரசிகைகள் ஏராளம். பல ரசிகைகளுடன் கும்மாளமடித்தவர் என்ற பெயரும் இருக்கிறது. கல்லூரி மாணவிகள் பலர் மோகனின் வலையில் வீழ்ந்தனர். பின்னர் மோகனும் மார்க்கெட் இல்லாமல் வீழ்ந்தார்.

வாய்ப்புகள் இல்லாமல் போனதால் சொந்தமாகப் படம் தயாரிக்கத் தொடங்கினார். ஏறக்குறைய ஒரு வருடகாலமாக படத்திற்கு பெயர் சூட்ட முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தார். மோகனுக்கு 'எய்ட்ஸ்' என்று யாரோ கிளப்பிவிட்ட கதையால் படத்திற்கு கதாநாயகி கிடைக்காமல் அவதிப்பட்டார். இன்னமும் கதாநாயகிகள் கிடைத்தபாடில்லை.

ஆனால் படத்திற்கு ஒருவிதமாக பெயர் சூட்டிவிட்டார். 'அன்புள்ள காதலுக்கு' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கதாநாயகனாக நடிப்பதோடு படத்தின் கதை, வசனம், இயக்கம் எல்லாமே மோகன்தான். இசை; தேவா.

ஒருநாயகி போதாதாம். இரண்டு நாயகிகளை வலைபோட்டுத் தேடிக்கொண்டிருக்கிறார். கிடைத்ததும் படப்பிடிப்பு ஆரம்பமாகிவிடும்.

## 'பந்தா' நாயகன்

நடிகர் விஜயகுமார்- மஞ்சுளா தம்பதியின் குடும்பமே படங்களில் நடித்து வருவது தெரிந்தே. இப்போது விஜயகுமாரின் உறவுக்கார வாலிபர் ஒருவரும் நடிக்க வந்திருக்கிறார்.

இந்திரஜித் இயக்கத்தில் தயாராகும் புதிய படத்தில் அவர்தான் கதாநாயகன். சொந்தப் பெயர் சாமிநாதன். அதனை மாற்றி விஷ்வா என்று பெயர் சூட்டிவிட்டார்கள். படத்தின் பெயர்; பந்தா. விஜயகுமாரின் முதல் மனைவியான முத்துக் கண்ணுவின் சகோதரி மகன்தான் விஷ்வா.

'பந்தா' படத்தில் இயக்குநர் கே.எஸ். ரவிக்குமாரும் முக்கிய வேடத்தில் 'பந்தா' காட்டுகிறாராம்.

நடிகர்கள் பலர் 'பெப்ஸி' தொழிலாளர்களின் பக்கம் நிற்பதால் இயக்குநர்கள் புது நடிகர்களை அறிமுகம் செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

## வில்லியாக குஷ்பு

சொந்த வாழ்க்கையில் தனக்கு ரம்பா வில்லியாக மாறிவிடுவாரோ என்று குஷ்பு பயந்து போயிருந்தார். அதனால் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வில்லியின் ஆதிக்கத்தை தளரச்செய்தார்.

அதே குஷ்பு 'கல்யாண வைபோகம்' படத்தில் வில்லியாக நடிக்கிறார். ராம்கி, சங்கீதா ஆகியோரும் நடிக்கும் படம் அது.

"ஒரே மாதிரியான பாத்திரங்களில் நடித்தால் திருப்தி இருக்காது. அதனால் தான் வில்லியாக நடித்து வித்தியாசம் காட்ட முன்வந்தேன்." என்கிறார் குஷ்பு. நடிக்கட்டும் ஆனால் நிஜ வில்லிகள்மீதும் ஒரு கண் இருக்கட்டும்.

## கமலுக்கு சதி

'மருதநாயகம்' படத்தின டிரையிலரை எலிசபெத் மகாராணி வெளியிட்டு வைத்துவிட்டு சென்றார். கமலுடன் மோதும் எதிர் வட்டாரம் எலிசபெத் ராணி 'டிரெயிலரை' வெளியிடாமல் செய்யும் முயற்சியில் ஈடுபட்டதாம்.

இந்தியாவில் உள்ள பிரிட்ஷ் தூதரகத்துக்கு 'மொட்டைக் கடிதங்கள்' பறந்தனவாம். பிரிட்டிஷ் தூதரகம் அவற்றை கிழித்து குப்பையில் வீசிவிட்டதாம்.

## 'காதலர் தினம்' புதிய யோசனை

'இதயம்', 'உழவன்', 'காதல் தேசம்' ஆகிய படங்களை இயக்கியவர் கதிர். 'உழவன்' மட்டும் படு படு தோல்வி. 'இதயம்' ஹிட். காதல் தேசம் சூப்பர் ஹிட்.

கதிர் அடுத்து இயக்கும் படம் 'காதலர் தினம்'. படத்தின் கதாநாயகன் குணால். பல மாதங்களாக கதிர் தேடிக்கண்டுபிடித்த புதுமுகம். நாயகி சோனாலி பந்த்ரே. 'பம்பாய்' படத்தில் ஹம்மா ஹம்மா பாட்டுக்கு வந்து ஆடிவிட்டுப் போனாரே அவர்தான்.

காதல் கதைக்கு இருவரும் பொருத்தமாக இருப்பார்களாம். நாயகன் குணால் அப்பாசுக்கு போட்டியாக வந்தாலும் வருவார்.

'காதலர் தினம்' என்று பெயர் வைத்தது ஏன்? கதிர் சொல்கிறார் இப்படி: "காதலர் தினம் என்றால் காதலை உறுதிப்படுத்தும், உறுதியானதைக் கொண்டாடப் பூக்கள் பரிசாகக் கொடுப்பதுதான் வழக்கம். காதலர் தினத்துக்கு பரிசாக என்ன கொடுக்கலாம் என்று யோசிப்பதைவிட, தன்னையே தரலாம் என்று நேசிப்பதுதான் நிஜமான காதல். என்னோட சப்ஜெக்ட் அதுதான்" என்கிறார் கதிர்.

காதல் கதையாக எடுத்துக் குவிக்கும் கதிருக்கு காதல் அனுபவம் உண்டா?

"காதல் என்பது எல்லோருக்கும் நிச்சயம். ஆனால் காதலிப்பது எல்லோருக்கும் அமைவதில்லை. ஒரு சட்டை பார்க்கிறோம். பிடிக்குதுனா அதை வாங்க முடிகிறது. அது பணம். ஒரு பொண்ணு பிடிக்குதுனா அதை வாங்கிட முடியாது. அது மனம். அதனால் கல்யாணம் பண்ணிக்கிட்டு மனைவியை 'லவ்' பண்ண வேண்டியதுதான்" என்று ரொம்பச் சோகமாகச் சொல்கிறார்.



படிப்பகம்

லேடீஸ் ஸ்பெஷல்

## நேர்த்தியான சேலைத் தெரிவு



சேலை செலக்‌ஷன் இருக்கிறதே! மனசுக்குத் திருப்தியாக ஒரு சேலை எடுப்பது என்பது மகா பெரிய காரியம். கடைக்குள் நுழையும் பெண்கள் கடைசி வரையில் அதை எடுப்பதா? இதை எடுப்பதா? என்று குழம்பி கடைசியில் ஏதோ ஒன்றை எடுத்துக் கொண்டு வருவார்கள். சரி எடுத்தது எடுத்தாச்சு. இனிமேல் என்ன செய்வது? என்ற சமாதானத்துடன் அவர்களுக்குச் சேலை அமையும். இந்த இக்கட்டை தவிர்க்க யாருக்கு என்னசேலை எப்படி இருந்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்:

சிட்டத்தட்ட யானைக்கலர் இருப்பவர்கள் பளிச் என்று முகத்தில் அடிக்கும் கலர் சேலைகளைத் தேர்வு செய்யக்கூடாது. லைட்டான கலர்களையே தெரிவு செய்ய வேண்டும்.

செக்கச் செவேல் என்று சுண்டினால் இரத்தம் வரும் மேனியுடையவர்கள் லைட்டான கலரை விட கடுங்கலர்களைத் தேர்ந்தெடுப்பதே அழகு. சிவப்பும், பச்சையும் அவர்களுக்கு நன்றாக இருக்கும்.

கறுப்பாகவும் இல்லாமல், சிவப்பாகவும் இல்லாமல் சுமாரான நிறத்தில் இருக்கும் பெண்கள் வழக்கமான டிசைன்களை விட்டு விட்டு புது டிசைன்கள் ஏதாவது வந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

சேலை எடுக்கும்போது விலையுயர்ந்த சேலை தான் நல்லது என்கிற எண்ணத்துடன் எடுக்கக்கூடாது. முதலில் வர்ணத்திற்கும், அதற்கடுத்து டிசைனுக்கும், அதன் பின் துணிக்கும் முக்கியத்துவம் கொடுத்து சேலையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இரவு நேரங்களில் சோடியம், மெர்க்குரி விளக்குகள் வெளிச்சங்களில் சேலை எடுப்பதைத் தவிர்த்து, பகலில் ரியூப் லைட் வெளிச்சத்தில் சேலை எடுப்பதே நல்லது.

சேலைகளில் சிவப்பு வர்ணத்தை விரும்புபவர்கள் தன்னம்பிக்கை, உத்வேகம், சிறந்த முடிவு ஆகியவற்றைக் கொண்டு திகழ்வார்கள். மஞ்சள், செம்மஞ்சள் நிறங்களை விரும்பும்பெண்கள் அன்பு, அழகு, மகிழ்ச்சி உடையவர்களாக இருப்பார்கள். பச்சை நிறத்தை விரும்பும் பெண்கள் அதிகப்படியான ஆலோசனை கூறுபவர்களாக இருப்பார்கள்.

அலுவலக வேலைக்குச் செல்லும் போதும், வெய்யில் காலத்திற்கும் லைட் கலர் சேலைகள் ஏற்றவை. மழை காலத்திலும், விருந்துக்குச் செல்லும் போதும் டாக் கலர் சேலைகள் நல்லது. வெளியூர் செல்லும் போது அதிக பூக்கள் கொண்ட சேலை நல்லது. சேலை செலக்‌ஷனுக்கு செல்லும் போது மறவாமல் உங்கள் தோழியையும் அழைத்துச் செல்லுங்கள். அவள் தரும் யோசனையையும் பரிசீலனை செய்யுங்கள்.

கடைக்குச் செல்வதற்கு முன்பாகவே சேலை எப்படி இருந்தால் நன்றாக இருக்கும் என்று மனதுக்குள் ஒரு ஓட்டம் விடுங்கள். கடையில் அதே பாணியில் சேலை இருக்கிறதா? என்று பாருங்கள்.

இதைவிட, சேலையைக் கட்டும் விதத்திலும் அழகு இருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

## தினமும் வேண்டாம்



குழந்தைகளுக்கான உணவில் முட்டை ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. விட்டமின் ஏ.டி. இரும்புச் சத்து, பி-12, புரதம் போன்ற ஏராளமான சத்துக்கள் முட்டையில் உள்ளன.

முட்டையை குழந்தைகளுக்கு ஒருநாள் விட்டு ஒருநாள் கொடுப்பதும், அதைக் காலை நேரத்தில் கொடுப்பதும் தான் சரியான முறையாகும்.

முட்டையின் மஞ்சட் கருவில்தான் அனைத்து சத்துக்களும் உள்ளன. மிகச் சிறிய வயதுக் குழந்தைகளுக்கு முட்டையை அவித்துக் கொடுப்பதும், ஓரளவு சிறுவர், சிறுமியர்களுக்கு அரை அவியல் (HALF BOIL) செய்து கொடுப்பதும் நல்லது.

***

குழந்தைகளின் வயதிற்கேற்ப அவர்களின் நிறையும், உயரமும் சரியாக இருக்க வேண்டும். கீழுள்ள அட்டவணையில் அவர்கள் வயதிற்கேற்ப இருக்க வேண்டிய நிறையும், உயரமும் உள்ளன.

***

குழந்தை தத்தித் தத்தி நடக்க ஆரம்பிக்கும் போது, வெறுங்காலுடன் தரையில் நடப்பதே நல்லது. தரையில் இருந்து குழந்தைகள் சரியான உணர்ச்சிகளைப் பெறுவதுடன் பாதம், கணுக்கால், கால் தசைகள் நன்கு வலிமையும் பெறுகின்றன.

| வயது | நிறை | உயரம் |
|---|---|---|
| பிறந்ததும் | 2 1/2-3 | 50 செ.மீ |
| 6 மாதம் | 7 கிலோ | 65 செ.மீ |
| 1 வருடம் | 10 கிலோ | 75 செ.மீ |


பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை CO

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவாகள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 01-11-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள்

இளவரசர் சாள்ஸ் இத்தாலிக்கு விஜயம் செய்தபோது பத்திரிகைகள் வெளியிட்ட ஊகங்களை டயானாவும் அறிந்தே இருந்தார்.

இத்தாலியில் உள்ள செல்வந்தக் குடும்பம் ஒன்றுடன் பிரிட்டிஷ் அரச குடும்பத்தினருக்கு நட்பு இருந்தது.

அந்த செல்வந்த குடும்பத்தில் அழகான இளம் பெண் ஒருத்தி இருந்தாள். அவளது பெயர்: பியமெற்றா ஃப்ரெஸ் கோபால்டி.

ஆனால் சாள்ஸ் இத்தாலிக்கு சென்ற பின்னர்தான் அந்த எதிர்பாராத தகவல் பத்திரிகையாளர்களுக்கு கிடைத்தது.

இளவரசர் சாள்ஸ் சென்றது அந்த இளம் பெண்ணிடம் அல்ல, அந்த இளம் பெண்ணின் தாயாரான மொனா ஃப்ரெஸ் கோபால்டியுடன் தான் சாள்ஸ் நட்பு வைத்திருந்தார்.



### ஆறு வருடங்கள்

சாள்ஸ்-டயானா தம்பதியின் ஆறாவது திருமண வருடாந்த விழா நெருங்கிக் கொண்டிருந்தது.

ஆனால் தம்பதிக்குள் பிணக்குகள் பெரிதாகத் தலை தூக்கத் தொடங்கியிருந்தன.

இக் கட்டத்தில் சாள்ஸ்சும், டயானாவும் ஒரு விருந்தில் கலந்து கொண்டனர். விருந்து கொடுத்தவர்கள் இல்லத்திலேயே அன்றிரவு தங்கினார்கள்.

இளவரசரும், இளவரசியும் தங்குவது என்றால் எத்தனை பெரிய கௌரவம். ஏற்கனவே அந்த இல்லத்தில் சொகுசான படுக்கை அறை இருந்தது.

அதையும் தூக்கி வெளியே போட்டுவிட்டு ஏராளமாக பணச் செலவில் படுக்கை

புவனா

அறை தயாரித்து வைத்திருந்தனர்.

படுக்கை அறையைப் பார்த்துவிட்டு தங்களைப் புகழ்ந்து தள்ளப்போகிறார்கள் என்று எதிர்பார்த்தவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

தங்கள் இருவருக்கும் தனித் தனிப் படுக்கை அறை வேண்டும் என்று அடம் பிடிக்கத் தொடங்கிவிட்டனர்.

பின்னர் ஒருவிதமாக தனி அறைகள் ஏற்பாடு செய்து கொடுத்து சமாளித்தனர் விருந்து கொடுத்தவர்கள்.

### மூன்றாவது இல்லையா?

இரண்டாவது குழந்தை ஹரி பிறந்த பின்னர் இளவரசர் சாள்ஸ் டயானாவை நெருங்கியதே இல்லையாம்.

டயானாவிடம் ஒரு சிநேகிதி "என்ன மூன்றாவது குழந்தையைச் சுமக்கிறாய் போலிருக்கிறதே" என்று கேட்டாளாம்.

டயானாவுக்கு கோபம் வந்துவிட்டது. "அத்தகைய உற்பத்தி எதிலும் நான் இறங்கவில்லை" என்று சினத்துடன் கூறிவிட்டார்.

இதன்பின்னர் டயானா ஸ்பெயின் நாட்டுக்கு சென்றிருந்தார். அப்போது ஒரு பத்திரிகையாளர் அதே கேள்வியை எழுப்பினார்.

அங்கே டயானா சீறவில்லை. தன் துயரத்தை வழக்கமான புன்னகையால் போர்த்திக்கொண்டார். "மேற்கொண்டு குழந்தைகளைப் பெறும் நிலையில் நான் இல்லை. என்னைச் சுற்றி ஏராளமான பணிகள் குவிந்து கிடக்கின்றன." என்றார் டயானா.

இளவரசியின் புன்னகைக்குப் பின்னால் மறைந்து கிடந்த துயரத்தின் நிழலை யாரும் கண்டுகொள்ளவில்லை.

எனினும் டயானா பல ஆண் நண்பர்களுடன் தனித்துக் காணப்படுவதாக செய்திகள் வெளியான வண்ணம் இருந்தன.

## வெளியார் கண்களுக்கு நாடகம்

பிறிதொரு நாள் இளவரசரும், மொனாவும் அந்தரங்க அணைப்பில் இருந்ததை டயானாவே நேரில் கண்டிருக்கிறார்.

டயானாவுக்கு இது இரண்டாவது அதிர்ச்சி.

அந்த செல்வந்தக் குடும்பத்தின் அழைப்பை ஏற்று சாள்ஸ்சும், டயானாவும் தம்பதியாகச் சென்ற ஒரு சந்தர்ப்பத்தில்தான் டயானா அக் காட்சியைக் காண நேர்ந்தது.

இளவரசர் சாள்ஸ் அந்த இளம் பெண்ணின் தாயாரின் மடியில் கிடந்தாராம். அவரது முடியைக் கோதிவிட்டபடி அந்தப் பெண்மணி காதல் கதைகள் பேசிக்கொண்டிருந்தாளாம்.

டயானா வந்ததையோ, தங்களை நெருக்கமாகக் கண்டதையோ அவர்கள் இருவரும் பார்க்கவில்லை. சந்தடி செய்யாமல் வந்த வழியே திரும்பி தன் அறைக்குத் திரும்பிவிட்டார் டயானா.

இளவரசர் சாள்ஸ்சுக்கு நடுத்தர வயதுள்ள பெண்களுடன் சந்தோசமாக இருக்கத்தான் பிடிக்கும்.



கமீலாவுடன் பழக்கம் ஏற்பட்ட பின்னர், அரண்மனையில் பணியாற்றிய மற்றொரு நடுத்தர வயதுப் பெண்மணியுடன் சாள்ஸ்சுக்கு தொடர்பு இருந்தது.

இந்த விடயமும் முதலில் பத்திரிகைகளுக்குச் சென்று பின்னர் டயானாவின் காதுக்கும் எட்டியது.

அப்படியிருந்தும் சில விருந்துகளில் இளவரசர் சாள்ஸ்சும், டயானாவும் பத்திரிகையாளர்களைக் குழப்பியதும் உண்டு.

அரச குடும்பத்தின் கௌரவம் கருதி பொது நிகழ்ச்சிகளில் வெளியார் கண்ணுக்கு கணவன், மனைவியாக நடந்துகொள்ளுமாறு இருவரிடமும் மகாராணி கேட்டிருந்தாராம்.

அதனால் சில பொது நிகழ்ச்சிகளில் டயானாவை 'டார்லிங்' என்று அழைப்பார் சார்ள்ஸ். பட்டும்படாமல் கன்னத்தில் முத்தமும் கொடுத்துக் கொள்வர்.

இதனைப்பார்த்த பத்திரிகையாளர்களுக்கும் ஏனையோருக்கும் ஒரே குழப்பம்.

'மறுபடி உறவு உறுதியாகிறது' என்றுகூடச் சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

ஆனால் விருந்தில் கலந்துகொண்டுவிட்டு காரில் ஒன்றாக வீடு திரும்பும்போது ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள மாட்டார்கள். நீயாரோ, நான் யாரோ என்பது போல முகத்தை 'உம்'மென்று வைத்துக் கொண்டே பயணம் செய்வர்.

பக்கிங்ஹாம் மாளிகைக்குள் சென்றடைந்ததும், இளவரசி தனது அறைக்குச் சென்றுவிடுவார். சாள்ஸ் தனது தனி அறைக்குப் போய்விடுவார்.

6

அங்கு கமீலா அவருக்காகக் காத்திருப்பார். கமீலாவுக்கு வேட்டைக்குச் செல்வது என்றால் கொள்ளை ஆசை.

டயானாவுக்கு வேட்டைத் துப்பாக்கியைக் கண்டாலே பிடிக்காது. இசை என்றால் டயானாவுக்கு உயிர். சாள்ஸ்சுக்கு இசையில் நாட்டமில்லை.

சாள்சும், டயானாவும் பல ரசனைகளில் நேர் எதிர் தன்மை கொண்டவர்களாகவே இருந்தனர்.

விரைவான விரிசல் ஏற்பட ஒத்துவராத இரசனைகளும் ஒரு முக்கிய காரணமாக இருந்தன.

டயானா வளர்ந்த சூழ்நிலையும் வித்தியாசமானது பிரிட்டிஷ் குடும்பத்தின் போலித்தனமான கௌரவங்கள், மரபுகள், கட்டுப்பாடுகள் என்பவற்றை டயானா வெறுத்தது அதனால்தான்.

### குடும்பம்

டயானா ஸ்பென்சர் குடும்ப பரம்பரையைச் சேர்ந்தவர். ஐரோப்பாவில் செம்மறி



ஆடுகள் வியாபாரத்தில் பிரசித்தி பெற்றிருந்தவர்கள் ஸ்பென்சர் குடும்பத்தினர்.

15ம் நூற்றாண்டில் முதலாவது சாள்ஸ் மன்னரால் ஸ்பென்சர் குடும்பத் தலைவர்களுக்கு 'கோமகன்' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

அதன்பின்னர் வந்த நூற்றாண்டுகளில் ஸ்பென்சர் குடும்பத்தினர் இங்கிலாந்திலும் வெளிநாடுகளிலும் அரசுகளில் உயர் பதவிகளை வகித்தனர்.

இரண்டாம் சாள்ஸ் மன்னருக்கு டயானாவின் அப்பா சொந்தக்காரர். டயானாவின் அம்மாவுக்கு அமெரிக்க ஜனாதிபதிகளாக இருந்த ஏழுபேர் உறவினர்கள்.

டயானாவுக்கு முன்பாக இரு பெண் குழந்தைகள் பிறந்திருந்தன. அதனால் மூன்றாவது குழந்தை ஆணாகப் பிறக்க வேண்டும் என்றுதான் பெற்றோர் விரும்பி இருந்தனர்.

> "இளவரசியை 'டார்லிங்' என்று அழைத்தார் சாள்ஸ். எல்லோரும் குழம்பினர்"

ஆண் குழந்தைதான் பிறக்கும் என்ற நம்பிக்கையில் ஜோன் ஸ்பென்சர் என்று பெயரும் சூட்டியிருந்தார்.

ஆண் குழந்தையை அவர்கள் விரும்பியதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

'வைக் கவுண்ட் ஒஃப் அல்தோப்' என்ற பரம்பரைப் பட்டத்துக்கு ஒரு ஆண் வாரிசு கட்டாயம் தேவை.

டயானா பிறக்கும்போது அக்கா ஜேனுக்கு எட்டு வயது. இன்னொரு அக்கா சாராவுக்கு நாலு வயது.

டயானா பிறப்பதற்கு 18 மாதங்களுக்கு முன்னர் அழகான ஆண்குழந்தை ஒன்று பிறந்தது.

ஸ்பென்சர் குடும்பம் சந்தோசத்தில் பூரித்தது.

அந்த சந்தோசம் நீடிக்கவில்லை. 10 மணி நேரம் மட்டும் இருந்துவிட்டு அக் குழந்தையின் உயிர் பிரிந்தது.

அடுத்த குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும் என்று ஜோசியர்கள் சொன்னார்கள்.

ஸ்பென்சர் குடும்பத்தினரையும், ஜோசியர்களையும் ஏமாற்றிவிட்டு டயானா பிறந்தாள்.

(அடுத்த வாரமும் வரும்)

### இந்த் வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

ஜெயமலர் மரியநாயகம்
L 88, றொறிங்ரன் அரச தொடர் மாடி,
கொழும்பு 05..

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசிலைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com

## மீண்டு வந்து....!

தளக்கென வீடு, கிணறும் கட்டி,
வீட்டைச் சுற்றி மதிலும் கட்டி,
தோட்டம் வைத்துத் தொழிலும் பார்த்து,
எமக்கென்ன குறையென வாழ்ந்த மக்கள்...
*
எடுத்தபொருளைக் கையில் பற்றி,
அடுத்த ஊரில் மரநிழல் சுற்றி,
தடுத்த கிடுகை மறைவாய்க் கட்டி,
படுத்தும் வெயிலும் மழையும் பட்டு...
*
அடுத்த வேளைக்கு உணவில்லாமல்,
தடுக்க நோயை மருந்தில்லாமல்,
எடுக்கத் தமக்கென முடிவில்லாமல்:
ஓடும் பயணம் முடியாதென்றே...
*
மாளாதிருக்கும் உயிரென்றாலும்,
பிறந்த மண்ணில் போகட்டுமென்று,
அலாய்ப் பறந்து அரும்பாடுபட்டு,
மீளக் குடியாய் ஊருக்கு வந்தால்...
*
வீட்டுச் சுவரும் விழ்ந்தே போச்சு!
வேலி மதிலும் காப்பரண் ஆச்சு!
கிணற்றுக் கட்டும் இடிந்தே போச்சு!
தோட்டம் துரவும் பாழ் வெளியாச்சு!
*
வளவும் எல்லையும் மாறிப்போனதை,
குறுக்கும் நெடுக்கும் வாகனம் போவதை,
பனையும் தென்னையும் 'பங்கரு'மானதை,
கண்முன் நடப்பதைக் கேட்பாரில்லை.
*
கட்டியெழுப்பக் காசம் இல்லை:
கொத்திப் பிழைக்க வலுவும் இல்லை:
மீண்டு வந்ததில் அர்த்தம் இல்லை:
எடுத்துப் பேச உரிமையுமில்லை.

திருமதி ராஜேஸ்வரி கிருஷ்ணன்- பூவரசங்குளம், வவுனியா.

## கானல்

ஆலெனத் தழைத்த வாழ்வும்
அறுகுபோல் படர்ந்த சுற்றமும்
கானல் நீரெனக் கருகிப் போச்சு:
வாழ்வது மாயம் என்றாச்சு.
-0-
நோய் நொடி இல்லா வாழ்வில்
நூறாண்டு வாழ நினைச்சு
போர் நிலமதனில் இரு
காலையும் இழந்தாச்சு!
-0-
சுத்தமாய் பெருக்கி-நாளும்
துதித்திடும் இல்லம் தன்னில்
சுகமான வாழ்வை
நோக்கிடுமுன்னே
வீதி நடுவினில் வந்தாச்சு!
-0-
வானமே கூரையாச்சு.....
பூமியே படுக்கையாச்சு....
பாரினில் கொண்ட
உரிமையெல்லாம்
பகல் கனவேயாச்சு!
-0-
வயல்வெளி வறண்டு போச்சு....
வானமும் பொய்த்துப் போச்சு....
உழவனின் வயிற்றில்கூட
பெரு நெருப்பெழுந்தாச்சு!
-0-
நேசமும் மறந்து போச்சு...
பாசமும் வெறுத்துப் போச்சு...
இயந்திர வாழ்வாய் நாளும்
நடிப்பது இயல்பாய் ஆச்சு!
-0-
போரினால் வந்த விளைவோ-
வாழ்க்கையே கொடும்
போராய் மாறுது நாளும்:
மாவிடம் இங்கே கானல்
நீராயாச்சு

ஜே.ஜஸ்டின்-வவுனியா.

## காயப்பட்ட வாழ்க்கையும் மயிலிறகு வார்த்தைகளும்

வாழ்கை அழைக்கிறது:
நீயோ
இறந்த காலங்களிலேயே
இன்னுமிருக்கிறாய்!
••
எல்லோர் கண்களிலும்
கலர் கலராய் கனவுகள்:
நீயோ
பழைய கறுப்பு வெள்ளை
கனவுகளுக்குள்ளேயே
பதுங்கிக் கொண்டிருக்கிறாய்!
••
தீ சுட்ட புண்களாய்
ஏன் உன் கண்கள்-
காணுகின்ற நேரமெல்லாம்
கண்ணீரையே வடிக்கின்றன?
அழாதே...!
வாழ்க்கை,
அழுகையின்
மொழிபெயர்ப்பல்ல பெண்ணே!
••
ஒரேயொரு,
காகிதப் பூவின் இழப்பிற்காய்
கலங்கிப் போய் கிடப்பவளே...!
ஓராயிரம் நந்தவனங்கள்
உன் பெயர் சொல்லி
அழைக்கிறதே....
உணரவில்லையா நீ?
••
இழத்தல் என்பதெல்லாம்
'இழப்பு' அல்ல பெண்ணே!
விதை, உறைகளை இழக்காமல்
முளை-
மரமாவது எப்படி?
ஆயின்,
மரத்திற்கு விதையுறை
இழப்பென்று ஆகுமா?
ஆக,
இழத்தல் என்பதெல்லாம்
தோழி...
'இழப்பு' அல்ல அறி!
••
நீ இழந்தது என்னவோ
சிறு மின் மினிப் பூச்சிதான்!
ஆனால்,
சூரியனே தொலைந்ததாய்
ஏன் தோழி
சுருண்டு போய்க் கிடக்கிறாய்?
••
வாழ்க்கை அழைக்கிறது!
சொல் பெண்ணே...!
இறந்த காலங்களில்தான்
நீ-
இன்னும் வசிக்கப் போகிறாயா?
பழைய-
கறுப்பு வெள்ளை கனவுகளுள்தான்
காலங் கரைக்கப்போகிறாயா?
••
மற:
மறக்க வேண்டியவை
எல்லாமே மற!
துற:
உன் துறவு வாழ்க்கையை
கொஞ்சமேனும் துற!
பற:
புழுதி படிந்த விலங்குடைத்து
உயர வானில் பற!
அப்போ...
பூமியிலும் அழகானதாய்
உன் விழிகள்
வேறெதுவும் தரிசிக்கா...!
••
வா தோழி!
புழுங்கும் நினைவுதறி
உன் கோடுகளுக்கு-
வெளியே வா!
அப்போ,
எந்த மனிதரிலும்
அன்பு வைப்பதுதான்,
பாவங்களைப் போக்க
முதல்-
வழியென்றறிவாய் நீ!!!
••

யூ.எல் மப்றூக்- அட்டாளைச்சேனை.

## யார் இவர்கள்



① ↑ இந்தக் குழந்தையாக இருப்பவர், இப்போது துள்ளும் இள நடிகை. சமீபத்தில் இந்தியாவில் வெற்றிபெற்ற தமிழ்ப் படம் ஒன்றின் நாயகி. அப் படத்தில் இடம்பெற்ற பாடல்களை உங்கள் உதடுகள் இப்போது கூட உச்சரித்துக் கொண்டிருக்கலாம். இந்தியிலும் இவர் பிரபலம். இரசிகர்களின் கனவில் இவர் உற்சாக மின்சாரம்.



② ↑ உலகம் அறிந்த பெண்மணி இவர். நீங்களும் அறிந்தவர்தான். மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழ்ந்து மறைந்தவர்.

↓ இந்த இரு படங்களிலும் இருப்பவர் ஒருவரே. இவரும் உலகம் அறிந்த, உலக மக்களைக் கவர்ந்த ஒருவர்தான். இவரது மறைவு நம்மையும் கலங்க வைத்தது. மூன்று பேரும் யார் என்று ஊகிக்க முடியாதவர்களுக்கு 18ம் பக்கம் உதவும்.



③



④

## தவம்

சகி,
நீ எப்படியோ...
நான் இன்றும் உன் நினைவுகளிலேயே
வாழ்ந்து கொண்டிருக்கிறேன்!
***
நம் பாதைகள்
வேறாகிப் போனாலும்
நாம் சேர்ந்து நடந்த
பாதச்சுவடுகளைப்
பார்த்துக்கொண்டிருக்கிறேன்!
***
இதுவும்
ஒருவகை தவம் தான்;
உன் நினைவுகளை
ஜபமாக்கி
செய்யும் தவம்!
***
எந்த மேனகை
வந்து இதைக்
கலைக்க கூடும்?
சொல்!
***
என் மூளையின்
மறதி 'செல்கள்'
மரித்துப் போனபின்
எந்த மேனகையால்
இதைக் கலைக்கக்கூடும்?
***

## தேன் கிண்ணம்

மான்விழி கொண்ட
மங்கையரைக் கண்டாலும்,
சிரிக்கும் உன்
சின்ன விழிகள் அல்லவா
என் சிந்தையில் தோன்றுகிறது?
***
தேன்மொழி கொண்ட
தோகையர் குரல் கேட்டாலும்
உன் செல்லச் சிணுங்கலே
இன்றும் என்
செவியில் ஒலிக்கிறது!
***
எந்த மேனகை
வந்து இதைக்
கலைக்கக்கூடும்?
சொல்!
***
நம் கனவுகள்
கலைக்கப்பட்ட போதும்,
உன் நினைவுகளை கலைத்து
என் தவத்தை
யார் மாற்றக்கூடும்?
***

'மட்டுநகர் நர்மி'




உபயம்: சாவி

## இந்த வாரம் உங்கள் பலன்

(26.10.1997 தொடக்கம் 01.11.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| துலாம் | - சூரியன், புதன். |
| விருட்சிகம் | - செவ்வாய், வெள்ளி. |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு. |

★ சந்திரன்- சிம்மம், கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- ஆடம்பர வாழ்வு, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| திங்கள்- தொழில் மேன்மை, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| புதன்- இனசன நன்மை, பெரியோர் உதவி. | மு.ப. 10 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, தொழில் பேறு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் மந்தம், வீண் பிரயாசம். | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| புதன்- தொழில் மந்தம், மனக் கலக்கம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- பயனற்ற செயல், மன அமைதியின்மை. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 11 மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்:

(மிருகசீரடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- பெரியோர் நன்மை, உயர்ந்த நிலை. | மு.ப. 10 மணி |
| புதன்- இனசன விரோதம், தொழில் மந்தம். | பகல் 12 மணி |
| வியாழன்- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | பகல் 11 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், தொழில் சிறப்பு. | பி.ப. 2 மணி |
| சனி- பெரியோர் உதவி, பண வரவு. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| திங்கள்- வீண் விரோதம், மனக் கவலை. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 1 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி. | மு.ப. 10 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, கௌரவம். | பகல் 11 மணி |
| சனி- புதிய முயற்சி, பலவித பேறு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- கடன் சுமை, மனக் கலக்கம். | மு.ப. 10 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், மறைமுக எதிர்ப்பு. | பி.ப. 1 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், கௌரவக் குறைவு. | பகல் 11 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- எதிர்பார்த்த நன்மை, பணவரவு. | பகல் 11 மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, மனச் சஞ்சலம். | பகல் 11 மணி |
| திங்கள்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| புதன்- கடன் தொல்லை, பலவித கஷ்டம். | பகல் 11 மணி |
| வியாழன்- காரியக் கேடு, பயனற்ற செயல். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, அந்நியர் உதவி. | மு.ப. 10 மணி |
| சனி- பணக் கஷ்டம், கடன் படல். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனக் கலக்கம். | மு.ப. 10 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், உயர்ச்சி தடை. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 11 மணி |
| வியாழன்- வீண் முயற்சி, பெரியோர் பகை. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, காரியசித்தி. | பி.ப. 2 மணி |
| சனி- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- அந்நியர் சகவாசம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், உயர்ந்த எண்ணம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 11 மணி |
| புதன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. 2 மணி |
| சனி- மன மகிழ்ச்சி, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, தொழில் மேன்மை. | மு.ப. 10 மணி |
| திங்கள்- பிரயாணக் கஷ்டம், காரியத்தடை. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பண வரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- பயனற்ற செயல், அந்நியர் நட்பு. | பகல் 11 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், பண வரவு. | பகல் 11 மணி |
| திங்கள்- பெரியோர் சகவாசம், உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| புதன் - தொழில் விருத்தி, பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், பணவரவுத் தடை. | பி.ப. 2 மணி |
| சனி- முயற்சி பலிதம், மனக்குறை நீங்கும். | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், பணச் செலவு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| புதன்- பலவித பேறு, காரியானுகூலம். | மு.ப. 1 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், தொழில் மந்தம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பலவித கஷ்டம், காரியக் கேடு. | பி.ப. 1 மணி |
| சனி- மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், தொழில் விருத்தி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- பலவித பேறு, பண வரவு. | பகல் 12 மணி |
| புதன்- தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | பகல் 11 மணி |
| வியாழன்- பொருள் வரவு, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | மு.ப. 9 மணி |
| சனி- புதிய முயற்சி, மனக் கலக்கம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4


படிப்பகம்





பூவில் உதிர்வதும் உண்டு-பிஞ்சைப் பூச்சி அரித்துக் கெடுவதும் உண்டு நாவிற் கினியதைத் தின்பார்-அதில் நாற்பதினாயிரம் சாதிகள் சொல்வார்.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# அரசனும் இளைஞனும்

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டைக் கொடுங்கோல் மன்னன் ஒருவன் ஆட்சி செய்து வந்தான்.

அவன் ஒரு முறை தனது நாட்டில் உள்ள இளைஞன் ஒருவனை சிறையில் அடைத்தான்.

எவ்வித குற்றமும் செய்யாத அந்த இளைஞனுக்கு பெற்றோர் இல்லை. அவனது தாத்தாவே அவனைச் சிறுவயதில் இருந்து வளர்த்தவர்.

இளைஞன் சிறையில் அடைக்கப்பட்டிருந்ததைக் கேள்விப்பட்ட அவனது தாத்தா, அரசனிடம் அவனை விடுதலை செய்யுமாறு கெஞ்சினார்.

"ஒரு நிபந்தனையின் பேரில்தான் அவனை விடுதலை செய்வேன்!" என்று கூறிய அரசன், இளைஞனைத் தன் முன் கொண்டுவர உத்தரவிட்டான்.

இளைஞன் கொண்டு வரப்பட்டதும் அவனிடம்,

"இளைஞனே கேள்! உன்னிடம் ஓர் ஒல்லியான செம்மறி ஆட்டையும், அதற்கு வேண்டிய ஒரு மாதத்தீனியையும் தருவேன். ஒரு மாதமானதும் அந்த ஆட்டை எடை போட்டுப் பார்ப்பேன். இன்று இருப்பதைப் போன்றுதான் ஆட்டின் எடை இருக்க வேண்டும். கொஞ்சமும் அதிகரிக்கக்கூடாது. ஆட்டின் எடை கூடினால் உன் தலையை வெட்டி எறிந்து விடுவேன்," என்று கூறினான்.

அரசனின் இந்த ஆணையை ஒரு போதும் நிறைவேற்ற முடியாது' என்று நினைத்துக் கொண்டு, மிகுந்த கவலையுடன் தனது தாத்தாவுடன் வெளியேறினான் இளைஞன்.

இளைஞனது கவலை தோய்ந்த, முகத்தைப் பார்த்த தாத்தா அவனின் காதில் மெதுவாக ஏதோ யோசனை சொன்னார்.

இளைஞனும் அதற்குச் சரியென்று தலையாட்டினான்.

ஒரு மாதம் கழிந்தது. இளைஞனிடம் கொடுத்த செம்மறியாட்டை எடை போட்டுப் பார்த்தான் அரசன். ஆட்டின் எடை கூடவில்லை. எனவே அவனை விடுதலை செய்தான்.

இளைஞன் மிக்க மகிழ்ச்சியுடன் அவனது தாத்தாவிடம் ஓடினான்.



"தாத்தா! அன்று நீங்கள் என்னிடம், ஆட்டிற்குத் தீனியும் போடவேண்டும், எடை கூடவும் கூடாது. அதற்கு அந்த ஆட்டின் முன் ஓநாய் ஒன்றைப் பிடித்துக் கட்டி விடும்படி சொன்னீர்கள். ஆடு எவ்வளவு தீனி தின்றாலும், பயத்தினால் அதன் எடை அதிகரிக்காது, என்று சொன்னீர்கள். அதன் படி செய்தேன். இன்று விடுதலை கிடைத்து விட்டது!" என்று சந்தோஷத்துடன் சொன்னான் இளைஞன்.

தான் செய்த உபயத்தால் கொடுங்கோல் மன்னனிடமிருந்து தனது பேரனுக்கு விடுதலை கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சியுடன் அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார் தாத்தா.

# அதிசயம்-ஆனால் உண்மை!



### மிகப் பழைய பாத்திரம்

1924ம் ஆண்டு ஃபிரான்ஸில் நிலத்தைத் தோண்டிய போது, பச்சை நிறமான வெண்கலப் பாத்திரம் ஒன்று கிடைத்தது. இதன் எடை 460 இறாத்தல். 5 அடி அகலமும், 5 1/2 அடி உயரமும் உள்ள இப்பாத்திரம் 2600 ஆண்டுகளாகப் புதையுண்டு கிடந்ததாம்.

### பூவா? தேனீயா?

பீஒக்கிட் (BEE ORCHID) என்ற செடியில் பூக்கும் பூக்கள் தேனீக்களைப் போன்று தோற்றமளிக்கும்.



### ஆந்தைக் குரங்கு

இது நாள் முழுக்கத் தூங்கி, இரவில்தான் உணவுவைச் சாப்பிடுமாம்.



### வானவில் நீர் வீழ்ச்சி

ரொடீஷியாவின் வேகம் மிகுந்த விக்டோரியா நீர்வீழ்ச்சியின் ஒரு பகுதி வானவில் போன்று ஒளி வீசுகின்றது.



### பெண்களின் நாக்கு

ஸான்சிபார் என்ற இடத்தில் உள்ள செடி ஒன்றுக்குப் பெயர் வுமன்ஸ் ரங். (WOMAN'S TONGUE). இந்தச் செடியில் உள்ள காய்கள் எப்போதும் சலசலத்துக் கொண்டிருப்பதால் இதற்கு 'பெண்களின் நாக்கு' என்று பெயர் வந்தது.



# வாரம் ஒரு நாடு

## புருனே

| | |
|---|---|
| தலைநகர் | - பந்தர் சேரி பெகவான் (முன்பு புருனே நகர்) |
| பரப்பு | - 5765 சதுரகிலோ மீட்டர் |
| மக்கள் தொகை | - 3 இலட்சம் |
| மொழி | - மலாய், ஆங்கிலம், மாண்டரின் (சீனம்) |
| எழுத்தறிவு | - 95% (இளைஞர்கள்) |
| நாணயம் | - புருனே டொலர் அல்லது நிங்கிட் |
| தனிநபர் வருமானம் | - 17 ஆயிரம் டொலர் |

**அமைவிடம்:**

தென்கிழக்கு ஆசியாவில் போர்னியோ தீவின் வடக்கு கடற்கரையில் அமைந்துள்ளது.

**வரலாறு:**

துவக்க காலத்தில் முடியாட்சி. பின் 1888 இல் பிரிட்டனின் அதிகாரத்திற்கு உட்பட்டது. 1984ல் சுதந்திரம் பெற்றது. அனைத்து அதிகாரங்களும் சுல்தானின் கையில். அமைச்சர்களைச் சுல்தானே நியமிக்கிறார்.



**பொருளாதாரம்:**

எண்ணெய் வளம் மிகுந்தது. அரிசி, பழவகைகள் முக்கிய விவசாய உற்பத்திகள். இறப்பரும் பயிரிடப்படுகின்றது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள் சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ருபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 01.11.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 216
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 214

பரிசுக்குரியவர்:
பி. ஸ்ரீபன்,
புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எம். தினேஷ் குமார், ரோ.க.தமிழ் பாடசாலை, அம்பிட்டிய, கண்டி. | கே. ஷ.ஃப்ராஸ் மொஹமட், மஹவெல முல்ல மு.வித்தியாலயம். வெள்ளவாய. |
| செல்வி எம்.எம்.எ.ஃப். ருமானா, முஸ்லிம் வித்தியாலயம், எத்துங்கஹக்கொட்டுவ. | வி. குயின்டஸ், புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலபம், டிக்கோயா. |
| ஜி. சுமதி, இறம்பைக்குளம் ம.மகா வித்தியாலயம், வவுனியா. | செல்வி நிவேதிதா திருக்கணேசன், சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. |
| என். பிருந்தா, இந்து மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை. | எம்.ஐ. மொஹமட் ஜெனீபர், சாஹிறா தேசிய பாடசாலை, அனுராதபுரம். |
| எஸ். செல்வகுமார், பொஸ்கோ கல்லூரி, ஹட்டன். | ச. சஞ்ஜயன், மட்/ ஆரையம்பதி மகா வித்தியாலயம், ஆரையம்பதி. |

# கழுகு தெய்வம்



பண்டைய எகிப்தியர்கள் பூனையைத் தெய்வமாக வணங்கியது போலவே, ராஜாளி கழுகுகளையும் வழிபட்டுள்ளனர். கழுகுகளுக்காக எகிப்தியர்கள் சிலை வடித்தும் வழிபட்டார்கள். இந்தக் கடவுளை 'ஹோரஸ்' என்றும் அழைத்தனர்.

1922ம் ஆண்டு எகிப்து நாட்டில் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டபோது பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு மன்னனின் கல்லறையை அகழ்ந்து எடுத்தனர். அந்த மன்னனின் கல்லறையில் இந்த ராஜாளி கழுகின் சிலை இருந்தது.

# அதிக உற்பத்தி



உலகின் மிகப்பெரிய காளான் பண்ணை அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியாவில் இருக்கிறது. இங்கு வருடத்திற்கு 24 ஆயிரத்து 500 தொன் காளான் உற்பத்தி செய்யப்படுகிறது.

●●★★

உலகில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்கள் இவை: 1. கரும்பு, 2. கோதுமை, 3. நெல், 4. சோளம், 5. உருளைக்கிழங்கு, 6. பீட்ரூட், 7. பார்லி, 8. வள்ளிக்கிழங்கு, 9. சோயா அவரை.

●●★★

# விடுகதைகளும் விடைகளும்

1. ஓடியாடி உழைத்ததும் மூலைக்குப் போய் விடுவாள்.
   அவள் யார்?
2. நகராமல் நகருவான், சொல்லாமல் சொல்லுவான்.
   அவன் யார்?
3. அன்றாடம் தீப்பிடித்தும் அழியாமல் இருக்கும் அறை.
   அது என்ன?
4. பச்சரிசிக் கோட்டைக்குள் இளஞ்சிவப்பு ராணி.
   அவள் யார்?
5. வாலுள்ளவன் வானத்தில் பறக்கிறான்.
   அவன் யார்?
6. உயரத்தில் இருப்பிடம், தாகம் தீர்ப்பதில் தனியிடம்.
   அது என்ன?
7. தட்டாமல் கொட்டாமல் கேட்கும் மேளச்சத்தம்.
   அது என்ன?
8. சுமையும் சுமப்பான், உதையும் கொடுப்பான்.
   அவன் யார்?
9. அங்குமிங்கும் செல்வான், ஆனந்தம் தருவான்.
   அவன் யார்?
10. அசுத்தமாக இருக்கும்போது, வெள்ளையாக இருக்கும், சுத்தமாக இருக்கும்போது கறுப்பாக இருக்கும்.
   அது என்ன?

**விடைகள்**

| | |
|---|---|
| 1. துடைப்பம் | 2. கடிகாரம் |
| 3. சமையலறை | 4. நாக்கு |
| 5. பட்டம் | 6. இளநீர் |
| 7. இடிமுழக்கம் | 8. கழுதை |
| 9. ஊஞ்சல் | 10. கரும்பலகை. |

தொகுப்பு: ஏ. அகல்யா.

# பெனிசிலினைக் கண்டு பிடித்தவர்!

நம் கண்களுக்குத் தெரியாத சில நுண்ணுயிர்களைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்து வரும்போது, தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டதுதான் 'பெனிசிலின்' என்னும் அற்புத மருந்து. இதைக் கண்டுபிடித்தவர் ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த அலெக்சாண்டர் ஃபிளேமிங்.

ஒரு கிண்ணத்தில் உணவுப் பொருட்களை வைத்துச் சில நுண்ணுயிரிகளை வளரச் செய்தார். அடுத்த நாள் கிண்ணத்தைத் திறந்தபோது, மூடியின் ஒரு பகுதியில் பூஞ்சைகள் (FUNGI) பற்றியிருந்தன. பூஞ்சைகளிருந்த இடத்தில் நோய் நுண்ணுயிரிகள் இறந்திருப்பதைக் கண்டார். இவை எவ்வாறு வந்தனவென்று ஆராய்ந்தபோது, காற்றில் கலந்திருந்த இவை, எப்படியோ உணவில் படிந்து நோய் நுண்ணுயிரிகளைக் கொன்றனவென்று அறிந்தார். பூஞ்சைகளில் உள்ள நச்சுக் கொல்லி இந்த நுண்ணுயிரிகளைக் கொன்று அழிக்கும் ஆற்றல் கொண்டிருப்பதை உணர்ந்தார்.

மேலும் இதனை ஆராய்ந்து நோயை உண்டாக்கும் நுண்ணுயிரிகளைக் கொல்லும் பூஞ்சைகளை வைத்துச் சோதனை செய்து வெற்றி கண்டார். இது பெனிசிலியம் வகையைச் சார்ந்தவையாக இருந்ததால் இதற்குப் பெனிசிலின் (PENICILLIN) என்று பெயரிட்டார்.



அலெக்சாண்டர் ஃபிளேமிங்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு இதுவே பல கொடிய நோய்களை அழிக்கும் மிகச் சிறந்த மருந்தாக ஆக்கப்பெற்றது. இப்போது செயற்கை முறையில் பெனிசிலின் தயாரிக்கப் படுகிறது.

# ஊரும் பெயரும்

ஃபிரான்ஸ் நாட்டில் 'வை' (Y) என்ற பெயரில் கிராமம் ஒன்று உள்ளது. இந்தக் கிராமத்தின் தற்போதைய சனத்தொகை 143 பேர் மட்டுமே.

இதேபோல் சுவீடன் நாட்டில் 'ஏ' (A) என்ற பெயரில் ஓர் ஊர் இருக்கிறது. இந்த ஊரில் 1000 பேர் மட்டுமே உள்ளனர்.

www.padippakam.com

## இரவு 22

### சென்றவாரம்

ஃபோன் மணி அடிக்க ரிஸீவரை எடுத்தாள் மைத்ரேயி. எதிர்முனையில் பாஸ்கர் பேசினான். தினேஷ் பிழைத்துவிட்ட விபரத்தை மைத்ரேயி கூற ஹாஸ்பிடலில் மீதமுள்ள நாட்களில் அவனைக் கொன்றுவிடத் தன்னிடம் திட்டமிருப்பதாகக் கூறும் பாஸ்கர், மூன்று மணிக்கு மல்லிகை டிப்பார்ட்மெண்டல் ஸ்டோருக்கு வரும்படி தெரிவித்துப் ஃபோனை வைக்கிறான்.

இதேவேளை பட்டாபியின் எதிர்வீட்டைச் சேர்ந்த நாதமுனி என்பவர் ஆவடி பொலிஸ் ஸ்டேசனில் பட்டாபியைக் காணவில்லையெனக் கம்ப்ளைண்ட் கொடுக்கிறார்.

ஹாஸ்பிடலில் தினேஷ் கண்விழித்துப் பேச முற்படுகிறான். தினேஷ் சிரமப்பட்டு பேசுவதைப் பார்த்த டாக்டர் ராமபத்ரன் எல்லோரையும் புறப்படும்படி கூறுகிறார்.

ஐ.ஸி.யூனிட்டிலிருந்து வெளியே வந்ததும் கம்பனியைச் சேர்ந்த அதிகாரிகள் கொடுத்த பொக்கேக்களைப் பெறுகிறாள் மைத்ரேயி.

கம்பெனிக்கு வரவேண்டிய அவசியம் பற்றி அதிகாரிகள் கூறியதைச் சாட்டாக வைத்து மைத்ரேயி புறப்பட்டு மல்லிகை டிப்பார்ட்மெண்டல் ஸ்டோருக்கு வருகிறாள்.

இனி...

# உடைந்த இரவு

மல்லிகை டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸில் அந்த மத்தியான நேரத்தில் கூட்டம் அவ்வளவாக இல்லை. சொற்பமாய் பெண்கள் தெரிந்தார்கள்.

மைத்ரேயி ஒரு மரத்தடியின் நிழலில் காரை நிறுத்திவிட்டு உள்ளே போனாள். மணிக்கட்டு கைக்கடிகாரத்தில் மணி இப்போது 2.50.

இன்னும் பத்து நிமிஷத்துக்குள் பாஸ்கர் வந்துவிடுவார். பார்த்துப் பேசிவிட்டு உடனே ஆபீஸ் போய்விடலாம். ஸ்டோர்ஸின் மாடிப்படிகளில் ஏறி இரண்டாம் தளத்தில் இருந்த க்ரோசரி செக்ஷனுக்குள் நுழைந்தாள். செக்ஷன் வெறிச்சோடிப் போயிருந்தது. ஊழியர்கள் இல்லாத 'பிக் அண்ட் பேக்' முறை இங்கே இருந்ததால் கேஷ் கவுண்டரில் மட்டும் ஒரு பெண் டிஜிடல் கம்ப்யூட்டரோடு உட்கார்ந்திருந்தாள்.

அந்த நிமிஷம் அவள் கையில் மாத நாவல் ஒன்று இருக்க, அதில் ஆழ்ந்து போயிருந்தாள்.

மைத்ரேயி 'செக்ஷனை' வெறுமனே ஒரு முறை சுற்றி வருவதற்குள் மணி மூன்று.

பாஸ்கர் எந்த நிமிஷமும் உள்ளே வரலாம். அறைவாசலில் கண் வைத்தபடியே காத்திருந்தாள். நேரம் ஈரத்தரையில் விழுந்து விட்ட சோப்புக் கட்டியாய் வழுக்கிப் போனது...

3.05

3.07

3.10

3.12

பாஸ்கரைக் காணோம். மைத்ரேயிக்கு ஆச்சர்யமாய் இருந்தது.

'பாஸ்கர் சொன்ன நேரத்துக்கு சொன்னபடி வந்துவிடுகிற ஆசாமியாயிற்றே!'

'ஒரு வேளை மறந்து விட்டாரா...?'

'இல்லை.... வரும் வழியில் ட்ராஃபிக் ஜாம் ஏதாவதில் மாட்டிக் கொண்டு விட்டாரா...?'

நேரம் இப்போது 3.15.

மைத்ரேயி பொறுமை இழக்க ஆரம்பித்தாள். பதட்டத்தில் நெற்றியும் கழுத்தும் வியர்த்தன.

'பார்க்கலாம்... இன்னும் ஒரு பத்து நிமிஷம் பார்க்கலாம். எப்படியும் வந்து விடுவார்...'

க்ரோசரி செக்ஷனுக்கு வெளியே வந்து வராந்தாவில் பொறுமையிழந்து நடைபோட ஆரம்பித்தாள்.

மணிக்கட்டில் நேரம் தத்தியது.

3.20

3.25

3.30

3.35

மைத்ரேயிக்கு பதட்டம் அதிகரித்தது. 'ராத்திரி அலைந்த அலைச்சலில் ஒரு வேளை பாஸ்கர் அயர்ந்து போய் தூங்கி விட்டாரோ...?'

பாஸ்கர் அவளுக்குக் கொடுத்திருந்த பி.பி.டெலிஃபோன் எண் மனசின் மையத்துக்கு வந்து நின்றது.

'ஃபோன் செய்து பார்க்கலாமா....?'

'அதுதான் சரி...?'

கீழ்தளத்தில் இருந்த டெலிஃபோன் பூத்துக்கு வந்தாள் மைத்ரேயி. வானிட பேக்கின் ஜிப்பைப் பிரித்து ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து தயாராய் வைத்துக் கொண்டு கொக்கியில் இருந்த ரிஸீவரை காதுக்குக் கொடுத்தபடி டயலில் எண்களைத் தட்டினாள்.

முறுமுனையில் ரிங்போய் ரிஸீவர் எடுக்கப்பட்டதும், ரூபாய் நாணயத்தைப் போட்டு லைனை உயிர்ப்புக்கு கொண்டு வந்து குரல் கொடுத்தாள்.

"ஹலோ..."

ஒரு ஆண் குரல் கேட்டது.

"யார் வேணும்?"

"உங்களுக்கு எதிர் வீட்ல பாஸ்கர் இருந்தா கொஞ்சம் கூப்பிட்டு விடறீங்களா?"

"வித் ப்ளஷர்....! ஒரு நிமிஷம் லைன்லயே இருங்க. கூப்பிட்டு விடறேன்..."

மைத்ரேயி காத்திருந்தாள். நிமிஷ நேர மௌனத்துக்குப் பின் ஆண்குரல் கேட்டது.

"பாஸ்கர் வீட்ல இல்லையாமே... அவரோட அப்பா சொல்றார்."

"வெளியே எங்கே போயிருக்காருன்னு தெரியுமா?"

"சொல்லிட்டுப் போகலையாம். நீங்க யார் பேசறது? பாஸ்கருக்கு ஏதாவது மெஸேஜ் இருந்தா சொல்லுங்க... வந்ததுமே கன்வே பண்ணிடறேன்."

"வேண்டாம்... நான் அப்புறமா ஃபோன் பண்ணி பேசிக்கிறேன்..." மைத்ரேயி ரிஸீவரை வைத்துவிட்டு பூத்தைவிட்டு வெளியே வந்தாள்.

முகம் வியர்த்துப் போய் சொதசொதத்தது.

மணிக்கட்டில் நேரம் இப்போது 3.40.

'நான் ஃபோன் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் ஒருவேளை பாஸ்கர் க்ரோசரி செக்ஷனுக்குப் போயிருக்கலாம்.'



### கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

ஒரு சிறிய நம்பிக்கையோடு மறுபடியும் படிகள் ஏறி க்ரோசரி செக்ஷனுக்குப் போனாள் மைத்ரேயி.

பார்வையை ஒரு வலைமாதிரி வீசித் தேடினாள். பாஸ்கர் இல்லை.

'இனியும் இங்கே காத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. ஆபீஸுக்குப் போகலாம்...!'

ஏமாற்றம் அப்பிய முகத்தோடு மரத்தடியில் நிறுத்தியிருந்த காருக்கு வந்தாள். ட்ரைவிங் இருக்கைக்கு சாய்ந்து காரின் இக்னிஷியனை உசுப்பினாள்.

கார் நகர்ந்து டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர்ஸை விட்டு வெளியே வந்து ஆபீஸ் நோக்கி வேகம் எடுத்தது.

ஆபீஸ் போய்ச் சேர்ந்து அட்மினிஷ்ட்ரேஷன் ஆபீஸர் காட்டிய ஃபைல்களில் கையெழுத்துப்போடும் போதும் சரி... அவர் பேமெண்ட் பண்ண வேண்டிய பார்ட்டிகளைப் பற்றி சொன்னபோதும் சரி மைத்ரேயிக்கு அவைகளில் நாட்டம் செல்லவில்லை. ஏ.ஸி. அறைக்குள் இருந்தாலும் நெற்றி வியர்த்துவிட்டது.

மணி நான்கைத் தொட்டபோது பிரைவஸி டெலிஃபோன் துடித்தது.

ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ..."

மறுமுனையில் பாஸ்கர் பேசினான்.

"மைத்ரேயி! நான்தான்..."

☆☆☆

அறைக்குள் யாரும் இல்லாததால் சற்றுக் குரலை உயர்த்தியே பேசினாள் மைத்ரேயி.

"பாஸ்கர்...! எங்கே போயிட்டீங்க.?"

"ஒரு சின்ன பிராப்ளம்..."

"என்ன?"

"நான் வேலை செய்யற ஆபீஸிலிருந்து உடனடியாக வரச்சொல்லி அழைப்பு. ஆபீஸ்ல ஏதோ ஆடிட்டிங்...! அது சம்பந்தமா ஒரு என்கொய்ரி. என்கொய்ரியை அட்டெண்ட் பண்ணிட்டு எப்படியும் மூணு மணிக்குள்ள டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸுக்கு வந்துடலாம்னு நினைச்சேன். முடியலை. என்கொய்ரி இன்னும் போயிட்டிருக்கு.."

"நான் டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ்ல மூணே முக்கால் மணிவரைக்கும் வெயிட் பண்ணிப்பார்த்து சலிச்சுப்போய் ஆபீஸுக்கு வந்துட்டேன். ஆமா.. நான் ஆபீஸ்ல இருப்பேன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"வீட்டுக்குப் ஃபோன் பண்ணிப் பார்த்தேன். ரிங் போயிட்டே இருந்தது. அப்புறம் ஹாஸ்பிடலுக்கு ஃபோன் பண்ணினேன். நீ அங்கேயும் இல்லைன்னு நர்ஸ் சொன்னா... வீடு ஹாஸ்பிடல் ரெண்டிலேயும் நீ இல்லேன்னா ஆபீஸ்லதான் இருக்கணும்னு நெனச்சுப் ஃபோன் பண்ணினேன்."

"சரி எப்போ உங்க ஆபீஸ் என்கொய்ரி முடியும்..?"

"எப்படியும் ஆறு மணியாயிடும்..."

"அதுக்கப்புறம் மீட் பண்ணலாமா?"

"ம்..."

"எங்கே....?"

"காலேஜ் ரோடு... பஸ் ஷெல்டருக்கு கொஞ்சம் தள்ளி சாலையோர பூங்கா ஒண்ணு இருக்கு... அமைதியான இடம்... யாரும் பார்க்க வாய்ப்பில்லை..."

"வர்றேன்..."

"உன் ஹஸ்பெண்ட்டுக்கு இப்போ எப்படியிருக்கு?"

"அவர் ரெக்கவரி ஆயிட்டார்..."

"ரெக்கவரி... ஆயிட்டாலும்... எப்படியும்... வாரம் பத்து நாள் ஹாஸ்பிட்டல்ல இருப்பார் இல்லையா?"

"இருப்பார்..."

"அந்த அவகாசம் நமக்குப் போதும்... மத்தது எதுவும் ஃபோன்ல பேச வேண்டாம். ஏழு மணிக்கு உடையத்துல பேசிக்குவோம்..."

"சரி..."

சொல்லி ரிஸீவரை வைத்த விநாடி- ஃபாக்டரி மானேஜர் கழுத்து டையை இறுக்கிக்கொண்டு மெல்ல உள்ளே நுழைந்தார்.

"மேடம்..."

நிமிர்ந்தாள் மைத்ரேயி.

"என்ன...?"

"பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருத்தர் பத்து நிமிஷத்துக்கு முன்னாடி வந்துட்டு போனார்..."

"எ... எதுக்கு...?"

"பட்டாபின்னு ஒரு லேபரர். காலையிலிருந்தே காணலையாம். அது சம்பந்தமா எதிர்வீட்டுக்காரர் நாதமுனின்னு ஒருத்தர் கொடுத்த புகார் பேர்ல பட்டாபியைத் தேடிட்டு இருக்காங்களாம்."

மைத்ரேயின் இருதயம் ஒருமுறை உதைத்துக் கொண்டது. தொண்டை சட்டென்று வறண்டது. வேண்டுமென்றே கேட்டாள்.

"பேர் என்ன சொன்னீங்க...?"

"பட்டாபி..."

"எப்பயிருந்து காணோமாம்?"

"இன்னிக்குக் காலையிலிருந்து."

"காணாம போயிட்டதா எப்படி சொல்ல முடியும்...? அவர் ஏதாவது அவசர வேலையா வெளியூர் போயிருக்கலாமோ..?"

"நானும் இதே கேள்வியைத்தான் இன்ஸ்பெக்டர்கிட்ட கேட்டேன் மேடம்..."

"அதுக்கு அவர் என்ன சொன்னார்?"

"நேத்து ராத்திரி பட்டாபி வீட்டுக்கு யாரோ வந்து பேசிக்கிட்டிருந்ததாகவும்- காலையில் வீட்டுக்கதவு திறந்து கிடந்ததாகவும் எதிர்வீட்டுக்காரர் சொல்லியிருக்கார்."

மைத்ரேயின் இருதயம் மறுபடியும் ஒருமுறை உதைத்துக் கொண்டது.

"வீட்டுக்கு வந்தது யாரு?"

"தெரியலையாம்! பேச்சுக்குரல் மட்டும் கேட்டதா எதிர்வீட்டுக்காரர் சொல்லியிருக்கார்...."

"அந்த இன்ஸ்பெக்டர் இருக்காரா... போயிட்டாரா?"

"போயிட்டார்.. பட்டாபி நாளைக்கு விடியறதுக்குள்ளே வரலைன்னா மறுபடியும் இங்கே வந்து லேபர்ஸ்கிட்டே விசாரணை நடத்த வேண்டியிருக்கும்னு சொன்னார்"

"மிஸ்டர் எஃப்.எம்."

"மேடம்..."

"பொலிஸெல்லாம் நம்ம கம்பெனி காம்பஸுக்குள்ள வர்றது சரியில்லை... நீங்க அதை அலவ் பண்ண வேண்டாம்."

"அப்படி செய்ய முடியாது மேடம்"

"ஏன்...?"

"லேபர் ஆக்ட்படி ஒரு வேலையாள் காணாமப் போயிட்டா, அவன் வேலை செய்யற கம்பெனியும் பொறுப்பு ஏத்துக்கத்தான் வேணும். பொலிஸை உள்ளே வர வேண்டாம்னு சொல்ல நமக்கு உரிமையில்லை."

மைத்ரேயி கலவரமானாள்.

(தொடர்ந்து வரும்)

### மச்ச இரகசியம்



உங்கள் உடம்பில் மச்சம் இருந்தால், அது இருக்கின்ற இடத்திற்கு தக்கபடி ஒவ்வொரு பலன் இருக்கும்.

பொதுவாக பெண்களுக்கு உடம்பில் இடது பக்கமாக மச்சம் இருந்தால் மிகவும் நல்லதாம். இனி ஒவ்வொரு இடமாகப் பார்க்கலாம்.

காலிலே இடது பாதத்தில், இடது பக்கமாக மச்சம் இருந்தால், அவர் மிகவும் அழகாக இருப்பார். அத்துடன் தெய்வபக்தியும், பணிவும் இருக்கும். இந்தப் பெண்ணால் குடும்பத்திற்கு நன்மை உண்டாகும்.

இடது பாதத்தில் வலது பக்கமாக மச்சம் இருந்தால் பொருத்தமான கணவன் அமைவார். நிறைய குழந்தைப் பாக்கியம் இருக்கும். பிறருக்கு உதவி செய்வார்.

இதே போன்று இடது முழங்காலில் மச்சம் இருந்தால் சகல வசதிகளுடன் இருப்பார். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பார்.

வயிற்றுக்கு மேல் மச்சம் இருந்தால், இவரது வாழ்க்கை மிக்க மகிழ்ச்சியுடனும், அமைதியாகவும் இருக்கும்.

வயிற்றுக்குக் கீழ்ப்பகுதியில் மச்சம் இருந்தால், இவருக்குக் குழந்தைச் செல்வம் அதிகம் உண்டு. சரியான சாப்பாட்டுப்பிரியரான இவர், வாய்க்கு ருசியாக சாப்பிட்டுக் கொண்டிருப்பார்.

தொப்புளில் மச்சம் நல்ல கறுப்பாகவும், பெரிதாகவும் இருந்தால் இவரது வாழ்க்கை இன்பமயமாக இருக்கும். ஒரு கஷ்டமும் வராது. இவருக்கு உடல்நிலையும் நன்றாக இருக்கும். இவரைப் போன்ற பாக்கியசாலியைப் பார்க்கவே முடியாது.

இடது தோளில் மச்சம் இருந்தால், வீடு, நிலம், வாகனம் என்று பொருள், பண்டம் நிறையக் கிடைக்கும். இவர், கணவரின் குறிப்பறிந்து நடக்கக்கூடியவர். மற்றவர்களின் பாராட்டைப் பெறும் இவருக்கு பெண் குழந்தைகள் கூடுதலாக இருக்கும்.

முதுகில் மச்சம் உள்ளவர்களுக்கு நீண்ட ஆயுள்.

நெற்றியில் மச்சம் உள்ளவர் எனில், நல்ல அறிவாளியாக இருப்பார் பல சோதனைகளை சந்தித்து வெற்றி பெறுவார்.

இது எல்லாருக்கும் நூற்றுக்கு நூறு வீதம் சரியாக இருக்கும் என்று கூறமுடியாது. இருப்பினும் உங்கள் உடம்பில் இருக்கும் மச்சத்தையும், இந்தப் பலன்களையும் ஒரு முறை பார்த்துக் கொள்ளுங்கள்.

### அரங்கம்



பெயர்: பி. பிரபாகர்,
வயது: 27
முகவரி: 117, 3ம் குறுக்குத்தெரு, கொழும்பு -11
பொழுதுபோக்கு: பேனா நட்பு, நாவல்.



பெயர்: ஜி. டியாட் மொஹமட்,
வயது: 20
முகவரி: 65/8, ஒடயார் மாவத்தை, தெலியாகொன்ன, குருநாகல்.
பொழுதுபோக்கு: பத்திரிகை.



பெயர்: கே. பாக்கியராஜா,
வயது: 35
முகவரி: P.O.BOX-139, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: எம். ராகினி,
வயது: 18
முகவரி: 14, சமஹிகம, முந்தல்.
பொழுது போக்கு: கரம், பத்திரிகை.



பெயர்: முகமட் பாஹிம்,
வயது: 25
முகவரி: 210/2, மாத்தளை வீதி, அக்குறணை.
பொழுது போக்கு: பேனா நட்பு.



பெயர்: எம். ஆதில்,
வயது: 20
முகவரி: P.O.BOX-183, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம். நிலாம்டீன்,
வயது: 17
முகவரி: பி.எம்.பி. லேன், கிண்ணியா-3.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.

பெயர்: சி. நியாஸ்,
வயது: 18
முகவரி: 262/1, சி.ஓ.லேன், மளிகைக்காடு-2, காரைதீவு.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், ரீ.வி.

பெயர்: எஸ். சத்தியசெல்வன்,
வயது: 18
முகவரி: 39, சமகிபுர, இறக்குவானை.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனா நட்பு.

பெயர்: ரி. ஜெகதீஸ்வரன்,
வயது: 19
முகவரி: புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி..

பெயர்: எம். அன்பு,
வயது: 25
முகவரி: 11/26, ஏ, தக்கியா லேன், திருகோணமலை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: என். ஜிப்ரி டீன்,
வயது: 20
முகவரி: விருதொடை, மதுரங்குளி.
பொழுது போக்கு: வானொலி, தொலைக்காட்சி.

www.padippakam.com

> பவளக்கொடி பெரியவளாகும் காட்சியை ஸில்ஹவுட்டில் எடுத்திருக்கும் விதம் அபாரமாயிருக்கிறது. ஆனால் முடிவில் டி.ஆர்.ராஜகுமாரியின் கால்களை க்ளோஸ்-அப்பில் காட்டாமல் இருந்திருக்கலாம். மற்றப்படி டைரக்ஷனில் பாராட்டும்படி ஒன்றுமில்லை!
> 'பவளக்கொடி' சினிமா விமர்சனத்தில்- 'கலை'- இதழில் (ஏப்ரல் 1949)

**இந்த வாரம் முதல் அமோக ஆரம்பம். ஒரு வாரம்கூட தவறவிடாமல் வாசியுங்கள். பட்டுக்கோட்டை பிரபாகரின் முத்தான தொடர் இது.**



# மேக்கப் புன்னகை

## பட்டுக்கோட்டை பிரபாகர்

**1**

இரவெல்லாம் எரிந்து முடித்திருந்த கொசுவர்த்திச் சுருள் உழைப்பின் நிரூபணமாக தரையில் சாம்பல் முறுக்குப் போட்டிருந்தது. கொடியில் கறுப்பு பிராவும், வெள்ளை பிராவும் அருகருகில் தொங்கிக் கொண்டிருந்தன.

திடீர்க் காற்றில் கொக்கி மாட்டாத ஜன்னல் கதவு சத்தமிட்டது. சுவர்க் காலண்டரில் மெல்லிய தாள்களில் நிரம்பிய தேதிகள் விடுதலைக்குத் துடித்தன.

சத்தத்தில் உறக்கம் கலைந்தது. இனியா அரைக் கண்களில் பார்த்தாள். நைட்டியில் வினோதினி. காதில் வோக்மன். கையில் 'ஸ்டார் டஸ்ட்.'

"வினோ, மணி என்னப்பா?"

பதில் தேவையில்லை போல போர்வையைக் கழுத்துவரை இடுக்கிக் கொண்டு, கைகளைத் தொடைகளுக்கு நடுவில் செருகிக் கொண்டு கண்களை



மூடிக் கொண்டாள். அது கேள்வி இல்லை. குட்மோர்னிங்குக்குப் பதிலானது.

"ஏழே முக்கால்தான் ஆகுது. தூங்கு. வாவ்!"

கடைசி துள்ளல் வார்த்தை, புத்தகத்தைப் பார்த்து.

"என்னாச்சு?"

"டாப்லெஸ் போஸ்! ப்ளோ-அப்! நம்ம ரூம்ல கண்டிப்பா ஒட்டப்போறேன்." கத்தரிக்கோல் எடுத்துக் கரக் கரக்கென்று வெட்ட ஆரம்பித்துவிட்டாள்.

"யாரு? ஷாருக்கானா?"

"இல்லை. என் ஆளு அப்பாஸ்!"

"ஹீல்ஸ் பிஞ்சுடும். நம்ம ஆளுன்னு சொல்லு. அவனைத் தேசிய உடமையாக்கியாச்சு."

அந்த ப்ளோ-அப்பை உடனே பார்த்தாக வேண்டும். தள்ளிப் போட முடியாது. போர்வையை விலக்கி எழுந்து விட்டாள் இனியா.

"எங்கே பார்க்கலாம்..?"

முத்தம் கொடுத்த பிறகுதான் அவளிடம் நீட்டினாள் வினோ.

"இந்தப் போஸ் சுமார்தான். நேர்ல இன்னும் சூப்பரா இருக்கான் தெரியுமா?"

"உனக்கென்னடி கொடுத்து வச்சவ. ரெண்டு இன்ச் பக்கத்தில நின்னு பேசுவே. உள்ளங்கையில ஆட்டோகிராஃப் வாங்குவே!"

"ரொம்ப பெருமூச்சு விடாதே- பட்டன் எகிறிடப் போகுது. ஒரே ஒரு தடவைதான் பார்த்தேன். அதுவும் பூஜையில. நூறு, இருநூறுபேர் நெருக்கியடிச்சுக்கிட்டிருந்தாங்க. சட்டுன்னு பேப்பர் எதுவும் கிடைக்கலை."

"போல்பொய்ண்ட் பேனாதானே? எப்படி குறுகுறுன்று இருந்திச்சா?"

"ம்கூம்... கோன்ல மெசந்தி வரைஞ்ச மாதிரி குளுகுளுன்று இருந்திச்சு."

"அய்யோ! அந்தச் சமயம் பார்த்து நான் லீவு போட்டுட்டு ஊருக்குப் போயிட்டேனே... உன்கைக்கு ஒரு முத்தம் கொடுத்திருப்பேனே.. நான் வர்றவரைக்கும் நீ குளிக்காம இருந்திருக்கலாமில்லே?"

"பக்கத்தில் இருந்த சினிமா ரிப்போர்ட்டர் அந்தக் கையெழுத்தோட என்னை போட்டோ எடுத்து புஸ்தகத்துல போட்டு ரெண்டு வரி எழுதிட்டான் தெரியுமா?"

"மைகுட்னெஸ்! சொல்லவே இல்லையே நீ! என்னன்னு எழுதியிருந்தான்?"

"காதல் யுத்தம் படப் பூஜைக்கு நடிகை மதுமிதாவுடன் வந்திருந்த அவர் தங்கை இனியா, அப்பாஸிடம் உள்ளங்கையில் கையெழுத்து வாங்கினார்ன்னு"

இனியா ஹேர் பாண்டை விடுவித்து கூந்தலை உதறிக் கொண்டு ஜன்னல் அருகில் வந்து நின்றாள். வெளியே ஹாஸ்டலின் மைதானத்தில் பெண்கள் ஷட்டில்கொக் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

சிலர் மெஸ்ஸை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

வோக்மனைக் கழற்றி வைத்துவிட்டு அவளருகில் வந்தாள் வினோ.

"அந்தச் சினிமா பத்திரிகையை எங்கே வச்சிருக்கே இனியா?"

"அக்கா கிழிச்சுப் போட்டுட்டா."

"ஏன்?"

"வேடிக்கையா கொண்டு போய்காட்டி னதுக்கு அவளுக்கு அவ்வளவு கோபம் வந்துடுச்சி."

"ஒரு ஃபன்தானே. வாட்ஸ்தேர்?"

"வேடிக்கைக்குக் கூட சினிமாவோட நிழல் என்மேல விழுந்திடக் கூடாதாம். இனிமே அவளைப் பாக்கிறதுன்னா, வீட்ல மட்டும்தான் பார்க்கணுமாம். ஷூட்டிங் ஃப்ளோருக்குப் போகக் கூடாதாம். மகாராணி உத்தரவு போட்டுட்டா."

"ஏன் அப்படி?"

"என் கவனம் முழுக்க படிப்பில மட்டும் தான் இருக்கணுமாம்! நான் கம்பியூட்டர் எஞ்சினியராகி பெரிசா தொழில் ஆரம்பிக்கணுமாம்!"

"ஆனா நீ காலேஜுக்கு கட் அடிச்சிட்டு பொப் ஷோ, ஃபஷன் ஷோ, ரெய்ன் டான்ஸ் ஸுன்னு பொறுப்பில்லாம சுத்திக்கிட்டிருக்கே!"

"இதெல்லாம் நானா ஏற்படுத்திக்கிட்ட ஆர்வம் தெரியுமா? தூரத்தில ஒரு ஆம்பளையைப் பார்த்தாலே இந்தப் பக்கமா ஓடிடுவேன். இப்ப? என் ஃப்ரென்ட்ஸ்ல போய்ஸ் தான் அதிகம்! இதையெல்லாம் மறைமுகமா அவளுக்கு நான் காட்ற ஒரு வகை எதிர்ப்புன்னு என் மனசு சொல்லுது வினோ. இவ யாரு என் வாழ்க்கை திசையைத் தீர்மானிக்கிறதுக்கு?"

"பின்னே ஏன் கட்டுப் படறே?"

"யாரு கட்டுப்படறா? ஒரு நாளாவது நான் படிச்சி நீ பார்த்திருக்கியா?"

"சரி எதுக்குக் கட்டுப்படற மாதிரி நடிக்கிறே?"

"என் கஸ்ட்யூம்ஸ், கொஸ்மெடிக்ஸ், காருக்கு பெற்றோல், காலேஜுக்கு ஃபீஸ் இதெல்லாம் எவனாச்சும் ஸ்பொன்சர் செய்யறதா சொல்லட்டும், அக்காவுக்கு எதிரா போர்க்கொடி தூக்கிடுவேன். காசு அவ மட்டும்தானே சம்பாரிச்சுத் தொலைக்கிறா... வசதியா சகல சௌபாக்கியங்களோட வளர்த்துத் தொலைச்சுட்டா... இதையெல்லாம் விட்டுக்கொடுக்க மனசில்லை. அதனால ரோஷத்தை உள்ளுக்குள்ளே புதைச்சு வச்சிருக்கேன்."

"ஏன் உங்கம்மா சம்பாரிக்காத காசா? அந்தக் காலத்திலயே பென்ஸ் வெச்சிருந்தவங்க இல்லை? எங்க பெரியப்பா செத்துப் போனப்ப, அவர் பெட்டியை ஆராய்ச்சி செஞ்சோம். உங்கம்மா படங்களை எல்லாம் ஒட்டி ஒரு ஆல்பமே வெச்சிருந்தார்."

"எல்லாப் பணத்தையும்தான் அந்தப் பொறுக்கி சுருட்டிக்கிட்டு ஓடிட்டானே! வீடு பூரா புரொடியூசர்ஸ் உட்கார்ந்திருந்த காலம் மாறி, வீடு பூரா கடன்காரங்க உட்கார்ந்திருந்த காலம் வந்ததாலதானே அக்காவே நடிக்க வந்தா."

"என்ன இருந்தாலும் எதுக்கு அப்பாவைப் போய் பொறுக்கின்னு திட்டறே?"

"ரெண்டு குழந்தையோட அம்மாவைத் தவிக்க விட்டுட்டு ஹிந்திக்காரியோட ஓடிப் போன ஒரு திருட்டு ராஸ்கலுக்கு அப்பான்ற மரியாதை எல்லாம் கொடுக்க முடியாது."

"சரி விடு. காலையே மூடைக் கெடுக்காதே! இன்னைக்கு எப்படி ஐடியா, காலேஜுக்கு வர்றதா உத்தேசம் இருக்கா?"

"ஒரு ஃபோன் வரணும். அதுக்கப்புறம் தான் முடிவு செய்வேன்."

"யாரு?"

"ஆகாஷ். புதுசா ஒரு ஃபர்ம் ஹவுஸ் வாங்கியிருக்கானாம். அதை இன்ட்டீரியர் டெக் பண்றதுக்கு என் யோசனை வேணுமாம்."

"இப்பெல்லாம் நீ ஆகாஷ் பத்தி அடிக்கடி பேசறே இனியா"

"அதனால என்ன?" பிரஷ் எடுத்து பேஸ்ட் பிதுக்கிக் கொண்டாள்.

"நீ அவனை...."

"கேட்டு முடி! லவ் பண்றியா? அதானே? இது லவ் இல்லைன்னு எனக்குத் தெரியும். அவனுக்கும் தெரியும். ஜஸ்ட் எ ஃபிரெண்ட். கம்பானியன். அவ்வளவுதான். சுதிர் மாதிரி, கல்யாண் மாதிரிதான் ஆகாஷும். நத்திங் ஸ்பெஷல்! க்ளியர்ட்?"

வோஷ் பேசினுக்குச் சென்று கொப்பளித்துவிட்டு வந்தபோது ஸ்டார் டஸ்ட்டைப் புரட்டி, "உன் அக்காவோட பேட்டி வந்திருக்கு இனியா! அப்படியே படிக்கட்டுமா? தமிழாக்கம் செய்யட்டுமா?" என்றாள் வினோ.

"வேணாம். என்ன புதுசா சொல்லியிருக்கப் போறா? கைல பதினாலு படம் இருக்கு. மூணு வருஷத்துக்கு கால்ஷீட் இல்லை. சீக்கிரத்தில ஹிந்தியிலேயும் நம்பர் ஒண்ணா வந்துடுவேன்! இதை வேற வேற வார்த்தைகள்ல பீத்திக்கிட்டிருப்பா... அதானே?"

கொடியிலிருந்து டர்க்கி டவல் உருவினாள்.

"உனக்கு அக்கா மேல கோபமா இல்லை, வெறுப்பா?"

"ரெண்டும் இல்லை."

"வேற என்ன?"

"வெளிப்படையா சொல்லட்டுமா?"

"சொல்லு"

"பொறாமை. வண்டி வண்டியாப் பொறாமை!"

"ஆனா, அவளுக்கு உன்மேல இருக்கிறது... அக்கறை."

"உன் தலை."

"உன் அக்காவை நீ சரியாப் புரிஞ்சுக்கலைன்னு நினைக்கிறேன்?"

"நீ சினிமாக்காரியைப் புரிஞ்சுக் கலைங்கிறதுதான் உண்மை."

"நீ அவளை சினிமாக்காரியா பார்க்கறே.ஆனா,அவள் உன்னை தங்கையா பார்க்கிறா இனியா."

"ஷிட்! அவ என்னை எதிரியா நினைக்கிறா வினோ. உனக்குப் புரியாது. அவளுக்கு என்மேல பாசம் கிடையாது,பயம்."

"என்ன பயம்?"

"அவளை நான் சாப்பிட்டுடுவேன்னு பயம்."

"உளறாதே!"

"அதான் நிஜம். அவ என்னைவிட நிறம் கம்மி. என்னைவிட உயரம் கம்மி. என்னைவிட அழகு கம்மி. அதனால அவளுக்கு காம்பிளெக்ஸ்! நான் இன்டஸ்ட்ரிக்குள்ளே வந்துட்டா, அவ காணாமல் போயிடுவா! அந்த பயம்! ஹிந்தில நம்பர் ஒன் பொசிசனுக்கு வரணுங்கற கனவெல்லாம் வெடிச்சிச் சிதறிடுமே! அந்த பயம்!"

"அவளுக்கு காம்பிளெக்ஸ்ன்னா, உனக்கு தான் காம்பிளெக்ஸ். சுப்பீரியாரிட்டி காம்பிளெக்ஸ்! நிறம், உயரம், அழகு- இதெல்லாம் உன் முயற்சியா? இதெல்லாம் ஜீன் ஆச்சரியம்! ஆனா, அவ ஜெயிச்சிருக்கிறது திறமையால! அதை ஏன் மறுத்திட்டே?"

"என்ன பெரிய திறமை? அடிப்படையா கொஞ்சம் ஆர்வம் இருந்தாப் போதும். அட்டகாசமான டைரக்டர்ஸ் இருக்காங்க, பட்டை தீட்டி ஜொலிக்க வைக்கிறதுக்கு! மதுமிதாவோட முதல் படத்தை இன்னைக்குப் பாரு! ஒரு எக்ஸ்பிரஷனும் இருக்காது. தத்தி மாதிரி பண்ணியிருப்பா. கதையினால படம் ஹிட்! ராசியான பொண்ணுன்னு பேர் வந்திடுச்சி. பழகப் பழகப் பயம் போச்சு. அதான் தொழில்னு ஆனதுக்கப்புறம் சூத்திரம் கத்துக்கிட்டா. எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்க்கச் சொல்லு, அப்புறம் பேசு!"

வினோ மென்மையாகச் சிரித்தாள். "ஹிந்தில நம்பர் ஒண்ணா வரணும்னு உங்க அக்காவுக்கு லட்சியம்னு நீ சொல்றே. ஆனா கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கிட்டு நடிக்கிறதை நிறுத்திக்கப் போறதா இந்தப் பேட்டியில சொல்லியிருக்கா."

பாத்ரூம் கதவைத் திறக்கப் போனவள் அதிர்ச்சியுடன் அருகில் வந்து, "அப்படியா சொல்லியிருக்கா? இதென்ன புதுசா இருக்கு?" என்று பரபரப்பாக அந்தப் பேட்டியைப் படிக்கத் துவங்கினாள் இனியா.

(தொடரும்)

---



# காதலடி நீ எனக்கு....

**அரி**

கல்லூரி தமிழ் வகுப்பு போரடிக்க ஆரம்பித்தது. சங்க இலக்கியத்தை பேராசிரியர் 'கடி'க்கத் துவங்கி இருந்தார்.

"இன்னும் அரை மணிக்கு குறையாம கிழம் அறுக்கும். ச்சே! எந்திரிச்சு போகவும் முடியாது. இன்டர்னல்ல கைய வெச்சிரும்."

முணுமுணுத்துக்கொண்டான் ரகு. வெறுப்பாக இருந்தது. பக்கத்தில் கிடந்த நோட்டைப் பிரித்து, 'வித்யா...வித்யா... வித்யா...' என்று எழுத ஆரம்பித்தான். அவன் நினைவுகள் முன்தினம் மாலையில் நடந்த கடற்கரை சந்திப்பை அசை போட்டது.

"நெஜமாகவே என்னை லவ் பண்றியா ரகு?"

வித்யா கேட்ட கேள்விக்கு அவளை இழுத்து அறையலாம் என்று தோன்றியது. கட்டுப்படுத்திக் கொண்டான். மேலே வானம் பார்த்தான். தலையை அலைந்து கொண்டான். இவளுக்கு எப்படிப் புரிய வைப்பது என்று புரியாமல் தவித்தான்.

"தயவு செஞ்சு வாயத்திறந்து பதில் சொல்லு. பதில் சொல்லாம இருந்தா எப்படி தெரிஞ்சுக்கிறது?"

"எத்தனை தடவை சொல்லிட்டேன். ஆமா... எஸ்... ஐ லவ் யு. ஐ லவ் யு. ஐ லவ் யு... போதுமா?"

"சரி. அப்படின்னா என் கேள்விக்கு பதில் சொல்லு. காதல்னா என்ன?"

"வித்யா. என்னாச்சு உனக்கு இன்னிக்கு?"

"புரியல ரகு. நாம பழகறது புரியல. காதல்ங்கறது ஜஸ்ட் பிரண்ட்ஷிப் மட்டுமா. இல்லை, உடல் இச்சையா. எதுக்காக நாம பழகணும், பேசணும். அல்லாடணும்னு தோணறது...?"

"உன்னை ஓங்கி அறையலாமான்னு தோணுது..."

"சரி..."

"என்ன சரி... இப்படியே பினாத்திக்கிட்டே போனா, அதான் நடக்கும்..."

அவன் ஆவேசம் கண்டு அவள் சிரித்தாள்.

"சிரிக்காதே... ஆத்திரமா வருது. நானும் பீச்சுக்கு வந்ததுல இருந்து பார்க்கிறேன். இன்னிக்கு முரண்டு பிடிக்கிறே!"

"இல்லை ரகு. என்னை தெளிவுபடுத்திக்க பார்க்கிறேன். காதல்னா என்ன?"

"பிளீஸ் வித்யா. ரொம்ப குழப்பிக்காத. உன்னை எனக்கு பிடிச்சிருக்கு. என்னை உனக்கு பிடிச்சிருக்கு."

"அவ்வளவுதானா காதல்? அப்படீனா எனக்கு அதோ அந்த சுண்டல் விக்கிற பையனைக் கூடத்தான் பிடிச்சிருக்கு."

"என்ன வித்யா பேசற? நானும், அந்த சுண்டல் பையனும் ஒண்ணா....? ஐயோ! உனக்கு எப்படி புரிய வைக்கிறதுன்னு தெரியல வித்யா. ஐ லவ் யு..."

"எனக்கும்தான் புரியல ரகு. ஒண்ணு நிச்சயம், ரெண்டு பேர் வீட்லயும், இந்த காதலை ஒத்துக்கப் போறதில்லை. வீணா சண்டைதான் வரும்."

"வரட்டும். எதிர்த்து நிப்போம்."

"எப்படி ரகு முடியும்?"

"ஏன் முடியாது? உனக்காக நான் என்ன வேணும்னாலும், செய்வேன் வித்யா."

"பேச நல்லா இருக்கும். நாளைக்கே பிரச்சனைன்னு வந்தா தெரியும். நீயும் படிக்கற, நானும் படிக்கறேன். நமக்கு வேலை இல்லை. நிச்சயமான எதிர்காலம் இல்லை. இப்ப காதலிச்சு என்ன செய்ய போறோம்?"

"நமக்கு வேலை கிடைக்காமலா போயிடும்? அதுக்கப்புறம் கல்யாணம் பண்ணிக்கலாம் வித்யா. அதுவரைக்கும் காதலிப்போம்."

"இப்பவே நான் லேட்டா வீட்டுக்கு போனா ஏகப்பட்ட கேள்வி கேக்கிறாங்க. நம்மால ரொம்ப நாள் தாங்க முடியாது ரகு."

> **"நெஜமாகவே என்னை லவ் பண்ணுறியா ரகு?" வித்யா கேட்ட கேள்விக்கு அவளை இழுத்து அறையலாம் என்று தோன்றியது.**

இவள் ஏன் இப்படி பதற்றப்படுகிறாள். காதல் என்பதே 'காத்திருத்தல்' என்பதன் சுருக்கம்தானே! இந்த அடிப்படைகூட புரியாமல்தான் தாமரை இலை தண்ணீர் மாதிரி ஒட்டாமல் பழகுகிறாளோ?

❤❣❤

வகுப்பு முடிந்ததற்கான மணி அடித்தது.

"மறுபடியும் அடுத்த வகுப்பில் சந்திப்போம்," என்றபடி பேராசிரியர் வெளியேறினார். அடுத்த பேராசிரியர் வருவதற்குள், ரகு வகுப்பைவிட்டு வெளியேறினான்.

அவனுக்கு உடனே வித்யாவைப் பார்க்க வேண்டும்போல இருந்தது. 'நீ என்னை காதலிக்கிறாயா?' என்று தீர்மானமாக கேட்டுவிட வேண்டும். அதே வராண்டாவின் கோடியில் வித்யாவின் வகுப்பு இருந்தது.

அதைக் கடந்து போவது போல சென்று திரும்பிப் பார்த்தான். முன் வரிசையிலேயே அமர்ந்து இருக்கும் வித்யாவின் இடம் காலியாக இருந்தது. 'இன்று ஏன் வரவில்லை. என்ன ஆச்சு. இன்றைக்கு அவளை பார்த்தே ஆக வேண்டும். அவள் வீட்டுக்குப் போனால் என்ன?' எண்ணத்தை செயல்படுத்தத் தொடங்கினான் ரகு.

வித்யாவின் வீடு ஊருக்கு கோடியில் இருந்தது.

அவள் வீட்டு வாசலில் நிறைய செருப்புக்கள். வாசல் தெளித்து புதிதாய் கோலம் பூத்திருந்தது.

வீட்டில் என்ன விசேஷமோ? அவளை காண முடியுமா? என்று தயக்கமாக இருந்தது. வீட்டின் நேர் எதிரே கம்பி வலை போட்ட எதிர்வீட்டு காம்பவுண்ட் (?). அதன் ஓரமாய் ஒரு வேப்பமரம். அதன் நிழலில் போய் நின்று கொண்டான். வித்யா முகம் தெரிகிறதா என்று அவள் வீட்டையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

சில நிமிடங்களுக்குப் பிறகு வாசல் ரூம் ஜன்னலில் வித்யா முகம் எட்டிப் பார்த்தது. 'சட்'டென கண்களில் கலக்கம். இவன் புன்னகைக்க முயன்றான். அடுத்த நொடி மறைந்து போனாள்.

'என்ன மனுஷி இவள்? இவளுக்காக வேகாத வெய்யிலில் இத்தனை தூரம் வந்திருக்கிறேன். பேச வேண்டாம். புன்னகைக்குக் கூடவா பஞ்சம்...?'

ஒரு சின்னப் பையன் வீட்டிலிருந்து ஓடி வந்தான். பிஞ்சு விரல்களில் ஒரு மடிப்பு காகிதம். "இந்தா!" என்றான். ஆர்வமாய் வாங்கிக் கொண்டான். சிறுவன் ஓடிப்போனான். மனசு 'படக் படக்' சொல்ல காகிதத்தைப் பிரித்தான்.

"தயவு செய்து வீட்டின் முன் நிற்காதீர்கள்! எனக்கு இன்று நிச்சயதார்த்தம். எதிர்காலம் நிச்சயமில்லாமல் உங்களுக்காக காத்திருப்பதைக் காட்டிலும், படித்து முடித்து பாங்கில் வேலை பார்க்கும் மாப்பிள்ளையே மேல் என்று தோன்றியது. திருமணத்திற்கு சம்மதித்து விட்டேன். இனி என் வாழ்வில் குறுக்கிட வேண்டாம்!"

அவசர கிறுக்கல்கள் மொட்டையாய் முடிந்து போய் இருந்தது. ஒவ்வொரு வார்த்தையும் சம்மட்டியால் அடிப்பது போல இருந்தது. அதிர்ச்சியில் சிலையாகிப் போனான்.

*'காதலடி நீ எனக்கு*
*காந்தமடி நானுனக்கு*
*வேதமடி நீ எனக்கு*
*வித்தையடி*
*நானுனக்கு.'*

சினிமா பாடல் பொருத்தமற்ற நேரத்தில் காற்றில் மிதந்து வந்தது. கண்ணீர் படலம் கண்களை மறைக்க, தளர்வாய் திரும்பி நடக்கத் தொடங்கினான். ■


படிப்பகம்

ஈழத்தின் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவர் அமரர் யோ.பெனடிக்ற் பாலன். அவர் 1967 இல் எழுதிய சிறுகதை இது.

# கைதேர்ந்தவர்கள்

யோ. பெனடிக்ற் பாலன்

தோட்டத்துரை, தங்க மலைத் தோட்டக் கந்தோரில் தனக்கென அமைக்கப்பட்ட அறையில் உள்ள மேசையின் முன் கெம்பீரமாக அமர்ந்திருந்தார். அவர் நெற்றியில் விழும் வெள்ளைத் தோல் சுருக்கங்கள் அவரின் யோசனையைத் துலாம்பாரமாகக் காட்டின.

கொஞ்சத் தூரத்துக்கப்பால், இரு மலைகளுக்கு மத்தியில் அமைக்கப்பட்டிருக்கும் 'பக்டரியின்' காற்றாடி வீச்சாக அசைந்து கொண்டிருப்பது அவரின் முழிக்கண்களுக்குள் தெரிகின்றது.

அச் சிவப்பு நிறக் காற்றாடி ஊமை இழுவையுடன் இரைந்து கொண்டிருந்தது.

பக்டரிக்கும் துரையின் கந்தோருக்கும் இடையில் உள்ள பசுமை கொழிக்கும் தேயிலை மலைச்சரிவுகளில், பெண்கள் குளிரடித்துப் பெய்யும் மழையில் நனைந்து, கூனிக்குறுகிக் கொழுந்து பறித்துக் கொண்டிருக்கும் காட்சியும் ஒரு அழகுதான். மழை பெய்கின்ற இந்நேரத்தில் அவர்களின் கால்களில் அட்டைகள் இரத்தம் குடித்துக் கொண்டிருக்கும்.

கொழு கொழு எனப் பார்வைக்கு இதம் கொடுத்துக் கொண்டிருந்தது அந்தத் தங்கமலைத் தேயிலைத் தோட்டம். அதன் செழிப்பும், பசுமையும் பார்ப்பவரின் பசியை ஒரு முறை போக்கிவிடும். அக்கொழு கொழுப்பில் தொழிலாளரின் இரத்தமும் கலந்துள்ளது.

அத்தோட்டம் அந்நிலையில் இருப்பதற்கும்; கூடிய லாபம் தருவதற்கும் காரணம், அத்தோட்டத்தின் பெரிய துரை போமென்தான் என்று அத்தோட்டக் கம்பனி முதலாளிகள் கூறிக்கொள்வார்கள்.

தன் அறையில் இருந்து யோசிக்கும் போமென் துரையின் கண்களில் பக்டரியின் அருகில் உள்ள பெட்டிக் காம்பராவில் தொழிலாளிகள் பெட்டி அடிக்கும் அசைவுகள் தான் பூரணமாகத் தெரிந்தன. அவர்கள் சுத்தியலால் கை ஓங்கி அடிக்கும் சத்தம் அவருக்குக் கேட்கவில்லை.

தன் நிர்வாகத்தின் கீழ், குறைந்த செலவில் கூடிய லாபம் கிடைக்கிறதென்பதை பிரித்தானியாவில் உள்ள தோட்ட முதலாளிகளுக்கு வருடா வருடம் முன்னேற்றமான அறிக்கை காட்ட வேண்டுமென்பது அவரது ஒருமனதான இலட்சியம்.

தேயிலைப் பெட்டி அடிக்கும் வேலையை நாட்கூலிக்கு விடுவதால் கூலி அதிகம் போகிறது. தொழிலாளர்களும் ஒழுங்காகப் பெட்டி அடிப்பதில்லை. கொந்தராப்புக்கு விட்டால்தான் லாபம் அதிகம். அதுவும் மற்றத் தோட்டங்களில் கொடுப்பதிலும் பார்க்க குறைந்த ரேட்டுக்குக் கொடுக்க வேண்டும். அதற்கு என்ன செய்வது?

துரையின் மூளை, அவர் கண்கள் பார்த்துக் கொண்டிருக்கும் 'பக்டரி'க் காற்றாடியிலும் வேகமாகச் சுழன்று கொண்டிருந்தது.

வாயில் உள்ள சுங்கானில் இருந்து, சுருட்டுப் புகை சுதந்திரமாக விரும்பிய திசையெல்லாம் நெளிந்து கொண்டிருந்தது.

பெட்டிக் காம்பராவில் வேலை செய்பவர்களில் கறுப்பையா கெட்டவன். அதாவது தொழிற்சங்கத் தலைவன், நியாயப்படி கேட்பான். கொந்தராப்புக்குச் சம்மதிக்க மாட்டான். இராமையா- அவன் மற்றத் தோட்டங்களில் கொடுப்பதைப் போல் தனக்கும் தரும்படி கேட்பான். புத்தி கொஞ்சம் இருக்கிறது. கிறிஸ்தோப்பன் சுத்தமோடன், வஞ்சகமில்லாதவன். தொழிற்சங்கத்தில் சேரவில்லை.. ஒரு கத்தோலிக்கன், விசுவாசமாக வேலை செய்வான். இப்படியாக அத் தொழிலாளரைப்பற்றி 'டீமேக்கர்' கூறியவை சிந்தனையில் ஒழுங்காக வந்து, தனக்குச் சாதகமான முடிவு எடுக்கத் தூண்டின.

துரை கை விரல்களைக் கோர்த்து, ஒன்றுடன் ஒன்றை உரசியவாறு, கண்களை வெட்டினார்.

"போய்!"

"தொரே!"

கந்தோர் பையன் முத்துசாமி ஓடிச் சென்று துரை முன்னால் சலாம் போட்டு நின்றான்.

"கிறிஸ்தோப்பனை அழைச்சுக்கிட்டு வா!"

முத்துசாமி பக்டரியை நோக்கி, மலைப் படிகளால் இறங்கி ஓடினான். கொஞ்ச நேரத்தில் கிறிஸ்தோப்பன் முன்னே வர முத்துசாமி பின்னால் ஓடி, ஓடி வந்தான். கிறிஸ்தோப்பன் குலைந்திருந்த தலைமயிரைக் கைகளால் கோதி அணிந்த காக்கிக் காற்சட்டையை இழுத்துச் சரி செய்து விட்டு முப்பத்திரண்டு பற்களும்தெரிய கந்தோர் வாசலில் இழித்துக் கொண்டு நின்றான்.



"கிறிஸ்தோப்பன்!"

கன்னங்களில்சறுகி ஓடும் சிரிப்புடன் துரை அழைத்தார். கிறிஸ்தோப்பனுக்கு உச்சி குளிர்ந்தது. குளிர வைக்கப்பட்டது.

"தொரே! சலாமுங்க தொரே!"

பாய்ந்து விழுந்து சென்ற அவன், பெரிய சலாம் ஒன்றைப் போட்டு, துரைக்கு முன்னால் கை கட்டி நின்றான். இரு கால்களும் ஒன்றோடொன்று ஒட்டி இருந்தன. கட்டிய கைகளை, ஒடுக்கியது காணாதென்ற பிரமையில் இன்னும் உள்ளே உள்ளே ஒடுக்கியவாறிருந்தான். முகத்தில் இழிப்புக் குறையவில்லை.

அவனையே பார்த்துக் கொண்டிருந்த துரை மெதுவாக எழுந்தார். சுங்கானை வாயில் வைத்துப் புகைவிட்டவாறு, அவனருகில் வந்து தோளில் தட்டினார். கிறிஸ்தோப்பன் வெட்கப்பட்டவனாய்க் கூசி, புளகாங்கிதம் அடைந்து சிரித்தான்.

"கிறிஸ்தோப்பன் நீ என்ன சமயோம்?"

"நானுங்க தொரே, கத்தோலிக்க சமயமுங்க!"

"வெறிகுட்! நானும் அதுதான்; நானும் கத்தோலிக்கன்தான்; தெரியுமா?"

"நல்லதுங்க தொரே!"

துரை சடுதியாக ஏதோ யோசனையில் மூழ்கி, முன்னால் சுவரில் தொங்கி கொண்டிருக்கும் எலிசபெத் மகாராணியின் படத்தைப் பார்த்தவாறு நின்றார். பின்பு ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து, அதன் கிட்டச் சென்று கைலேஞ்சியை காற்சட்டைப் பையில் இருந்து எடுத்து அதிலே பட்டிருந்த தூசியைத் துடைத்து விட்டு, கிறிஸ்தோப்பனை நோக்கித் திரும்பினார்.

"இது யார் தெரியுமா?"

"இவங்க தொரே எலிசபெத் மகா ராணியுங்க!"

"ஆர்வுட்டு ராணி இவங்க?"

"எங்க ராணிங்க தொரே எங்க ராணி!"

"வெறிகுட்! கிறிஸ்தோப்பன்! எந்தத் தொழிற்சங்கத்திலே சேர்ந்திருக்கிறாய்?"

"ஒண்ணிலேயுமில்ல, தொரே! ஒண்ணிலேயுமில்ல!"

கிறிஸ்தோப்பன், ஆனந்தத்தோடு முகத்தை இரு கைகளாலும் உரஞ்சித் துடைத்துவிட்டு நின்றான்.

துரை மேசைக்கு முன்னால் அமர்ந்து மேசையில் உள்ள பைல்களைப் பார்வையிட்டார். பத்து நிமிடங்களுக்கு மேல் சென்று விட்ட பின் நிமிர்ந்து அவனைப் பார்த்து புன்னகைத்தார். அவனும் சிரித்தான்.

"யு ஆர் எ குட் மான்!"

கிறிஸ்தோப்பன் கீழுதட்டைக் கடித்து எச்சிலால் நனைத்துக் கொண்டான்.

"கிறிஸ்தோப்பன்! நான் பெட்டிக் கொந்தராப்பை ஒனக்குத் தருகிறேன். நீ எடுத்துக்கோ!"

"சரியுங்க தொரே!"

பெரிய துரை சொல்லிவிட்டார், அது வேதவாக்கியம்: அவன் மறுக்கமாட்டான்; அவனுக்கு மறுக்கவும் தெரியாது.

கிறிஸ்தோப்பனுக்குப் படிப்பில்லை, கணக்குவழக்கு சூனியம். கொந்தராத்தைப் பற்றி எதுவித அறிவும் இல்லை.

"அப்போ, இங்கே வா!"

அவன் துரைக்கு அருகில் சென்று நின்றான். எதற்கு அழைக்கிறார் என்று தெரியாமல் வளர்த்த நாய், முகத்தைப் பார்ப்பது போல் அவரைப் பார்த்தான்.

"சரி இதில் ஒரு கையெழுத்துப் போடு!"

கிளார்க் அழைக்கப்பட்டார். கிறிஸ்தோப்பன் தன் பெருவிரல் அடையாளத்தை கிளார்க் காட்டிய இடத்தில் இட்டான். துரையினால் அவனுடன் செய்யப்பட்ட ஒப்பந்தம் பூர்த்தியானது. அவருக்கு வெற்றி.

"சரி, போய் வேலையைத் தொடங்கு!"

"சரியுங்க தொரே!"

"டமேஜ் ஆனா எல்லாம் ஒன்பொறுப்பு!"

"சரியுங்க தொரே"

"ஒரு பெட்டிக்குப் பதிமூணு சதம் மட்டுந்தான்!"

"நல்லதுங்க."

"சரி போ! ஆ! வேற கூலியை வேலைக்கு எடுத்தா அதுவும் உன்பொறுப்பு!"

"நல்லதுங்க தொரே!"

"எவன் சொல்லுங் கேட்காத, ஒன்னைக் கெடுத்துப் போடுவானுக!"

"சரிங்க தொரை!"

"சரி போ!"

"சலாமுங்க, வர்றேங்க தொரே!"

கிறிஸ்தோப்பனுக்கு என்றுமில்லாத ஒரு மனநிறைவு. பெரிய துரை தன் தோளில் தட்டியதையும், தன் பெயரை முழுவதாகச் சொல்லி அழைத்ததையும் எண்ணி எண்ணி கிழுகிழுப்பு அடைந்தவாறு பெட்டிக் காம்பராவை நோக்கி ஓடி வந்தான். அங்கு வாசலில், சுத்தியலைக் கையில் பிடித்தவாறு கிறிஸ்தோப்பனின் வரவை எதிர்பார்த்து இராமையாவும் கறுப்பையாவும் நின்று கொண்டிருந்தனர். கிறிஸ்தோப்பன் காற்சட்டையின் இரு பைகளுக்குள்ளும் கைகளை விட்டு, சின்னத் துரையைப் போல் நிமிர்ந்து நின்றான். எல்லாம் துரை கொடுத்த மதிப்பு.

"ஏன் ஒன்னை தொரே அழைச்சாரு?"

கறுப்பையா சாவதானமாகக் கேட்டான்.

"தொரை என் பேரைச் சொல்லி அழைச்சாரே! நல்ல தொரே!"

அவனுக்கு துரை அவன் பெயரைச் சொல்லி அழைத்த சந்தோஷம் முடியவில்லை.

"அதைவுடு! ஏன் அழைச்சாரென்று முதல்ல சொல்லு!"

"தோளிலெல்லாங் கை போட்டுக் கிறிஸ்தோப்பன் குட்மான் என்னாரு!"

கறுப்பையாவுக்கு கோபம் ஏறிவிட்டது.

"ஏன் அழைச்சாரென்று சொல்லித் தொலையேன்?"

கிறிஸ்தோப்பன் பெட்டிக்காம்பரா நிலையில் இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு கால்களை மாறிவைத்து நின்றான்.

"பெட்டிக் கொந்தராப்பு கொடுக்கிறதுக்கு!"

"பெட்டிக் கொந்தராப்பா?"

இராமையா ஆச்சரியத்துடன் வினாவினான். அப்போதுதான் அவனுக்கு யோசனை தொட்டது.

"எடுத்துக்கிட்டியா?" கறுப்பையா ஆவலாகக் கேட்டான், உள்ளூர ஆத்திரம், அது அவன் மீதில்லை.

"ஆமா!"

"எவ்வளவுக்கெடுத்தாய்?"

"ஒரு பெட்டிக்குப் பதிமூணு சதோம்!"

"மோட்டாசாமி! இழிக்கிறியே மற்றத் தோட்டங்களிலே எவ்வளவு கொடுக்கிறாங்க தெரியுமா?"

கிறிஸ்தோப்பனின் சிரிப்பு ஆவியாகி பழையபடி முகம் சோர்ந்துவிட்டது.

"எவ்வளவு குடுங்கிறாங்க?"

"இருபது சதோம்!"

"ஐயோ!" கிறிஸ்தோப்பன் ஏங்கிப்போய் நின்றான்.

அவன் நின்ற நிலையில் அவன் மேல் கறுப்பையாவுக்கும், இராமையாவுக்கும் அனுதாபம் ஏற்பட்டுவிட்டது.

"தொரை ஏமாத்திப்புட்டான்! சுரண்டிற புத்தியல்லா ராஸ்கோல்!" இராமையா பெட்டிக்காம்பராவுக்கு உள்ளே நடந்தான்.

"ஓடு தொரேயிக்கிட்டப் போயி கட்டாதுன்னு சொல்லு. குறைஞ்சது மூணுபேர் வேலை செய்யணும்; ஒரு நாளைக்கு குறிச்ச தொகை முடிச்சுக் கொடுத்தே ஆகணும், ஏன் பேர்க்கூலி கூட எடுக்கமாட்டாய் ஓடு!"

கறுப்பையா கத்திச் சொன்னான். கிறிஸ்தோப்பன் தயங்கி நின்றான்.

"ஏன் நட்டகட்டை மாதிரி நிக்கிறே? மூளை கெட்டவனே!"

அவன் குனிந்து நிலத்தைப் பார்த்துப் பிடரியைக் கைகளால் சொறிந்த வண்ணம் மெதுவாகச் சொன்னான்:

"நா, கையெழுத்துப் போட்டுக் கொடுத்துப்புட்டேனே?"

கறுப்பையா, அவனை ஆத்திரமும், அனுதாபமும் சேர்ந்த கோபத்துடன் நோக்கினான். கிறிஸ்தோப்பன் தன் களங்கமற்ற தோற்றத்துடன் உணர்ச்சியின்றிச் சிரித்துக் கொண்டு நின்றான்.

"பெட்டியை அடிச்சடிச்சுச் செத்துப் போ, போயேன் ஏன் நிக்கிறே?" இராமையா கோபமாய், கிறிஸ்தோப்பனைப் பிடித்துப் பெட்டிக் காம்பராவுக்குள்ளே தள்ளி விட்டான்.

அவன் நெஞ்சைப் பொத்திக் கொண்டு இருமியவாறு அந்த இடத்திலேயே நின்றான்.

---

# தாரத்தின் முன் தாய்

ரூபராணி

"டேய் கணேஷா, உன்ர பெண்டாட்டி என்ன பெரிய அழகியா? காதலுக்கு கண்ணில்லைன்னு சரியாத்தாண்டா சொன்னாங்க"

தொலைபேசி அலறியது. இரவு, பதினொரு மணியைத் தாண்டிவிட்டது. குளிரின் இறுக்கமான பிடியிலிருந்து போர்வையை உதறித் தள்ளிவிட்ட ஆஷா பதற்றத்துடன் றிசீவரை எடுத்தாள்.

"ஹலோ"...

மறுமுனையில் மாலா

"என்னடி இந்த நேரத்தில..?"

'மௌனம்', ஆஷாவைத் துளைத்தது.

"ஏய் மாலா, சொ..ல்..லு!"

"தனூஜா.. செ.த். திட்டா". மாலாவின் வாயிலிருந்து வார்த்தைகள் தட்டுத் தடுமாறின.

அணுகுண்டு வெடித்த அதிர்ச்சி ஆஷாவுக்கு.

"செத்திட்டாவா? என்னடி முந்தாநேத்து ஸ்கூலுக்கு வந்து படிப்பிச்சி அரைநேரத்தோட போனாளே... எப்போ செத்தாள்? எப்படி..?"



அவள் கேள்விக்குப் பதில் வரவில்லை. தொலைபேசி ஊமையாகியது.

ஆஷாவின் ஆப்த நண்பி, தனூஜா.

"தனூ.. நீ எப்பிடி... ஏன்.?" விடை தெரியாமல் ஓவென்று அழுதாள் ஆஷா. அவளுடைய தூக்கம் தொலைந்துவிட்டது. மல்லாந்து படுத்துக் கண்களை மூடினாள். அவள் முன்னால் புன்னகைத்து நின்ற, தனு, "கதையைக்கேளுடி!" என்றாள். ... "நான் ஒரு ஏழைக்குடும்பத்தின் கடைசிப் பெண். ஒரு அக்காவும் ஒரு அண்ணாவும் கலியாணம் செய்து தங்கள் வழிக்குப் போய் விட்டார்கள். மிஞ்சியது நான். நல்லவேளை நான் ஒரு ஆசிரியை.." சொல்லி விட்டுச் சலங்கை ஒலியாய்ச் சிரித்தாள் தனு.

ஆஷா சுற்றும் முற்றும் பார்வையைச் சுழற்றினாள். அந்த அறை முழுவதும் சூனியம் இருளாய் அப்பிக்கிடந்தது.

"ஆஷா, வாழுறதா சாகிறதா லேசடி.? சொல்லுடி..." கேள்வியால் குத்தினாள் தனு. "என் சம்பளத்தைத்தவிர எனக்கிருப்பது என் அம்மா. அவ விதவை. எனக்குக் கலியாணமே நடக்காது என்று எண்ணியவேளை என் வாழ்வில் குறுக்கிட்டவன் கணேஷ். காதலித்தான் கைப்பிடித்தான். என் தாயுடன் இருந்த என்னைத் தன் தாயுடன் சேர்த்து விட்டான்."

தனுவின் மூச்சுக்காற்று அனலாக ஆஷாவில் மோதியது. "என்னுடைய மாமியும் மச்சாள்மாரும் என்னை ஒரு மனுஷியா கணக்கெடுக்கல. தெனம் முப்பது மைல் பயணம். கொடுமைகளைச் சுமந்து பள்ளிக்கூடம் வந்து வீடு திரும்பும்போது என்னுடல் சோர்ந்துவிடும். எல்லோருக்கும் மாமி தேனீர் ஊத்துவா. என்னைத் தவிர்த்து. வேளா வேளைக்குச் சாப்பிடக்கெடைக்குமா? வீட்டு வேல அத்தனையும் என் கையால முடியணும். சொல்ல மறந்திட்டன் ஆஷா, ஒரு பூச்சாடி என் கையைவிட்டு நழுவி நொறுங்கிப்போச்சு. அதுக்கு என்ன பரிசு தெரியுமா?" தனுவின் குரல் தழுதழுத்தது. "மாமி விறகுக் கட்டையால் விளாசினாள். மச்சாள் என் நீண்ட கூந்தலை ஒட்டவெட்டினாள்." தனுவின் விம்மல் ஒலி தெளிவாகக் கேட்டது.

"என்ன தனு புது ஸ்ரைல்? வரவர நீயும் 'மொட்டு'தான்." என்றோ ஒரு நாள் தனுவைக் கிண்டல் பண்ணியது இப்போது ஆஷாவின் நினைவுக்கு வந்ததும் ஆத்திரம் அவசரமாக வெளிப்பட்டது. "உன்னோட கணவனுக்கு இதெல்லாம் தெரியாதா என்ன? அவரிட இதயம் என்ன இரும்பா" ஆஷா பொரிந்தாள்.

பயங்கரமாகச் சிரித்தாள் தனு.

"ஆஷா, நீ உலகம் தெரியாதவடி. கலியாணத்துக்கப்புறமும் அம்மாட முந்தானை புடிக்கிற புருஷனுகளும் இருக்கிறாங்க. சொந்தப் புத்தியில்லவே இல்ல. அம்மாக்கு முன்னால என் புருஷனுக்கு கண்ணுமில்ல. வாயுமில்ல. அம்மா எது சொன்னாலும் அவர் தலையாட்டும் பொம்மைதான்."

"இதக் கேளுடி, 'டேய் கணேஷா உன்ர பெண்டாட்டி என்ன பெரிய அழகியா? காதலுக்குக் கண்ணில்லன்னு சரியாத்தாண்டா சொன்னாங்க. அவ கழுத்தில ஒரு பொட்டுத் தங்கம் இல்ல எண்டு உன்ட கண்ணுக்குத் தெரியல்லியே. அவ எண்ணைக்கு இந்த வீட்ல காலடி வச்சாளோ அண்ணைக்கே லெட்சுமி வெளியே போயிட்டா. கலியாணமாகி வருஷம் ரெண்டு. அவ வயித்தில எதுவும் தங்கலியே? பேசாம மாமா பொண்ண முடிச்சிடு!' இதையெல்லாம் சொன்னது யார் தெரியுமா? மாமி தான் அதுவும் சத்தமாய்.

என் கணவர் என்ன சொல்லப் போறார் எண்டு என் மனசு படபடத்திச்சி ஆஷா!"

"சொல்லு சொல்லு!" ஆஷா துடித்தாள் என்ன சொன்னார்?"

"நா அம்மா புள்ளையாச்சே ஒன்பேச்சைத் தட்டுவனா?" அண்ணைக்கே நான் செத்திட்டண்டி, கரும்பலகைல எழுதிறப்போ திடீர்னு என் வலது கை விறச்சுப் போச்சு. அர நாள் லீவு போட்டு வந்திட்டேன். எனக்கென்று இனி எதுவுமில்ல. ஆஷா." தனுவின் கதறல் ஆஷாவின் இதயத்தைப் பிழிந்தது.

"தனூ..தனூ..தனூஜா..." ஆஷா அலறினாள். அங்கே தனு இல்லை.

---

# யாருமில்லாத நேரத்திலே.....

ஆத்மதா

தண்ணீர் எடுக்க ஆற்றங்கரைக்கு வந்த தாரா சுகுமாரை சந்தித்தாள்.

"சுகுமாரத்தான்.... நாளைக்கு காலையிலே வீட்டுக்கு வாங்க, நான் மட்டும் தான் தனியா இருப்பேன்," என்று சொன்னவள், அவன் பதிலுக்கு கூட காத்திராமல் தண்ணீர் மொண்டு கொண்டு போய்விட்டாள்.

தாரா அவனுடைய முறைப் பெண். விரைவில் அவர்களுக்கு திருமணம் நடக்கப் போகிறது. அவளின் அழகு அவனை அசத்தியது.

அவனுக்கு மனதில் 'திக்' என்று இருந்தது. திருமணத்திற்கு முன்பே அவளுடைய வீட்டுக்குச் செல்வதற்கு தன்மானம் இடம் கொடுக்க மறுத்தது.

அடுத்த நாள்....

'தன் அத்தை மகளே கூப்பிடும்போது நமக்கென்ன வந்தது... அத்தை, மாமா வேறு வீட்டில் இல்லை... என்னிடம் அந்தரங்கமாய் பேச ஆசையாய் இருந்திருக்கும் தாராவுக்கு...'

அவளை நினைக்கையிலேயே வாயில் 'ஜொள்ளு' ஊறியது. 'அந்தப் பவள இதழ்களும், படபடக்கும் மை விழியும், எப்படியாவது ஒரு 'இச்' கொடுத்துவிட வேண்டும். இதெல்லாம் நேரடியா கேப்பாளா என்ன... ஒரு கோடு போட்டுத்தான் காண்பிப்பாள்... 'யாருமே இல்ல... நான் தனியா இருக்கிறேன்னு,' நான்தான் புரிஞ்சுக்கணும்.'



ஆவலுடன் 'டிப்-டாப்' ஆக டிரஸ் பண்ணிக் கொண்டு... 'செண்ட்' போட்டுக் கொண்டு, அசத்தலுடன் அத்தை வீடு நோக்கிச் சென்றான்.

வாசலிலேயே இவனை எதிர்பார்த்திருந்தவள், இவனைப் பார்த்ததும், துள்ளலுடன் "வாங்க!" என்று வரவேற்றாள்.

"என்ன தாரா! ஏன் வரச் சொன்னே...?"

"ஏன் வரச் சொல்லக் கூடாதா? அடுத்த மாசம் நடக்கப் போறது நமக்கு கல்யாணம்....!"

"ஆமாம். அதுக்கென்ன...?"

"இப்பவே உரிமையோடு உங்ககிட்டே நான்கேட்கக்கூடாதா? எனக்காக நீங்க செய்ய மாட்டீங்களா?" சிணுங்கினாள் தாரா.

"அப்படிக் கூடாதுன்னு யார் சொன்னா....? உனக்கு செய்யாம யாருக்கு செய்யப் போறேன்?"

"வீட்ல யாரும் இல்லே... எனக்கு சமைக்கவும் தெரியாது. நீங்கதான் நல்லா சமைக்கத் தெரிஞ்சவராச்சே... மாமி சொல்வாங்க... நீங்க விதவிதமா சமைப்பீங்களாம்... இன்னைக்கு எனக்காக சமைச்சிக் கொடுத்துட்டுப் போங்களேன்.. ப்ளீஸ்...." என்றாள் மிகவும் கெஞ்சலாக.

"சரி!" என்று சொன்ன சுகுமார், பரிதாபமாக தன் 'டிப்-டாப்' டிரஸ்சை ஒருமுறை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டு சமையலறை நோக்கிச் சென்றான்.

www.padippakam.com

## இலக்கிய நயம்

# மாதவி மயக்கம்

தருவது ரசிகன்



வைத்த கண்கள்
தைத்து நின்றன,
வித்தை கற்றவளின்
பூங் கொத்து மேனியிலே!

நாட்டிய ராணியின்
கடைவிழிப் பார்வையில்
மாட்டினர் வாலிபர்
தூண்டிற் புழுவினைப்போல!

"இரண்டு கால்கொண்ட
எழில்மிகு கோபுரம்"
என்றான் ஒருத்தன்.

"இரு கனி குலுங்கும்
நயமிகு பூவனம்"
புகழ்ந்தான் மற்றவன்.

"கருவிழி வண்டால்
நெஞ்சினைக் குடைந்திடும்
உருவத்தாள், இளம் பருவத்தாள்"
புலம்பினர் சிலபேர்.

தோள்களும் துள்ள
சிற்றிடை அசைய
பாம்பினைப் போன்ற
சடையது சுழன்று
இடையினைத் தழுவ
முன்னிரு அழகு
மோகத்தைக் கிளற
பின்னிரு அழகு
தாபத்தை ஊட்ட
ஆடினாள் மாதவி ஆடினாளே!

"கள்ளில் நனைந்த மேனி
கண்ணில் தெரியுது தேனி
விண்ணில் நிலவு போல
மண்ணில் ஆடும் நிலவோ?"

கோவலன் மனம்
ஏக்க ஏணியில் தாவியது.

பை நிறையப் பொன்
இருந்தது அவனிடம்.
மன்னர்கள்கூட கடன்கேட்டு
கைநீட்டும் வணிகன் அவன்!

கண் எதிரே கட்டழகி
மாதவி!
கண்ணகியை மறந்துபோனான்
கோவலன்!

"இடை சிறுத்தும்
இரு கனி பெருத்தும்
படை எனப் பாயும்
உருவத்தாள் இவளே!"

சபை நிறைந்து
பலர் இருந்தும்
மாதவியின் கரு விழியும்
கோவலனைச் சுற்றியது!

கண்ணைக் கண் பறிக்க
காதல் நோய் முற்றியது!

மலர் சொரிந்தன
மாதவி விழிகள்.
மனம் குளிர்ந்தது
கோவலன் உள்ளே!

செவ்விதழ் ஓரம்
சிறு நகை ஊர்ந்தது.
இரு விழி ஊடாக
போதை வழிந்தது!

"ஆயிரம் பொன் கொடுத்தால்
இவள் வாய் அமுதம் பருகலாம்
பொன்னைக் கொடுத்து
பெண்ணை ஆளலாம்"

மாதவியின் சார்பாக
ஒருத்தி அறிவித்தாள்.

பை திறந்தான்
கோவலன்.
கை நிறையப்
பொன் எடுத்தான்!

"இந்தச் சிலைக்கு
விலை ஏது?
கொடுக்கலாம்-இன்னமும்
கொடுத்துக்கொண்டே இருக்கலாம்!"

பஞ்சணையில் மாதவிக்கு
கண்கள் பனித்தன.

"கண்ணே மாதவி
உன் கண்கள் ஏனடி
நீராடுகின்றன?"

"பொன் கொடுத்து பெற்றதால்
பண்டம் என்று நினைப்பீரோ?
உள்ளிருக்கும் நெஞ்சத்தில்
உறைந்திருப்பது நீர்தானே!"

"தெரியுமடி கள்ளி
இப்போது கதை பேசவா நேரம்?
கள்ளிருக்கும் பூவை
வண்டு கடைந்தெடுக்க வேண்டாமோ?"

இதழ்களை வருடினான்
விரல்களால் அளந்தான்!
இதழோடு இதழ்சேர
நாவினால் அறிந்தான்!
தோளோடு தோள்சேர
நெஞ்சில் வேல்பாய்ந்தது
போல உணர்ந்தான்!

மணி வயிற்றில் தலைவைத்து
கண் உயர்த்தி பார்த்தவன்
மலை இரண்டு தடுத்தமையால்
அவள் முகத்தைக் காணாமல் தவித்தான்!

"வட்ட எழில் முகத்தை
வட்ட மலை இரண்டு
குத்தி நின்று மறைப்பதென்ன?
கத்தி விழிக்காரி பதில் சொல்லு!"

வளைந்தும்-குழைந்தும்
கலந்தும்-கரைந்தும்
நகைத்தும்-முறைத்தும்
இனித்தும்-கசந்தும்
பிரியா உடலாய்
இருந்தனர் இருவரும்!

காதலியின் காலடியில்
கண்மூடிக் கிடந்தவனுக்கு
கைப் பணம் முடியும்வரை
கண் திறக்கவே இல்லை!

"இப்படியே இருந்தால்
ஒருநாள் திகட்டும்!
பொன்னிட்டுங்கள்-பொருளீட்டுங்கள்
பின்னர் இந்தப் பூவை மீட்டுங்கள்"

மாதவி சொல்லிப் பார்த்தாள்
கோவலன் கேட்டான் இல்லை.

"உயிரைப் பிரியலாம் கண்ணே
உன்னைப் பிரியலாமா?
மயிரைப் பிரிந்த கவரிமான்போல
மாதவியைப் பிரிந்தால் கோவலனும்
மாண்டு போவான் கண்ணே!"

இன்பக் கிறக்கத்தில்
அர்த்தமற்ற பிதற்றல்!
பாவம் மாதவி
உள்ளே சோகம் தரித்தாள்!

மாதவி நினைத்தது
நடந்தே விட்டது!

கட்டழகைப் பார்த்தவுடன்
கண்ணகியை மறந்தவன்,
கைப் பொருள் தீர்ந்தவுடன்
கண்ணகியை நினைத்தான்!
கண்ணகி சொத்திலே
குளிர்காயப் பறந்தான்!

பாவம் மாதவி
பழி சுமந்து கிடந்தாள்!

நெஞ்சில் நினைவுகள்
சுமந்தவள்
கர்ப்பத்தில் அவன் கருவை
சுமந்தவள்
என்றென்றும் அவனை
சுவாசமாய் நேசித்தாள்!

கோவலன் போனவன்
திரும்பவே இல்லை.
"பொறுப்பற்ற மனிதன்
பூஜிக்காதே அவனை!"
ஊரவர் சொல்லினர்.

ஆயினும் மாதவி மறந்தாளில்லை.
கோவலன் நினைவை
துறந்தாளில்லை.
மயக்கிய மோகினி அல்ல மாதவி
மயங்கிய மான்தான் மாதவி!

நெஞ்சிடம் பேசினாள்
அந்தப் பேதை;

"நெஞ்சே! நெஞ்சே!
யாம் விரும்பி நின்றாலும்
தாம், விரும்பி வரார் என்பதால்
யாம் வெறுத்தல் நீதியோ?"

"செற்றா ரெனக்கை விடல் உண்டோ
நெஞ்சேயாம்
உற்றால் உறா அ தவர்"

குறள்-1245, அதிகாரம்-125

---

ஸ்போர்ட்ஸ்

## இந்திய அணியின் உதவிக் கப்டன் ஜடேஜா பற்றிய தகவல்கள்



தனது அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் கிரிக்கெட் இரசிகர்களுக்குக் கிளுகிளுப்பூட்டுபவர் இந்திய வீரர் அஜய் ஜடேஜா. இவர் அவுட்டாகி விட்டால் இரசிகர்கள் சோர்ந்து போய் விடுவார்கள். குறைந்த பந்துகளில் அதிக ஓட்டங்களை எடுக்கும் ஜடேஜாவுக்கு இந்திய அணியின் உதவி அணித் தலைவர் பதவி வழங்கப்பட்டிருப்பது மிகவும் சரியானதே.

இவருக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டிருப்பதால் அவருடைய ஆட்டத்திறன் (டெண்டுல்கருக்குக் கப்டன் பதவி கொடுத்த பிறகு அவரது ஆட்டத்திறன் குறைந்தது போல்) குறைந்து விடுமோ என்றால்- குறையாது.

இதற்குக் காரணம் பெரும்பாலும் அணியை ஃபீல்டிங், பேட்டிங் என்று எல்லா வகையிலும் வழி நடத்துவது அணித் தலைவரும், மேலாளரும்தான். எனவே துணைத் தலைவருக்கு எந்தவொரு பாதிப்பும் இல்லை. அணி தோற்றாலும்கூட கப்டனையும் மேலாளரையும்தான் எல்லாரும் குறை சொல்வார்களே தவிர துணைத் தலைவரை அல்ல.

இனி ஜடேஜாவைப் பற்றிப் பாருங்கள்.

ஜடேஜாவின் முழுப்பெயர் அஜய் சிங்ஜி ஜடேஜா. ஹரியானா மாநிலத்தில் உள்ள ஜாம்நகரில் 1-2-71ல் பிறந்த இவர் படித்தது டெல்லியில். சிறுவயதிலிருந்தே கிரிக்கெட்டில் ஆர்வம் உள்ள ஜடேஜாவுக்கு பன்னிரெண்டாம் வகுப்பு முடிந்தவுடனேயே இந்திய அணியில் விளையாடும் வாய்ப்பு வந்தது.

முதன் முதலாக 1990ல் சார்ஜாவில் நடந்த சர்வதேசப் போட்டியில் கலந்து கொள்ளச் சென்றார். எனினும் அந்தப் போட்டியில் ஜடேஜா விளையாடவில்லை. அதன் பிறகு 1992ல் அவுஸ்திரேலியாவில்- அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் தான் முதல் முதலாகக் களமிறங்கி விளையாடினார். அந்தப் போட்டியில் பேட்டிங்கில் பிரகாசிக்காதபோதும், அவர் சிறப்பான ஃபீல்டிங் மூலம் இரசிகர்களைக் கவர்ந்தார்.

பேட்டிங்கில் மத்திய வரிசை ஆட்டக்காரராகக் களம்புகும் ஜடேஜா இரசிகர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும் வகையில் விளையாடுவார். இயல்பிலே கூச்ச சுபாவம் கொண்ட இவருக்கு அதிகம் பிடித்தது நன்றாகத் தூங்குவது. அடுத்தது பயணம். பயணம் செய்வதில் சலிப்படையாத ஒரே விளையாட்டு வீரர் இவர்தான் என்றால் அதற்கு மிகையில்லை.

கபில்தேவ் மீது இமாலய மதிப்பு உடையவர். கவாஸ்கர், டெண்டுல்கர் இவருக்குப் பிடித்தவர்கள். இவருக்குப் பிடித்த அணி பாகிஸ்தான் அணிதானாம். ஏனென்றால், அந்த அணியினரின் கூட்டு முயற்சியும், இக்கட்டான நேரங்களில் கட்டுக்கோப்பாக ஒத்துழைக்கும் பாங்கும்தானாம்.

இவருக்கு இந்தியாவில் பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் விளையாடுவது தான் பிடிக்குமாம். இதற்கு அவர் சொல்லும் காரணம்: "வட இந்திய- இரசிகர்கள் உணர்ச்சி வசப்படுபவர்கள். தோல்வி ஏற்பட்டாலோ, ஆட்டத்தில் தொய்வு ஏற்பட்டாலோ பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். தகாத வார்த்தைகளால் வசைமாரி பொழிவார்கள். முரட்டுத்தனமாக நடந்து கொள்வார்கள். தென் இந்தியாவில் மற்ற இடங்களில் உள்ள இரசிகர்கள் எதைப் பற்றியும் அவ்வளவு 'சீரிய'சாக எடுத்துக் கொள்ளாதவர்கள். ஆனால் பெங்களூர் இரசிகர்கள்தான் கிரிக்கெட்டை நன்கு உணர்ந்தவர்கள் மாதிரி நடந்து கொள்வார்கள்" என்கிறார் இவர்.

கிரிக்கெட் தவிர பனிச்சறுக்கு, கோல்ஃப் விளையாட்டுக்களில் அதிக ஈடுபாடு இவருக்குண்டு. 26 வயதான ஜடேஜாவுக்கு இன்னமும் திருமணமாகவில்லை.

---

## இவர்கள் தான் அவர்கள்



1 கஜோல்



2 அன்னை தெரேசா



3 4 இந்திரா காந்தி

---

* அரசின் தீர்வு யோசனைகளை பாராளுமன்றம் ஏற்றுக்கொள்ளுமா?

ஆர். கணபதி, கொழும்பு-13.

கொள்ளாது!

■◎

* அமெரிக்கா புலிகளைத் தடை செய்ததை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கண்டித்துள்ளாரே?

வி. ஜெயபாலன், வவுனியா.

அமெரிக்கா புலிகளைத் தடை செய்த விடயத்தையும், பொதுஜன முன்னணி அரசின் சாதனைப் பட்டியலில் சேர்த்ததுதான் ரணிலின் கண்டனத்திற்குக் காரணம்.

■◎

* 'ஜயசிக்குறுய்' எந்தளவில் உள்ளது?

அ. ஹில்மி, திருமலை.

அடிக்கடி அரச பிரசாரத்திற்கு தேவையான அளவில்!

■◎

* காஷ்மீர் தீவிரவாதிகளையும் அமெரிக்கா தடை செய்துள்ளதாமே?

உ. யசீர், கந்தளாய்.

காஷ்மீரில் பல தீவிரவாதக் குழுக்கள் உள்ளன. "காஷ்மீர் தனிநாடாக வேண்டும்" என்று கூறும் குழுக்களும் இருக்கின்றன. "காஷ்மீர் பாகிஸ்தானுடன் சேரவேண்டும்!" என்று விரும்பும் குழுக்களும் உள்ளன. அமெரிக்கா பின்னைய குழுக்களையே ஆதரிக்கிறது.

■◎

* ஐந்து கட்சிக் கூட்டமைப்பில் இருந்து ரெலோ இயக்கம் வெளியேறியுள்ளதே?

மு. அருள்ராஜ், வவுனியா.

ஐந்தாக இருந்தும் பந்தாகத் துள்ளவில்லை. தனியாகப் பிரிந்தவர்களும் பந்தாகத் துள்ளவில்லை.

■◎

* இந்தியாவைத் தவிர்ந்த எவரும் இங்கு தலையிடுவது சரியல்ல என்பதுபோல ஐ.தே. கட்சித்தலைவர் கூறியிருப்பதன் நோக்கம்?

மா.கஜேந்திரன், மட்டக்களப்பு.

இந்தியாவை ஓரம்கட்டிவிட்டு அமெரிக்காவுக்கு இங்கு ஆரத்தி எடுத்து வரவேற்ற கட்சி ஐ.தே.கட்சி. இப்போது ஆட்சி மாறிய பின்னர்தான் ஞானம் பிறந்திருக்கிறது. ஒருவேளை அமெரிக்கா இலங்கை அரசைக் கண்டித்திருந்தால், அமெரிக்காவை ரணிலும் பாராட்டியிருப்பார். இதுதானே இங்கு அரசியல்!

■◎

* டியர் சிந்தியா! இலங்கையில் அமெரிக்கா தலை நீட்டுவதை பத்திரிகை உலகம்கூட பலமாகக் கண்டிக்கவில்லையே, ஏன்?

வ. கிருஷ்ணகுமார், காரைதீவு.

தூதரக விருந்துகள், விசாக்கள், இடைக்கிடையே சுற்றுப்பயண ஏற்பாடுகள் என்று பத்திரிகை உலகையும் கைக்குள் போட்டு வைத்திருப்பது அமெரிக்கா. இன்று நேற்றல்ல, தொன்றுதொட்டே இருந்துவரும் வழக்கம் அது!

■◎

* பெண் பித்தர்களான கணவன்மாரை திருத்த ஒரு வழி சொல்லுங்கள்?

சி.எஸ்., மோதரை.

ரொம்ப ரொம்பக் கஷ்டம்.

பிரபல ஃபிரெஞ்சு நடிகரும், நாடகாசிரியருமான லச்சாகைட்ரி என்பவருக்கு ஏற்கனவே ஐந்து மனைவிகள். அவர்கள் இறந்து போய்விட்டனர்.

ஆறாவது கல்யாணமும் செய்து கொண்டார். "ஐந்து கல்யாணத்துடன் நிறுத்தாமல், என்னையும் ஏன் இந்த நரகத்தில் கொண்டுவந்தீர்கள்?" என்று கேட்டாள் ஆறாவது மனைவி.

அவர் சொன்ன பதில் இது: "என் கண்ணே, அந்த ஐந்துபேரும் எனக்கு வெறும் மனைவிகளாகத்தான் இருந்தார்கள். நீ மட்டுமே என் விதவையாகப் போகிறாய்?"

■◎

* சிறு விஷயங்களைப் பெரிதுபடுத்துபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர் சிந்தியா?

எஸ். தாரிணி, மன்னார்.

விஷயம் என்ன என்பதைப் பொறுத்துத்தான் அது தேவையான விஷயமா? இல்லையா? என்று தீர்மானிக்கலாம்.

பெஞ்சமின் பிராங்க்ளின் ஒரு சமயம் இப்படி எழுதினார்:

"சின்ன விஷயம் என்று அசட்டை செய்தால் பெரும் கேடு விளையக்கூடும்.
ஆணி போனதால் லாடம் போச்சு.
லாடம் போனதால் குதிரை போச்சு.
குதிரை போனதால் அதில் சவாரி செய்த மனிதனே போய்விட்டான்!"

■◎

## சிந்தியா பதில்கள்



மருதநாயகத்தில் கமல்

* 'மருதநாயகம்' வெற்றிப்படமாக அமையுமா? எத்தனையோ தடைகளாமே?

ஆ. வித்தியா, கொழும்பு-06.

அத்தனை தடைகளையும் தாண்டி, பெரிய படையைத் திரட்டி படப்பிடிப்பே நடத்திக் கொண்டிருக்கிறார் கமல். கமலுக்கு 'கலைஞானி' என்ற பட்டம் கொடுத்திருக்கிறார் தமிழக முதல்வர் கலைஞர். மொத்தத்தில் கமல் உற்சாகத்தில்!

■◎

* ஏட்டிக்குப் போட்டி என்றால் என்ன?

எம்.என்.ஷாகீர், புத்தளம்.

இந்தக் கதையில் வரும் தம்பதியைப் பாருங்கள்:

கோடை காலத்தில் ஓர் இரவு நேரம். தம்பதி உணவருந்திக் கொண்டிருந்தனர். திடீரென்று மின்சாரம் போய்விட்டது.

மனைவி ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்திவைத்தார். தொடர்ந்து சாப்பிட்டார்கள்.

உணவு உண்டுமுடித்த கணவர், தன் மனைவிக்கு வியர்த்துக் கொட்டியிருப்பதைப் பார்த்தார்.

"ஃபானைப் போடட்டுமா?" என்று கேட்டார்.

"நான் என்ன இருட்டிலா சாப்பிட முடியும்?" என்று கேட்டாள் மனைவி.

"ஏன் அப்படிக் கேட்கிறாய்?"

"கொஞ்சமாவது உங்களுக்குப் புத்தி வேண்டாம்? ஃபானைப் போட்டால் மெழுகுவர்த்தி அணைந்து போய்விடாதா?" என்று கேட்டார் மனைவி.

■◎

* டியர் சிந்தியா! சமீபத்தில் படித்த ஜோக் ஒன்று?

க. அமலன், சிலாபம்.

**கணவன்:** நகரத்தில் இன்று என் நண்பனைப் பார்த்தேன். அவன் என்னவோ பேசவே இல்லை. தனக்கு நான் சமமானவன் அல்ல என்று நினைக்கிறான் போல் இருக்கிறது.

**மனைவி:** அவன் கிடக்கிறான் மூடன், உதவாக்கரை, களிமண் மூளை. எந்த விதத்திலும் நீங்கள் அவனுக்குச் சமமானவர்தான், கவலைப்படாதீர்கள்!

■◎

* சிந்தியா! இப்போது கடவுள்கள்கூட நம் வேண்டுதலுக்கு செவி சாய்ப்பதில்லையே?

சி. பரமசாமி, ஹட்டன்.

அப்படியா, இந்தக் கதையைக் கேளுங்கள்:

கணவனும் மனைவியும் திருவிழாவுக்குப் போயிருந்தார்கள். கூட்ட நெரிசலில் மனைவி காணாமல் போய்விட்டாள். கணவன் பொலிசில் புகார் செய்தான். பத்திரிகைகளில் விளம்பரம் செய்தான். மனைவி கிடைக்கவில்லை.

இராமர் கோவிலுக்குச் சென்று மனமுருக வேண்டினான். "காணாமல்போன மனைவி கிடைக்க அருள் புரியுங்கள்!"

உடனே இராமர் பேசினார்:

"இதே சாலை வழியாகப் போனால் அனுமார் கோவில் வரும். அங்கு போய் வேண்டிக் கொள். என்னுடைய மனைவியைத் தேடிக் கண்டுபிடித்தது அவர்தான்!"

■◎

* டியர் சிந்தியா! உலகில் மிகப் பெரியது என்ன?

செல்வி சி. ரம்யா, கல்முனை.

எவரெஸ்ட்.

■◎

* பட்டிமன்றத்தில் வெளுத்து வாங்கும் திண்டுக்கல் லியோனி 'கங்கா கௌரி'யில் சுமாராகத்தானே நடித்திருக்கிறார்?

கே. கிருபாகரன், கொழும்பு-10.

முதல் அனுபவம்தானே; போகப் போக சரியாகிவிடும்!

■◎

* தீபாவளிக்கு பிரமாண்டம் தரப்போகும் தமிழ்ப்படங்கள் எவை?

வி. மொஹமட், தெகிவளை.

'உளவுத்துறை', 'பெரியமனுசன்', 'ரட்சகன்'.



படிப்பகம்

www.padippakam.com


# இராமாயணம் அங்கம் 105

## செத்தவர்க்கு உயிரளித்த சஞ்சீவி மாமலை

இராமபிரான், ஆஞ்சநேயர் விசுவரூபமெடுத்து விண்ணில் தாவி வடக்கு நோக்கிச் செல்வதைப் பார்த்தார். அவருடைய வலது கை உயர்ந்து ஆஞ்சநேயரை வாழ்த்திய வண்ணம் இருந்தது. மற்றொருகை இலக்குமணனுடைய உடலை அணைத்தபடி இருந்தது. தனது மடியிலிருந்து ஜாம்பவனுடைய தலை மெல்ல எழுந்தது.

சுயநினைவு பெற்றிருந்த போதிலும் இராமபிரான் சோகம் முற்றாக நீங்கியவராகத் தென்படவில்லை. இலக்குமணனின் உடலை இறுக அணைத்தவண்ணம் மீண்டும் கோவெனக் கதறலானார். ஜாம்பவன் இராமபிரானின் திருவடிகளை மீண்டும் தொழுதவனாக அன்னாரின் துயரத்தை மாற்றுவதற்கு பல தரப்பட்ட ஆறுதல் வார்த்தைகளையும் கூறலானார்.

"தேவர்களும் அரக்கர்களும் திருப்பாற் கடலிலிருந்து அமுதத்தைக் கடைந்தெடுக்க மந்தர மலையை மத்தாகவும் ஆதிசேஷனைக் கயிறாகவும் பூட்டிக்கடைந்தபோது அமுதத்துடன் அற்புதமான மருந்துகளும் எழுந்தன.



அம்மருந்துகள் மேருமலையின் வடக்கேயுள்ள குரு நாட்டிற்கும் அப்பால் ஒருமலையில் இருக்கின்றன. அம்மருந்து மூலிகைகள் சக்கரப்படையால் காக்கப்பட்டு வருகின்றன. ஆஞ்சநேயர் ஒருவரால்தான் அம் மூலிகைகளை இங்கு கொண்டு வந்து சேர்க்க முடியும். இன்னும் சில நொடிகளில் அனுமன் அம்மருந்து மூலிகைகளை இங்கு கொண்டு வந்து சேர்த்துவிடுவார். அம்மருந்தினால் துங்கள் தம்பி இலக்குவன் மட்டுமல்லாமல் போர் முனையில் மாண்ட எமது வானர வீரர்களனைவரும் உயிர்பெற்று எழுந்துவிடுவார்கள். ஆகவே, கவலையை விட்டு களிப்புடன் இருங்கள்."

இவ்வாறு ஜாம்பவன் கூறியவற்றைக் கேட்ட இராமபிரான் ஒரளவு கவலை நீங்கிக் காணப்பட்டார். சுற்றி நின்ற ஏனையோரும் சோகம் நீங்கப் பெற்றனர்.

ஆஞ்சநேயரின் பேராற்றலை இராமபிரான் நன்கு அறிந்தவர். எடுத்த எந்தக் காரியத்தையும் முடிக்காமல் விடமாட்டார். ஆகவே மருந்து மூலிகைகளைக் கொண்டு வந்து சேர்த்து விடுவார் என்று திடமாக நம்பினார். சுற்றி நின்றவர்களுக்கும், ஆஞ்சநேயர் மீது தான் வைத்துள்ள நம்பிக்கையை எடுத்துக்கூறி அனுமனின் பெருமைகளையும் எடுத்துரைத்தார்.

### அயோத்தியில் இறங்கிய ஆஞ்சநேயர்

ஆஞ்சநேயர் தனது மேருமலை போன்று பருத்த தோளின்மீது மருந்து மலையாகிய சஞ்சீவி பர்வதத்தைச் சுமந்த வண்ணம் விண்ணிலே பறந்து கொண்டிருந்தார். அயோத்திமா நகரின் மீதும் அவருடைய பாதை அமைந்தமையினால், தனது அண்ணலின் நாடாகிய அந்நாட்டைத் தொழுத வண்ணம் சென்று கொண்டிருந்தார். பக்திப்பெருக்குடன் இராமநாமத்தை ஜெபித்த வண்ணம் சென்று கொண்டிருந்த அவருடைய

தன்னை நோக்கி தவக்கோலம் பூண்ட ஒரு முனிவர்- கையில் வில்லும் அம்பும் கொண்டு ஓடிவருவதையும் கண்டார்.

இராமபிரானைப் போன்ற சாயலுடன் அந்த முனிவர் தன்னை நோக்கி ஓடிவருவதைக்கண்ட ஆஞ்சநேயர், 'இராமபிரானின் மறு அவதாரமோ?' என்றும் ஐயுற்றார்.

இராம ஜெயம் எனும் மந்திரம் தன் காதில் விழுந்ததும் அந்த உருவம் தயங்கித் தயங்கி வந்து சேர்ந்தது.

"ஐயா! இராம மந்திரத்தை ஜபித்த வண்ணம் உள்ள தாங்கள் யார்? தாங்கள் வானில் பறந்து கொண்டிருந்தபோது, அரக்கன் ஒருவன்தான் வட்டமிடுகிறானோ என்று தவறுதலாக எண்ணித் தங்கள் மீது கணைதொடுத்துவிட்டேன் தயவு கூர்ந்து மன்னியுங்கள். தாங்கள் யாரோ? யான் அந்த இராமபிரானின் தம்பியாகிய பரதன்."

இவ்வாறு தன்னை அறிமுகப்படுத்திய பரதனை மனதால் வணங்கிய ஆஞ்சநேயர் கண்களில் நீர் பெருக, "காணக்கிடைக்காத காட்சி கண்டேன். இன்று தங்கள் தரிசனம் கிடைத்தமை என் பெரும் பேறு!" என்று இலங்கையில் நடைபெற்ற அனைத்துச் சம்பவங்களையும் விபரமாகக் கூறினார். மேலும் ஒரு கணமும் தாமதிக்கலாகாதெனக் கூறிப் புறப்பட ஆயத்தமானார். பரதன் ஓடிச்சென்று அனுமனை அணைத்து- தான் அவசரபுத்தியால் அவரைத் தாக்கிவிட்டதை நினைத்து வருந்தினான். தனது கையினாலேயே ஆஞ்சநேயரின் மார்பில் செருகியிருந்த அம்பினை உருவி எடுத்தார். அவருடைய கை பட்டதும் காயமும் காணாமற் போய் அனுமனின் வேதனையும் தீர்ந்து போயிற்று. ஆஞ்சநேயருக்கு உபசரணை செய்து, உணவு மற்றும் தாகசாந்திக்கு ஏதாவது பான வகைகளை அளிப்பதற்காக பரதன் ஏவலர்களை ஏவினார். ஆனால் ஆஞ்சநேயரோ அத்தகைய ஆயத்தங்களைத் தடுத்து, தான் கடுகளவு நேரமும் தாமதிக்கலாகாது என்று கூறி தனது பயணத்தைத் தொடங்கினார். தனது கடமையை முடிக்காமல் தண்ணீர்தானும் பருகப்போவதில்லை என்று மறுத்து வானில் தாவினார். அயோத்தியின் மண்ணில் காலடி வைக்கும் பேறு கிடைத்ததையும் இராமபிரானின் அருமைத் தம்பியான பரதனைக் காணும் வாய்ப்புக் கிடைத்தமையும் தனது அரும்பேறாகக் கருதி மகிழ்ந்தார் ஆஞ்சநேயர். இந்த மனநிறைவே

அவரை மேலும் உற்சாகப்படுத்தியது. சில வினாடிகள் தரையில் செலவிட நேர்ந்தமையினால் ஏற்பட்ட தாமதத்தையும் ஈடு செய்யத்தக்கதாக அவருடைய விண் பயணம் வேகமடைந்தது.

### உயிர் பெற்றெழுந்த இலக்குவன்

சஞ்சீவி மலையுடன் ஆஞ்சநேயர் இலங்கை மாநகரின் எல்லைக்குள் பிரவேசித்ததும் இராமபிரானுக்கு, ஆஞ்சநேயரின் வாயிலிருந்து எழுந்த இராம மந்திரத்தின் ஒலி கேட்டது. அதே வேளை தனது மேனியில் திடீரென ஒரு வேதனை உண்டாயிற்று. அவருடைய மார்பிலே ஒரு அம்பு பாய்ந்து, குருதி பெருகிக் கொண்டிருந்தது. அத்துடன் அவரையும் மீறிய ஒரு சக்தி அவரைத் தரையை நோக்கி இழுத்த வண்ணம் இருந்தது. கண நேரத்தில் மலையுடன் தரையில் அமர்ந்தார். தரையில் தன் கால்களைப் பதிப்பதற்கு முன்னரே ஒரு கையால் அம் மண்ணைத் தொட்டு பக்தியுடன் முத்தமிட்டார். இராம மந்திரத்தையும் பலமாக ஓதலானார்.

அருகே மூச்சுப் பேச்சற்றுக்கிடந்த இலக்குவனின் முகத்தில் புத்தொளி தோன்றுவதையும் உயிர்க்களை தென்படுவதையும் அவர் அவதானித்தார். போர்க்களத்தில் உயிர் பிரிந்துகிடந்த வானரவீரர்களின் உடல்களிலும் அசைவுகள் காணப்பட்டன. ஜாம்பவனும் புதுத் தெம்புடன் எழுந்தார். அப்போது ஆஞ்சநேயர் வடதிசையில் சூரியன் உதித்து வருவதைப்போன்ற பிரகாசத்துடன்- மலையைத் தாங்கிய வண்ணம் வந்து தரையிறங்கினார். அம்மலையின் கண்ணே வளர்ந்திருந்த மூலிகைகளைப் பறித்து அவற்றை மருந்தாகத் தயாரிக்க வேண்டிய சிரமம் எதுவுமின்றி, இலக்குவன் உட்பட பல்லாயிரக்கணக்கான வானர வீரர்களும் எழுந்து கொண்டனர். எல்லோருமாகச் சேர்ந்து ஆஞ்சநேயரைப் பின்பற்றி "ஸ்ரீ இராம ஜெயம்" என்று இடையறாது- பயபக்தியுடன் ஜெபிக்கலாயினர்.

ஜாம்பவனை முதலில் இராமபிரான் ஆரத்தழுவினார். ஆஞ்சநேயரைத் தன் அருகே அழைத்தார். அவர் முதலில் இராமச்சந்திர மூர்த்தியின் அடிக்கமலங்களை, சாஷ்டாங்கமாக விழுந்து தொழுதெழுந்தார். அவரையும் வாரி அணைத்து வாஞ்சையுடன் முதுகினைத் தடவிக் கொடுத்தார். இதே வேளை, எதையுமே அறியாதவராகத் தன்னைச் சுற்றி நின்றவர்களைப் பார்த்தவாறு இலக்குவன் தரையிலிருந்து எழுந்தார். 'ஏதோ ஒரு பெருங்காரியம் நடந்து முடிந்திருக்கிறது.' என்று எண்ணியவராக இராமபிரானின் பாதங்களில் -ஆஞ்சநேயர் விழுந்து தொழுததைப்போன்று தொழுது எழுந்தார். பின்னர் அரசிளங்குமரர்களான தசரத புதல்வர்கள், 'இருவரல்ல ஒருவர்' என்று உணர்த்துவது போல் ஆலிங்கனம் செய்து கொண்டனர்.

நன்றிக் கடனைத் தன் நயனங்களில் பொழிந்த வண்ணம் இராமபிரான் மீண்டும் ஆஞ்சநேயரை அருகழைத்து இவ்வாறு கூறுகிறார்:

**முன்னின் தோன்றினோர்**
**முறையின் நீங்கலாது**
**என்னின் தோன்றிய துயரின் ஈறு சேர்**
**முன்னின் தோன்றினோம்**
**முன்னம் மாண்டுளோம்**
**நின்னின் தோன்றினோம் நெறியின்**
**தோன்றினாய்!**

(யுத்த காண்டம்- 2754)

பொருள்:

*"எமது மூதாதையர் கடைப்பிடித்து ஒழுகிய சத்திய மார்க்கத்திலிருந்து வழுவாது வாழ்ந்த எம் தந்தையாரான தசரதச் சக்கரவர்த்தி, என்னைப் பிரிய நேர்ந்தமையினால் ஏற்பட்ட துயரம் தாங்காமல் உயிர் துறந்தார். அன்னாருடைய புதல்வர்களாகிய நாங்கள் பிரம்மாஸ்திரத்தினால் மாண்டோம். நல்ல நெறியில் வாழ்ந்தவனாகிய உமது செயலினால் இப்பொழுது மீண்டும் உயிர் பெற்று எழுந்தோம்!"*

☆☆☆

இலங்காபுரியில் உள்ளவர்களுக்கு போர்க்களத்தில் நடைபெற்ற சம்பவங்கள் எதுவும் தெரியாது. இலக்குமணனை குறி வைத்து வீசிய பிரம்மாஸ்திரம் இராமபிரானையும் கொன்றுவிட்டதாகக் கருதிய அரக்கர்கள் வெற்றிக் களியாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். குடித்து வெறித்து கூத்தாடி மகிழ்ந்தனர்; ஆடலும் பாடலும் எங்கும் நிகழ்ந்தமையினால் வெளியே 'ஸ்ரீ இராம ஜெயம்' என்று ஆயிரக்கணக்கான குரல்கள் ஒன்று சேர்ந்து எழுப்பிய ஓசை அவர்கள் காதுகளுக்கு எட்டவில்லை. (தொடர்ந்து வரும்)

இராஜகுமாரன்

### கோதண்டம்–காண்டீபம்

இராமபிரானுடைய வில் கோதண்டம் என்பதும் அருச்சுனனின் வில் காண்டீபம் என்பதும் எல்லாருக்கும் தெரிந்ததே! இராஜகுமாரனுக்கும் இது தெரிந்த விடயம்தான். ஏற்கனவே மகா பாரதத்தை எழுதிய அவரே இப்போது இராமாயணத்தைத் தொடர்கிறார். ஏதோ அவசரத்தில், 'இராமபிரான் வில் காண்டீபம்' என்று 224வது முரசில் குறிப்பிட்டுவிட்டார். தவறுதான்! சுட்டிக்காட்டிய வாசகர்களுக்கு நன்றி

ஆ-ர்.

### இராமாயணப் போட்டி: 103

**சரியானவிடை:- இந்திரன்**

1. ஏ.எஃப். முஹம்மட் லரீப், இல. 215, தவுலகல, ஹந்தெஸ்ஸ.
2. எம். தங்கவேல், 217, பிரிவின ரோட், தெய்யோவிட்ட.
3. எம். தவமணி, புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.
4. தா.சி. தனுராஜ், பொன்னாலை, சுழிபுரம், யாழ்ப்பாணம்.
5. செல்வி தயாளினி பரமசாமி, பரிசுத்த திரித்துவக் கல்லூரி, நுவரெலியா.

**போட்டி இல. 105** கேள்வி:- விபீடணரின் மகளுடைய பெயர் என்ன?

நவம்பர் 01 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.105, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

---

*கமலஹாசன் மருதநாயகம் படம் எடுக்கிறார். மருதநாயகமாக கவுண்டமணியும், அவர் சேவகனாக செந்திலும் நடித்தால் எப்படி இருக்கும்? ஒரு கற்பனை!*

# மருதநாயகம் சபையிலே

**மருதநாயகம்:** என்னடா பிரிட்டிஷ்காரன் என்கிறான், பிரஞ்சுக்காரன் என்கிறான். எல்லாமே வெள்ளை வெள்ளையா இருக்கிறான். நம்ம நாட்டில கொள்ளை கொள்ளையா அடிக்கிறான். என்னடா நினைச்சிக்கிட்டிருக்காங்க? நம்மாளுங்க என்னடா பண்ணிக்கிட்டிருக்காங்க?

**சேவகன்:** அண்ணே! கூப்பீட்டிங்களாண்ணே?

**ம.நா:** ஏன்டா முட்டை வாயா? கூப்பிட்ட குரலுக்கு ஓடியர வேண்டாமடா?

**சேவகன்:** அதான் வந்திட்டேனே. சொல்லுங்கண்ணே?

**ம.நா:** வாள் ஏந்தும் நம் ஆட்கள் எங்கேயடா?

**சேவகன்:** வெள்ளைக்காரன் நீளமா ஒரு வால் வைச்சிருக்கான், இவங்க அதில பிடிச்சுத் தொங்கிக் கொண்டிருக்காங்க!

**ம.நா:** வாள், வால், ஹா ஹா ஹா.

**சேவகன்:** ஒரு எழுத்துத்தான் அண்ணே வித்தியாசம்

**ம.நா:** அந்த ஒரு எழுத்து மாற்றத்தால் நம் இனத்தின் தலை எழுத்தே மாறிப் போயிடுமேடா!

**சேவகன்:** இனத்தின் தலை எழுத்தைப் பற்றி யார் அண்ணே கவலைப்படுறாங்க. அவங்க அவங்க தங்கள் மடிக்கனத்தை பார்த்துக்கிட்டிருக்காங்க.

**ம.நா:** அந்நியன் எப்படியடா தோழனாகினான்?

**ம.நா:** வாயில வந்தாத்தான் வயிற்றிலே வருமாடா, நிறுத்துடா, வாயில எலும் புத்துண்டு கிடைச்சாலும் விடமாட்டீங்களேயடா.

**சேவகன்:** அண்ணே, எறும்பு சுறுசுறுப்பா இருக்குது உழைக்குது! யானை பலமாக இருக்குது கரும்பை முறிக்குது, தின்னுது! மனிதன் பலசாலியா இருந்தாத் தான் தேவையானது கிடைக்குது! இல்லாட்டிப் போனா எலும்புத்துண்டுதான் கிடைக்குது. கிடைச்சவரை இலாபம் என்னு வயிற்றிலே போட்டுக்கிறாங்க.

**ம.நா:** ஏண்டா, யானை எத்தனை பெரிசு, அதன் காதிலே எறும்பு புகுந்தா என்னாகுது தெரியுமில்லே?

**சேவகன்:** எறும்பா இருந்தா பரவாயில்லையண்ணே, இவங்க உடும்பா மாறி வெள்ளைக்காரன் காலைப் பிடிச்சுக் கிட்டல்ல தொங்குறாங்க!

**ம.நா:** அவங்க காலைப்பிடிக்கட்டும், நீ வாளைப் பிடி. எடு வாளை. கொடு தோளை. நாம் தோளோடு தோள் சேர்ந்து நிற்பின் தோற்காது நம் சேனை!

**சேவகன்:** அண்ணே!

**ம.நா:** என்னடா?

**சேவகன்:** வெள்ளைக்காரன் பெரிசு பெரிசா பீரங்கி எல்லாம் வைச்சிருக்கிறான்.

**சேவகன்:** அவன் எங்கே தோழனாகினான், இவங்க தோளிலே ஏறி சவாரி விட்டுக்கிட்டிருக்கான்.

**ம.நா:** வெள்ளையனே வெளியேறு என்று கத்தினாங்களேயடா என்னாச்சு?

**சேவகன்:** இப்ப அவனே போறேன் எண்ணு சொன்னாலும் இவங்க விடமாட்டாங்க போல இருக்கண்ணே.

**ம.நா:** காரணம்?

**சேவகன்:** சேவகம்தான்! வளைஞ்சு கொடுத்து பழகிட்டாங்க. இனி நிமிரமுடியாது பாருங்க, முதுகெலும்பு ஒத்துழைக்காதண்ணே!

**ம.நா:** இறுதியாக என்னடா சொல்லுறாங்க?

டப்பு டப்பு எண்ணு சுடுற துப்பாக்கி வைச்சிருக்கான். நம்மகிட்ட என்ன இருக்கு?

**ம.நா:** மவனே! வாள் இருக்குது, அந்த வாளை வீசும் வீரம் இருக்கிறது! வெள்ளைக்காரனிடம் இருக்கிற துப்பாக்கியை பறித்துக் கொள்ளும் புத்தி இருக்கிறது!

**சேவகன்:** அண்ணே இது ரொம்ப கஷ்டமான வேலையண்ணே. பேசாமே, வெள்ளைக்காரன் சொல்லுறதைக் கேளுங்க. நீங்க ராஜா மாதிரி இருக்கலாம்.



காதிலை பூ கந்தசாமி

**சேவகன்:** வெள்ளைக்காரனா பார்த்து நிலம் தந்தா அவனுக்கு கப்பம் கட்டிக் கிட்டு காலத்தை ஓட்டலாம் எண்ணுறாங்க!

**ம.நா:** ஏன்டா சட்டித்தலையா! குரங்கு அப்பத்தை பிய்த்த கதையாக, எங்க பூமியை வெள்ளைக்காரன் பிய்க்க விடலாமாடா?

**சேவகன்:** ஏன் அண்ணே, தகராறு பண்ணுறீங்க? நீங்களும் வெள்ளைக்காரன் சொல்லுறதுக்கு சலாம் போடுங்க. அப்படிச் சலாம் போட்டீங்க, இவங்களையெல்லாம் துரத்திப்புட்டு, வெள்ளைக்காரன் உங்களைத்தான் உயரத்தில் வைத்திருப்பான்.

**ம.நா:** பணிந்து போனா பக்கத்தில் வைத்திருப்பான். துணிந்து நின்னா என்ன பண்ணுவான்?

**சேவகன்:** பயங்கரவாதி எண்ணு சொல்லிப்புடுவான்.

**ம.நா:** யாரடா பயங்கரவாதி! அவன் மூஞ்சியைப் பாரு, அதிலேதான் அப்படி எழுதி ஒட்டி இருக்கு. திருவிழாவில சங்கிலி அறுத்துக்கிட்டு ஓடுற கள்ளன், திருடன், திருடன் எண்ணு கத்திக்கிட்டு ஓடினானாம். அப்படித்தான் இருக்கு! திருட்டுப் பசங்க எங்களை திருடன் எண்ணு சொல்லுறாங்களா?

**சேவகன்:** அவங்க இதுவும் சொல்லுவாங்க, இதுக்கு மேலேயும் சொல்லுவாங்க.

**ம.நா:** சொல்லுறவன் சொல்லிப்போறான், கேட்கிறவனுக்கு மதி எங்கே போச்சு?

**சேவகன்:** அண்ணே! பானையில் இருந்தாத்தான் அகப்பையில வரும், அகப்பையில வந்தாத்தான் கோப்பையில வரும், கோப்பையில வந்தாத்தான் கையில வரும், கையில வந்தாத்தான் வாயில வரும்.

**ம.நா:** ஹா ஹா ஹா கூஜா தூக்கும் ராஜாக்கள் எத்தனையோ பேர் இருக்கலாம். பத்தோடு பதினொன்றாக மருதநாயகம் மாறமாட்டான். அடே சட்டித் தலையா உன்தலை உருண்டுவிடும் ஜாக்கிரதை.

**சேவகன்:** அண்ணே என்னை என்ன பண்ணச் சொல்லுறீங்க?

**ம.நா:** (பாடுகிறார்)

**உன்னையறிந்தால்-நீ உன்னையறிந்தால்**
**உலகத்தில் போராடலாம்**
**உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்-தலை**
**வணங்காமல் நீ வாழலாம்!**

**சேவகன்:** அண்ணே, என் கண்ணைத் திறந்துட்டீங்க.

**ம.நா:** ஏன்டா இதுக்கு முன்னாடி கண்ணை மூடிக்கிட்டா இருந்தே?

**சேவகன்:** இல்லையண்ணே, அறிவுக் கண்ணைத் திறந்துட்டீங்க.

**ம.நா:** ஏன்டா முட்டை மூக்கா, அறிவுக் கண்ணை மூடிவைச்சுக்கிட்டுத்தான் என் சேவகனா இருந்தியாடா?

**சேவகன்:** அண்ணே! பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசும். சாக்கடையில விழுந்தா பூவும் நாற்றமடிக்கும்!

**ம.நா:** நீ எங்கேயடா விழுந்தே?

**சேவகன்:** புல்லாகிப், பூண்டாகி, புழுவாகி இப்போதான் மனிதனாகி இருக்கேன் அண்ணே.

**ம.நா:** எருமையாகி இருக்கேன் எண்ணு சொல்லுடா. நீயெல்லாம் மனிதன் எண்ணு சொன்னா, குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்றதே பொய்யாகிடுமடா. எருமையில் இருந்து மனிதன் தோன்றினான் எண்ணு எழுதிப்புடுவாங்கடா!

*(எட்டி உதைக்கிறார் மருதநாயகம். வாளைப் போட்டுவிட்டு ஓடுகிறான் சேவகன்.)*



படிப்பகம்

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


# எங்கும் ஒரே நிறம்



← கிறிஸ்துவுக்கு முன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் ஒட்டிக்கொண்டிருக்கும் காஸா என்ற பிரதேசம் வர்த்தக மேம்பாடுடன் சிறப்புற்றிருந்தது. பல்வேறு படையெடுப்புகளுக்கும் தாக்குப் பிடித்து நின்ற இப்பிரதேசம் பாலஸ்தீனருடைய சொந்தப் பூமியாக விளங்கியது.

இரண்டாவது உலகப் போரைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வந்த யூதர்கள் இஸ்ரேலை மீண்டும் கட்டியெழுப்பினர். இதனால் சுற்றியிருந்த அரேபிய மற்றும் பாலஸ்தீன மக்களுடன் இஸ்ரேல் மோதிக்கொண்டே இருந்தது. இந்த மோதலுக்கு தூபம் போட்டு வளர்த்தது அமெரிக்காதான்.

1967ல் எகிப்து இஸ்ரேல் மீது போர் தொடுத்தது. இஸ்ரேல் காஸாவை அடிமைப்படுத்தியது. ஆனால் 1993ல் ஏற்படுத்தப்பட்ட சமாதான உடன்படிக்கையைத் தொடர்ந்து காஸாவிலிருந்து இஸ்ரேலிய குடும்பங்கள் வெளியேறின. பாலஸ்தீனர்களுக்கான சுயாட்சி நிறுவப்பட்டது. எனினும் இஸ்ரேல் தன் ஆக்கிரமிப்பை முற்றாக விலக்கிக் கொள்ளவில்லை.

இந்த சமாதான உடன்படிக்கையில் பாலஸ்தீன விடுதலை இயக்கங்களுள் ஒன்றான 'ஹமாஸ்' இயக்கம் நம்பிக்கை வைக்கவில்லை. அடிக்கடி இஸ்ரேலியர்களை இலக்குவைத்து ஹமாஸ் போராளிகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

'புனிதத் தியாகிகள்' என்று அழைக்கப்படும் தற்கொலைப் போராளிகளில் ஓர் இளைஞன், இஸ்ரேலியர்களை ஏற்றிச் சென்ற ஒரு பஸ் வண்டியைத் தாக்குவதற்காக எடுத்த முயற்சி மயிரிழையில் பிசகியது. இருப்பினும் தானே தன்னுடன் பிணைத்துக் கொண்டு வந்த குண்டுக்குத் தானே பலியானான். குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தில் இருந்து நொறுங்கிய கார்களை குப்பையாக அள்ளிக் கொண்டு போகிறார்கள். எங்கும் ஒரே நிறம்தான் யுத்தம் சிவப்பு! எங்கும் ஒரேவிதம்தான் யுத்தம் அழிவு!




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


# ஆஹா

தனக்கென ஒரு காதலியைக் கவர்ந்திழுப்பதற்காக தாளம் தட்டிப் பாட்டுப்பாடும் இந்தப் பறவை அந்தப் பகுதியில் தங்களுக்கான கூடுகளைக் கட்டும் ஏனைய பறவைகளுக்கும் பெரும் தொல்லையாகி விடுவதனால், இவைகளுக்கிடையில் 'கைகலப்புகள்' ஏற்பட்டுவிடுமாம்.



← பானை வயிற்றுடன் காணப்படும் இந்தப் பறவை பலே கில்லாடி. இதன் பெயர் மக்னிஃபிசென் ஃபிரிகேற். இதன் விஞ்ஞானப் பெயர்: ஃபிரெகற்றா மக்னிஃபிசென்ஸ்.

அமெரிக்காவின் அற்லாண்டிக் மற்றும் பசுபிக் பெருங்கடலோரங்களில் வெப்ப மண்டலப் பிரதேசங்களில்தான் இந்தப் பறவை சீவியம் நடத்துகிறது.

இந்தப் பறவை இனத்தின் காதல் லீலைகள் முன்பாக மனிதர்கள் பிச்சை வாங்கவேண்டும். மிக வியப்பான சமாச்சாரங்கள் எல்லாம் இருக்கின்றன.

இந்த இனப் பெண் பறவைகளுக்கு காதல் லீலையில் நாட்டம் வந்ததும் கூட்டம் கூட்டமாகப் பறந்து செல்கின்றன.

உடனே ஆண் பறவைகளுக்கு விஷயம் விளங்கிவிடும். மரத்தில் இருந்தபடியே தங்கள் சொண்டினால் மரத்தில் தட்டித் தாளம் போடுகின்றன. சொண்டு நீண்டிருப்பது தாளம்போட தோதாகி விடுகிறது. அதுதான் சிக்னல்.

தாளச் சத்தம் கேட்டதும் பெண்பறவைகள் மரத்தை நாடி வந்து ஆண் பறவையுடன் ஒட்டிக் கொள்ளும். பின்னர் என்ன? நீ பாதி, நான் பாதிதான்.

ஆண்பறவைகள் தான் கூடுகளை- சோடி சேரு முன்பே கட்டுகின்றன. முதலில் கூடு கட்டி முடித்த ஆண்பறவைகள் பாடத் தொடங்கும் போதுதான், கூடுகளைக் கட்டி முடிக்காத ஏனைய ஆண்பறவைகள் போருக்குக் கிளம்புகின்றன. எப்படியும் ஒரு சில மணி நேரத்தின் பின்னர் சமாதானமும் ஏற்பட்டுவிடும்.

ஆண்-பெண் இருபறவைகளும் அடை காப்பதில் முறை வைத்துக் கொள்ளும். குஞ்சு பொரித்ததும் ஆண் பறவையின் சிவந்த மார்பு-வயிற்றுப் பகுதி நிறம் மங்கி ரோஸ் வர்ணமாக ஆரம்பிக்கும்.

காதல் கீதம் பாடும்போது மட்டும் ஆண்பறவையின் வயிறு பலூன் மாதிரி ஊதிப் பெருக்குமாம். படத்தில் உள்ள பறவை காதல் கீதம் பாடும் நேரம் பார்த்து கிளிக் செய்துவிட்டார்கள்.

# மறுபடியும்

→ இந்திய அணியின் முன்னாள் கப்டனுக்கு இப்போது நல்ல நேரம். அணி பல சோதனைகளைச் சந்தித்தாலும், அசார் சாதனை படிக்கட்டுக்களில் ஏறிக்கொண்டிருக்கிறார்.

தற்போது விளையாடிக் கொண்டிருக்கும் கிரிக்கெட் வீரர்களில் நீண்டகால அனுபவமுள்ள துடுப்பாட்ட வீரர்கள் மூன்றுபேர். சலிம்மாலிக், அசாருதீன், அர்ஜுன ரணதுங்கா.

இன்று களத்தில் உள்ள வீரர்களில் ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்களை குவித்த துடுப்பாட்ட வீரர் என்ற பெருமை அசாருதீனுக்குத்தான். ஏழாயிரம் ஓட்டங்களைத் தாண்டிவிட்டார். இதில் நாலு சதங்களும் அடங்கும்.

உலகில் ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் பட்டியலில் மூன்றாம் இடத்தில் இருக்கிறார். இரண்டாம் இடத்திலுள்ள மியான்டாட்டை ஓரங்கட்டிவிட்டு இரண்டாம் இடத்தை விரைவில் பிடித்துவிடுவார். முதலாம் இடத்தில் இருப்பவர் டெஸ்மண்ட் ஹெயின்ஸ். அவர் குவித்த ரன்கள் எட்டாயிரத்தி 649. அச் சாதனையை முறியடித்தால் அசார்தான் ஜாம்பவான். டெஸ்ட் போட்டிகளில் 19 சதங்கள் உட்பட ஐயாயிரம் ஓட்டங்களை தாண்டியுள்ளார்.





# 21வது பிறந்தநாள் வாழ்த்து





## செல்வி ஜி.ரி. அஞ்சலா (அஞ்சு)

கொழும்பைச் சேர்ந்த ஞானரட்னம்- கரோலினா தம்பதியினரின் கனிஷ்ட புதல்வி அஞ்சலா தனது 21வது Key பிறந்த நாளை 02.10.97 அன்று தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்.

இவரை இலங்கை, இலண்டன், கனடாவிலிருக்கும் அன்பு டடி, மம்மி, பாசமிகு அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கைமார், அத்தான்மார், அண்ணிமார், மருமகள்(ன்)மார், அம்மம்மா, அங்கிள்மார், ஆன்டிமார், மச்சான்(ள்)மார், மற்றும் இலங்கை, இலண்டன், கனடா, அமெரிக்கா, சுவிடன், இத்தாலி, சுவிஸ், ஓமான், ஜேர்மனி, ஃபிரான்ஸ், சவுதி, அவுஸ்திரேலியா, ஹொங்கொங் தோழர்கள், உற்றார், உறவினர்கள், அனைவரும் எல்லாம் வல்ல இயேசுகிறிஸ்துவின் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டுகாலம் நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: பெற்றோர்.

# இரை

↓ மேற்கு அவுஸ்திரேலியாவில் குவின்ஸ்லாந்தில் கெயென்ஸ் முதலைப் பண்ணை ஒன்றுள்ளது. இங்கு பல்லாயிரக் கணக்கில் முதலைகள் வளர்க்கப்படுகின்றன. அப்பிரதேசத்திலுள்ள நீர்நிலைகளிலிருந்து பிடித்து வரப்படும் முதலைகள் இப்பண்ணையில் வளர்கின்றன.

இருபது அடி நீளம் வரை வளரக்கூடிய முதலைகள் அவற்றின் பருமனான 1000 இறாத்தல் எடையுடன் கூடிய உடலுடன்-மிகச் சிறிய கால்களால், மிக வேகமாக குதிரையின் வேகத்துடன் ஓடக்கூடியவை என்பது ஆச்சரியம் உண்மை. முதலைகள் கடலிலும் நன்னீர்ச் சுனைகளிலும் இவை வாழக்கூடியன.

இவை மழை காலத்தில்தான் இணை சேரும். பெண் முதலை ஒரே தடவையில் 50 முட்டைகளை இடும். மூன்று வருடங்களில் 6 அடி நீளம் வளர்ந்து விடும். இப்பருவத்தில் இவற்றைப் பிடித்துக் கொன்று தோலை உரித்தெடுக்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளுக்கு முக்கியமாக ஃபிரான்ஸுக்கு அவுஸ்திரேலியா வருடமொன்றுக்கு 5000 முதலைத் தோல்களை அனுப்பிவைக்கிறது. பாரிஸில் முதலைத் தோலாலான கைப்பை ஒன்று பத்தாயிரம் டொலருக்கு விலை போகிறது.

படத்தில் காணப்படும் இரு முதலைகளும் 22 வயதைப் பூர்த்தி செய்துவிட்டன. இவை ஒவ்வொன்றும் 700 இறாத்தல் எடைகொண்டவை. நீளம் 13 அடி. பல கோழிகளை ஒன்றிணைத்து உணவாக வீசும்போது அவற்றை 'லபக்' என்று பிடித்துச் சுவைத்து உண்கின்றன.

முதலைகள் உணவு கிடைக்காவிட்டால் மிகுந்த அட்டகாசம் பண்ணுவதுடன் பயங்கரமானவையாகவும் மாறிவிடுமாம். அந்த நேரத்தில் மாட்டிக்கொண்டோமானால் 'லபக்'தான்.





படிப்பகம்